எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 02 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | அக்டோபர் 2025

கட்டுரை

சீனாவின் ஒரே பெண் பேரரசி: வூ ஸெதியான் *(Wu Zetian)*
- அண்ணாமலை சுகுமாரன்

பெண்களால் கட்டப்பட்ட வாட்டர்லூ பாலம்
- முனைவர் தேமொழி

மீயடுப்பு மீதிலே
- வித்யா மனோகர்

கதை

கொடி வணக்கம்
- அ. சுகந்தி அன்னத்தாய்

கவிதை

வானவில் வாழ்க்கை
- சக்தி சுரேஷ்

துரத்தும் பாம்புகள்
- அ.ஈடித் ரேனா

தொடர்கதை

1.Aranyeni
- *Vijeni*

2.தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி

இன்னும் பல..

இராஜேஸ்வரி அம்மன் தங்க சிலை மற்றும் கோபுரம்

மலர் -2 இதழ் - 02 அக்டோபர் 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

கவிதைகள்

1. வானவில் வாழ்க்கை — 2
   - சக்தி சுரேஷ்
2. கவிதை — 16
   - புனிதா, கோவை
3. கவிதை — 20
   - சோமசுந்தரி
4. பெண் நினைத்தால் — 28
5. கவிதை — 43
   - புனிதா, கோவை
6. கவிதை — 63
   - முனைவர். பெ.பகவத்கீதா
7. கடல் கல்வி — 71
   - இரம்யாநடராஜன்
8. துரத்தும் பாம்புகள் — 77
   - அ.ஈடித் ரேனா
9. புதிய விதி — 92
   செ. ராஜேஸ்வரி

கதைகள்

10. கொடி வணக்கம் - சிறுகதை — 7
    - அ. சுகந்தி அன்னத்தாய்
11. இருவர் — 21
    - சத்யபிரபா
12. விடுதல் — 42
    - சசிகலா விஸ்வநாதன்

நூலாய்வு

13. உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள் — 11
    - டாக்டர் புதேரி தானப்பன்
14. மீயடுப்பு மீதிலே — 29
    - வித்யா மனோகர்

கட்டுரைகள்

15. தாசி குலத்தில் ஒரு தியாகத் தாய் - குஞ்சாரம்மாள் — 17
16. *This is a Lady Like No Other* — 19
    - *Karthik Balachandran*
17. அது கட்டிடமல்ல; பெருந்தாயின் கண்ணீர் காவியம் — 26
    - வே. மதிமாறன்
18. ஆளுமைத்திறம் ஓங்கி வாழ்க! — 35
    - முனைவர் இல. ஜெயந்தி
19. பதிகம் தந்த பைந்தமிழ்ப் பாவை : காரைக்கால் அம்மையார் — 48
    - மு. பழநிச்சாமி — 24
20. கதர் ஆடையும் பெண்களும் — 55
    - முனைவர் எஸ். சாந்தினிபீ
21. இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில் — 64
    - சி. அபிஷேக்
22. பெண்களால் கட்டப்பட்ட வாட்டர்லூ பாலம் — 72
    - முனைவர் தேமொழி
23. அய்யாலசோமயாஜுல லலிதா இந்தியாவின் முதல் பெண் பொறியாளர் — 83
    - மேனகா நரேஷ்
24. சீனாவின் ஒரே பெண் பேரரசி: வூ ஸெதியான் *(Wu Zetian)* - ஒரு வரலாற்றுப் பார்வை — 87
    அண்ணாமலை சுகுமாரன்
25. எம். எஸ். சுப்பு லட்சுமி..... — 90

நேர்காணல்

26. நளினி சுந்தரராஜன், விஸ்கான்சின், வடஅமெரிக்கா — 93
    - மேனகா நரேஷ்

தொடர்கதை

27. தைரிய லக்ஷ்மி — 57
    - வை.மு.கோதைநாயகி அம்மாள்
28. *ARANYANI* — 78
    - *VIJENI*

வானவில் வாழ்க்கை

எங்க அப்பா எனக்கு ஒரு
காகிதம் கொடுத்தார் அதில்
ஒரு அழகான பட்டம் செய்தேன்
அந்தப் பட்டத்திற்கு பிடித்த மாதிரி
வர்ணம் தீட்டினேன்
அதற்கு பெரிய வால் ஒட்டுனேன்
பட்டத்தை உயர உயர பறக்க விட்டேன்
பறக்கிற அழகைப் பார்த்து ரசித்தேன்
எல்லோரும் அந்த பட்டத்தின்
அழகை ரசித்துப் பேசும் போது
மிகவும் மகிழ்ந்து போனேன்
அதன் உயரத்தை ரசிக்கும் போது பெருமைப்பட்டேன் - அந்தப் பட்டம்
எப்போதும் என்னுடனே இருந்தது
அதை இன்னும் அழகாக்க
இன்னும் உயரமாக பறக்க
நீள நீளமாய் கயிறு இணைத்தேன்
வானத்தில் மற்ற பட்டங்களுக்கு
மத்தியில் அழகாய் கம்பீரமாய்
பறந்தது - கண்டு களித்திருந்தேன்
ஒரு நாள் வானத்தில்
பறந்து கொண்டிருந்த
என் பட்டம் பக்கத்திலிருந்த
பட்டத்தோடு சேர்ந்து பறந்தது
பார்க்க அழகாய் இருந்தது
பின்பொரு நாள் அந்த பட்டத்துடன் பின்னிக்கொண்டது
பிரிக்க மனம் இல்லாமல்
என் பட்டத்தின் கயிற்றை
வெட்டி விட்டேன்
கை வெறுமையானது
கையை விரித்து பார்த்த பொழுது
பழக்கமில்லாத பக்கத்து பட்டத்தின்
கயிறு என் கைக்கு வந்தது
பழக்கமில்லாத கயிறு
கையை லேசாக உரசுகிறது
விடவும் மனசில்லை
கையிலேயே உள்ளது
புதுக்கயிறு பழக வேண்டும்
இரு பட்டமும் இணைந்து இப்போது
அழகாய் பறந்து கொண்டிருக்கிறது
ஆனால் என் பட்டம் மட்டும்
என் கண்ணை நிரப்புகிறது
கைக்கு வருமா என்று தெரியவில்லை
இருப்பினும் அது இணைந்து பறக்கும்
அழகை மட்டும் ரசித்துப்
பார்த்துக் கொண்டே இருக்கிறேன்

-சக்தி சுரேஷ்

வேளாண்மையும் பெண்களும்

த. சங்கமித்ரா தனபதி

பண்டைக் காலத்தில் இருந்தே வேளாண் பொருளாதாரத்தில் பெண்டிர்க்குத் தலைமை இடம் இருந்தது. "ஈட்டி, வேல், கண்டுபிடிக்கப்பட்டதும் வேட்டை ஆணின் தொழில் ஆனது, பெண்கள் உணவு சேகரித்தார்கள். வேட்டையாடுவது விலங்கு வளர்ப்புக்கு கொண்டு சென்றது. உணவு சேகரிப்பு விவசாயத்துக்குக் கொண்டு சென்றது. ஆக பெண்களே வேளாண்மையைக் கண்டுபிடித்தனர். கலப்பையைக் கண்டுபிடித்த பின்னே வேளாண்மை ஆண்கள் தொழிலானது" (தேவி பிரசாத்சட்டோ பாத்தியாயா, 1999:31) இவ்வாறு வேளாண்மை காலப்போக்கில் மாற்றம் பெற்று ஆண்களின் கைக்கு மாறியது. பெண்கள் வேளாண்மையில் தலைமை வகித்ததை அறிவிக்கும் சான்றுக்கும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இதைத் தினைபுனக் காவல் வழி அறியலாம்.

தினைப் புனக்காவல்

குறிஞ்சித் திணையில் தினை வேளாண்மை மிக மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. விதைத்தல், காத்தல், அறுவடைச் செய்தல் என்றும் மூன்று நிலைகளில் காத்தல் தொழிலில் பெண்களும் ஈடுப்பட்டிருந்தார்கள் என்பதைச் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன.

உழவு, விதைத்தல் எனும் இரு தொழில்களும் ஆண்களால் மட்டும் செய்யப்பட்டுள்ளன.

'குறவர் உழாஅது வித்திய பரூஉக் குரல் சிறுதினை' (புறம்: 168)
'தந்தை வித்திய மென் தினை பைபயச்
சிறு கிளி கடிதல்...' (நற்: 306)

'வன்கட் கானவன் மென் சொல் மட மகள்
புன்புல மயக்கத்து உழுத ஏனல்' (ஐங்:283)

'இருங் கல் அடுக்கத்து என்னையர் உழுத
கரும்பு எனக் கவினிய பெருங் குரல் ஏனல்
கிளி பட விளைந்தமை அறிந்தும்' (அகம்: 302)

எனும் பாடல்கள் உறுதி செய்கின்றன.

புன்செய் வேளாண்மையில் காவல் மிகுதியும் வேண்டப்படுகிறது. இந்த காவலும் பகற் காவல் இரவுக் காவல் என்ற இரு நிலைகளில் அமைகின்றது. பகற் காவல் பெரும்பாலும் பெண்டிராய் செய்யப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தில் தினை வரும் எண்பது இடங்களில் ஆண், தினைக் காவல் புரிந்தமை ஆறு இடங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. பெண்கள் தினைப் புனம் காத்தமை இருபத்தொன்பது இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் நாற்பத்து மூன்று இடங்களில் ஆண் காவல், எட்டு இடங்களில் பெண் காவல், இருபத்தாறு இடங்களில் பேசப்பட்டுள்ளன. ஆக ஐம்பத்தைந்து இடங்களில் பெண்கள் காவலில் ஈடுபட்டமை பாடப்பட்டுள்ளது.

‘சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல்
காவல் நீ என்றோளே’ (நற்:389)
‘வளைவாய்ச் சிறுகிளி வினா தினைக் கடீஇயர்
செல்க என்றோளே’ (குறுந்:141)

எனத்தாய் உடன்பாட்டுடன், தாயின் கட்டளையுடன் இளம் பெண்டிர் தினைப்பும் காத்த செய்தி காட்டப்பட்டுள்ளது இவ்வாறே,

‘துய்த் தலைப் புனிற்றுக் குரல் பால் வார்பு இறைஞ்சி,
தோடு அலைக் கொண்டன ஏனல் என்று,
துறு கல் மீமிசைக் குறுவன குழீஇ,
செவ் வாய்ப் பாசினம் கவரும் என்று, அவ் வாய்த்
தட்டையும் புடைத்தனை, கவணையும் தொடுக்க என
எந்தை வந்து உரைத்தனனாக, அன்னையும்,
நல் நாள் வேங்கையும் மலர்கமா, இனி என
என் முகம் நோக்கினள்’ (நற்:206)

எனத் தந்தையும் மகளைத் தினைப்புனக் காவலுக்கு அனுப்பிய செய்தி உள்ளது.

இதைப் போலவே பெண்டிர் மட்டுமே சடங்குகளில் இடம் பெற்ற நிலைகளும் அகநானூறு, (அகம் 201), நற்றிணை (நற்:288), பெண்கள் வேளாண் பொருளாதார மூலவர்களாய் இருந்ததைக் காட்டும் சான்றுகளாய் உள்ளன.

புறநானூற்றின் மூதின் முல்லைப் பாடலில் விதைக் கெனப் பாதுகாக்கப்பட்ட தினைக் கதிர்களை உரலிலிட்டுத் தானியமாக்கி விருந்தினருக்கு உணவு கொடுத்த பெண்ணின் பெருமையைக் காணலாம்.

இப்பாடல் விதைகளைத் தெரிவதும் பாதுகாப்பதும் பெண்களின் உரிமையாய் இருந்ததை காட்டுகிறது.

‘இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்

குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ விலள்; தன்னூர்
வேட்டக் குடிதொறுங் கூட்டு' (புறம்:333)

தன் வீட்டில் இருந்த வரகு, தினை எல்லாம் பரிசிலர்கள் உண்டதால் தீர்ந்து போயின. அம்மனைக்குரியவள், கைம்மாறாக உணவுப்பொருட்களைப் பெற இயலாமையால், கதிரிடத்தே முற்றி உலரி விதைக்காக விடப்பட்டிருக்கும் தினையை விருப்பத்துடன் உரலிலிட்டு இடித்துச் சமைத்து உணவு அளிப்பாளே அல்லாமல், உணவின்றி உங்களை வறிதே போகவிடமாட்டாள். என்று ஆற்றுப்படுத்தும் புலவனைக் காணலாம்.

திருப்பரங்குன்றம் பகுதியில் விளாச்சேரியிலுள்ள அழகு நாச்சியப்பனுக்கு புரட்டாசி மாதத்தில் மழை வேண்டி உழத்தியர்கள் எட்டு நாட்கள் விரதமிருந்து வழிபாடு செய்கின்றார். இந்த எட்டு நாட்களிலும் கோயில் வாசல், ஊர் எல்லை, அய்யனார் கோயில் பகுதிகளில் அழகு நாச்சியாரை வேண்டி மழைப்பாட்டுப் பாடுகின்றனர். இவர்களுள் ஒரு முதிய பெண்பாட, ஒவ்வொரு பாடல் முடிந்தவுடன் பிற பெண்கள் குலவையிடுகின்றனர்.

மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாஞ்
சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே.

(முக்கூடற் பள்ளுபாடல் எண்.30) எனும் பாடல்வரிகளில் மழை வேண்டி மள்ளர்கள் குலவை ஒலி எழுப்பி மழை வரம் வேண்டுதல் பாடல் பாடுவதைக் காணலாம்.

"மந்திரம் வெறும் அறியாமை எனல் தவறு. அது மனோதத்துவ வகையில் செயலுக்கு வழிகாட்டியாயிற்று ஆரம்பகால விவசாயத்திற்கு இன்றியமையாததாயிற்று. தொடக்க

காலத்தில் பெண் பயிர்த்தொழிலை ஆரம்பித்ததால் பெண்ணிற்கு முதலிடம் அளிக்கப் பெற்றது. மழைவளம் ஆகியவற்றை வேண்டிச் செய்யப்படும் சடங்குகளில் அக்காலத்தில் பெண்கள் முதலிடம் பெற்றது இதனாலேயே எனலாம்" என்று கா.சுப்பிரமணியன் விளக்குகிறார். (இலக்கிய வரலாறு)

சமுதாயத் தலைமையை பெண்டிரின் தினைப் புனைக்காவல் பற்றிய சங்கப் பாடல்களும் காட்டுகின்றன. பெண்ணே இன உற்பத்திக்கான முதன்மை ஆதாரம். ஒரு இனத்தின் விருத்தி அவள் மூலமாகவே நடைபெறுகின்றது. எனவே பெண் வளமையின் குறியீடாகவே என்றும் இருக்கிறாள். பெண்ணுக்குப் பயிர்த்தொழிலோடு நெருங்கிய தொடர்பு இருப்பதும் இதனாலேயே.

"மிகவும் பூர்வ காலத்திற்குரிய பழங்குடிகளின் மத்தியில் ஆண்களுக்கு வேட்டைத் தொழில் எவ்வாறோ, அது போலவே எல்லா விவசாய வேலைகளும் பெண்களுடைய ஏகபோகமாகத் திகழ்ந்தது." என.டி.டி.கோசாப்பி கூறுவது மேற்காட்டிய தினைப்புனக்காவல் முதலான சங்கச் சமுதாயச் சூழல்களோடு மிகவும் பொருந்துவதாக உள்ளது.

வளமைச் சடங்குகள் நடைபெறும் எல்லாச் சூழல்களிலும் (இன்றும் கூட) பெண்களே முதலிடம் பெறுவதும் வளமை தொடர்பான வேளாண்மையிலும் அவர்களே முதலிடம் பெற்றிருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கொடி வணக்கம் - சிறுகதை

அ. சுகந்தி அன்னத்தாய்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி

மணி 12.

லட்சுமி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

"அம்மா எந்திரிங்க.. அம்மா எந்திரிங்க.." சின்ன மகள் அவசரமாகத் தட்டி எழுப்பினாள்.

தூக்கம் கலையாமல் புறண்டுபடுத்த லட்சுமியைச் "சீக்கிரமா எழுந்திருங்கம்மா" அவசரப்படுத்தினாள் பெரிய மகள்.

"ஏன்டி தூங்கவிடாம நடுராத்திரியில் இப்படி எழுப்புறீங்க.." முனங்கினாள் லட்சுமி.

"ஒன்றுமில்லை.. எங்களோடு வாங்களேன். உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்" குறும்புடன் சொன்னாள் சின்னவள்.

"என்னவோ பன்னுங்கடி.." என்று செல்லமாகத் திட்டியவாறே படுக்கையில் இருந்து எழுந்தாள் லட்சுமி.

எழுந்தவளின் கண்களைப் பின்புறத்தில் இருந்து தன் கைகளால் மூடியவாறு பூஜை அறைக்கு அழைத்து வந்தாள் பெரியவள்.

"அக்கா! அம்மா கண்ணை இப்போ திற" ஆவலாகக் கூறினாள் சின்னவள்..

லட்சுமியின் கண்களை மெல்ல திறந்தாள் மூத்தவள். அறையின் நடுவில் ஒரு சிறிய மேசை. அதில், அவளுடைய கணவரின் பெரிய உருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. படத்தின் கீழே, இருபுறமும் சிறிய மெழுகுவர்த்திகள் ஆர்ப்பாட்டமில்லாமல் எரிந்துகொண்டிருந்தன. அதன் மிதமான வெளிச்சத்தில், கம்பீரமான கணவரின் முகம், வழக்கம்போல் சாந்தமாகத் தெரிந்தது.

அந்த மேசையின் முன், அவளுடைய இரு மகள்களும் சென்று நின்றனர். அதில் ஒரு சிறு கேக் வைக்கப்பட்டிருந்தது. இரு மகள்களும் அம்மாவின் கைப்பிடித்து கேக்கை வெட்டி,

"பிறந்தநாள் வாழ்த்துகள்மா!" என்று இருவரும் ஒருசேரக் குரல் கொடுத்தனர். வெட்டிய துண்டுகளை ஊட்டிவிட்டு மாறி மாறி கட்டியணைத்து முத்த மழை பொழிந்து கொண்டனர்.

மூத்த மகள், தன் கையில் வைத்திருந்த ஒரு டிஜிட்டல் போட்டோ பிரேமில் ஏதோ காட்டத் தயாராக இருந்தாள். லட்சுமிக்கு ஒரு கணம் என்ன சொல்வதென்று தெரியவில்லை. கண்கள் கலங்கின. அதுவரை அடக்கி வைத்திருந்த ஏதோ ஒன்று தொண்டையை அடைக்க, வார்த்தைகள் வர மறுத்தன.

மூத்த மகள் அந்தப் போட்டோ பிரேமை நீட்டினாள். அது, அவர்கள் அப்பாவின் உருவப்படத்துடன் லட்சுமி மற்றும் இரு மகள்களும் சிரித்தபடி நிற்கும் ஒரு எடிட் செய்யப்பட்ட புகைப்படம். அது, இருபது வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட ஒரு பழைய புகைப்படத்தில், இப்போது வளர்ந்த மகள்களின் உருவங்கள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் இணைக்கப்பட்டு, அழகாக எடிட் செய்யப்பட்டு இருந்தது. அந்தப் படத்தைப் பார்த்ததும் லட்சுமியின் கண்களில் இருந்து மகிழ்ச்சியும் வலியும் கலந்த கண்ணீர்த்துளிகள் ஆறாக வழிந்தன.

"இது எப்படி செஞ்சீங்கடி?" என்று தழுதழுத்தாள்.

"நாங்கதான்மா செஞ்சோம். அப்பா நம்மகூட இல்லன்னு வருத்தப்படாதீங்கம்மா. அவர் எப்பவும்... நம்ம மனசுல இருக்காரு" என்று மூத்த மகள் சற்றும் தயக்கமின்றி நம்பிக்கையுடன் சொன்னாள்.

"ஆமாம்மா.. உங்கப் பிறந்தநாளை அப்பாவோட ஆசீர்வாதத்தோட கொண்டாடணும்னு நினைச்சோம்" என்றாள் சின்னவள்.

லட்சுமி வார்த்தைகளின்றி தன் மகள்களைக் கட்டியணைத்துக்கொண்டாள். அந்த நள்ளிரவு வேளையில், மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், அவர்கள் ஒருவரையொருவர் அமைதியாகத் தேற்றிக்கொண்டார்கள். அந்தப் படம், கடந்த காலத்தின் பசுமையான நினைவுகளையும், நிகழ்காலத்தின் அன்பையும் ஒருசேர உணர்த்தியது.

திடீரென்று லட்சுமிக்குத் தன் கல்லூரித் தோழி சுமதியின் ஞாபகம் வந்தது. தன் மகள்களைப் பார்த்து ஒரு கணம் புன்னகைத்த லட்சுமி. "என் தோழி சுமதிக்கு இந்தப் போட்டோவை அனுப்பணும்" என்றாள். தன் அலைபேசியை எடுத்து, தன் மகளின் துணையோடு, அந்தப் படத்தைப் பதிவிறக்கி, அந்தப் படத்தையும், இன்று நடந்தவற்றையும் விவரித்து சுமதிக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பி ஒரு குரல்பதிவும் இட்டாள்..

நள்ளிரவில் லட்சுமியிடம் இருந்து வந்த அந்தப் படத்தையும் குறுஞ்செய்தியையும் அதிகாலையில் எழுந்தவுடன் பார்த்த, சுமதியின் கண்கள் பனித்தன. காலச் சக்கரம் இருபத்தைந்து வருடங்கள் பின்னோக்கிச் சுழன்றன.

தேசத்தைக் காத்திடும் உன்னதப் பணியில், தன் தந்தையை, சிறுவயதிலேயே இழந்திருந்த லட்சுமி, பாட்டியின் அரவணைப்பிலும், தாயின் பேரன்பிலும் வளர்ந்தவள். கல்லூரி காலங்களில் சுமதியுடன் நெருங்கிய நட்புறவானாள். இளங்கலைப் பட்டப்படிப்பு முடித்த கையோடு, பட்டாளத்து வரன் வர, மனமகிழ்வுடன் மணவாழ்வில் புகுந்தாள்.

வருடங்கள் சத்தமில்லாமல் உருண்டோட, ஒருநாள், பயங்கரவாதத் தாக்குதலில் வீரமரணம் அடைந்தவர்களில் லட்சுமியின் கணவரும் ஒருவர் என்ற செய்தி கிடைக்கிறது. துயரச்செய்தி அறிந்து, அவளைக் காண, சுமதி ஓடோடிச் சென்றிருந்தாள்.

நான்கு வயது மகளுடன், வயிற்றில் நான்கு மாதக் கருவுடன், துயரத்தைச் சுமந்து நின்ற லட்சுமியைக் காணும்போது, சுமதியின் நெஞ்சம் கனத்துப் போனது.

"எனக்கு நேர்ந்த வாழ்க்கையே, என் மகளுக்கும் வாய்த்துவிட்டதேமா" என்று மனம் உடைந்து கலங்கினார் லட்சுமியின் தாயார்.

லட்சுமியின் கணவர் மறைந்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்தன. அவளைக் காண சுமதி சென்றிருந்தபோது, "சுமதி... அரசு கருணை அடிப்படையில் எனக்கு ஒரு வேலை தருவதற்குத் தயாரா இருக்கு. அது, நாட்டிற்காக உயிர்விட்ட என் புருஷனின் தியாகத்திற்கு, அரசாங்கம் தரும் பெரிய அங்கீகாரம். ஆனா, நான் அதை ஏத்துக்க விரும்பல." என்றாள்.

"ஏன் லட்சுமி இப்படி ஒரு முடிவு. யோசித்துத்தான் எடுத்தியா?" என்றாள் சுமதி.

"இதில் யோசிக்க என்ன இருக்கு? நான் வேலைக்குப் போனா, பிள்ளைகளை என்னால நல்லா வளர்க்க முடியாது. அவங்களுக்கு அப்பாவாகவும் அம்மாவாகவும் நான்தான் இருக்கணும்னு நினைக்கிறேன்"

"உன் எண்ணம் சரிதான் லட்சுமி. ஆனால் அரசு வேலையை ஏன் ஏற்க மறுக்கிற?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள் சுமதி.

"என் பிள்ளைகள், வளர்ந்து அவங்க அப்பா மாதிரி நாட்டுப்பற்றுடன், கவுரவமா அதே இராணுவம் தரும் பணியில்போய் சேரணும்னு ஆசைப்படுகிறேன் சுமதி. நான் இப்போ அந்த வேலையை ஏற்றுக்கொண்டால் என் பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடும்.. அந்த ஒரு கனவுக்காக, என் பிள்ளைகளுக்காக, நான் அரசு வேலையைத் துறக்கப்போறேன்.." என்று கனத்தக் குரலுடன் தழுதழுத்தாள் லட்சுமி.

இன்று சுமதி அந்தப் படத்தைப் பார்த்ததும், லட்சுமியின் அந்த வார்த்தைகள் அவளது காதுகளில் இன்னும் ஆழமாக ஒலிப்பது போலிருந்தது. சுமதியின் மனக்கண்ணில் லட்சுமி, தன் பிள்ளைகளுக்காகப் போராடிய ஒவ்வொரு நாளும் நிழலாடியது. பிள்ளைகளுக்காக முதன் முதலாக வாசற்படி தாண்டினாள். அவள் உலகமே அவள் பிள்ளைகள்தான். அவங்களோட தேவைகளைச் சந்திக்க, அவள் யாரையும் எதிர்பார்க்கல. துணிந்து ஸ்கூட்டர் ஓட்டப் பழகினாள்.

சாமான் வாங்க, ஸ்கூலுக்குக் கூட்டிட்டுப் போக, அழைத்து வர என எல்லாத்துக்கும் அவள் பம்பரமாய்ச் சுழலத் தொடங்கினாள்.

ஆண்டுகள் சில கடந்து ஒருமுறை அவள் சுமதியிட்ம் பேசும்போது, "என் பிள்ளைகளுக்கு அவங்க அப்பா மறைந்த செய்தியை இதுவரை தெரியப்படுத்தல. பிள்ளைங்க 'அப்பா எங்கேன்னு' கேட்டா, 'இராணுவத்தில் நாட்டுப்பணி செய்றாரு, நமக்கு நிறைய சர்ப்ரைஸ் கொடுக்கத்தான் அவர் அங்க இருக்காரு'ன்னு சொல்றேன். அவர் உயிரோட இல்லன்னு அவங்களுக்குத் தெரிஞ்சா அவங்க உடைஞ்சிடுவாங்கன்னு பயமா இருக்கு சுமதி.. அவங்க அப்பா ஒரு ஹீரோன்னு அவங்க நம்பணும்னுதான் அப்படிச் சொல்லுறேன். என் நெஞ்சுக்குள்ள ஒரு வலியோடதான் அந்தப் பொய்யைச் சொல்றேன்.

அவங்களுக்கு மட்டுமல்ல. அவர் உயிருடன்தான் இருக்கிறார் என்று என் மனதிற்கும் நான் சொல்லிக்கொள்கிறேன். ஏன்னா சிதைந்த முகத்தோடுதான் அவரைத் தந்தாங்க. ஒருவேளை அது வேறு யாராவது இருக்காதா, என்றாவது ஒருநாள் 'நான் உயிருடன்தான் இருக்கிறேன்' என்று அவரிடமிருந்து போன் வராதா என்று பலமுறை ஏங்குகியதுண்டு," என்ற லட்சுமியின் ஆழ்ந்த பெருமூச்சுடனான வார்த்தைகள் சுமதியைக் கலங்கடித்தன.

மற்றொரு சந்தர்ப்பத்தில் பேசும்போது, "ஒவ்வொரு முறை சுதந்திரத் தினத்துக்கும், குடியரசு தினத்துக்கும் என் பிள்ளைகள், 'அம்மா... எங்க ஸ்கூல்ல கொடியேத்துறாங்க, நீங்க வாங்க'ன்னு கெஞ்சுவாங்க. ஆனா நான் போனதில்ல. என்னால போக முடியல. என் கண்ணு முன்னாடி அந்தக் கொடி பறக்கும்போது... என் புருஷன் மேல போர்த்தியிருந்த அந்தக் கொடிதான் எனக்கு ஞாபகம் வரும். அது ஒரு வீரமரணம், தேசத்தின் தியாகம்... ஆனா, அது என் மனசுல ஒரு பெரிய பாரமா இருக்கு. அந்த வலியோட மீண்டும் போராட எனக்குச் சக்தி இல்ல சுமதி" என்று கலங்கினாள்.

குழந்தைகள் இருவரும் வளர்ந்து, உலகத்தைப் புரிய ஆரம்பித்தபோது, "தனியாளா சமூகத்தை எதிர்நோக்க முதலில்தான் பயந்தேன் சுமதி. பின்நாட்களில் அதுவே எனக்குப் பலமாயிருச்சு. இன்னைக்கு என் பிள்ளைகள் வளர்ந்துவிட்டன. இன்று அவர்களுக்கு அவர்கள் அப்பாவின் தியாகத்தைப் பற்றி சொல்லிவிட்டேன்." என்று தன் மன தைரியத்தைப் பெருமிதமாகக் கூறினாள் லட்சுமி.

தற்போது இருபது வருடங்கள் கடந்துவிட்டன. லட்சுமி வீரத்தாயாய் இருந்து, தனது இரு மகள்களையும் வளர்த்துவிட்டாள். அந்தக் குட்டிப் பெண், இன்று கல்லூரிக்குச் செல்லும் ஒரு இளைஞி. வயிற்றில் இருந்த அந்தக் கரு, இன்று அழகான பள்ளி மாணவி.

இன்று தன் பிள்ளைகள் தந்த பரிசுபுகைப்படம் மற்றும் குறுஞ்செய்தியோடு, அனுப்பியிருந்த, "எனக்குக் கொடுத்த இந்த சர்ப்ரைஸ்... அவங்க அப்பா நம்ம கூடவே இருக்காருன்னு காட்டின இந்தப் படம், எனக்கு அந்தக் கொடி மேல ஒரு புது அர்த்தத்தைக் கொடுத்திருக்கு சுமதி. என் துயரக்கண்ணீர் இப்போ ஆனந்தக் கண்ணீராக மாறி இருக்கு!" என்ற குரல் பதிவைக் கேட்கிறபோது, லட்சுமியின் குரலில் ஒரு புது பலம் இருப்பதை உணர்ந்தாள் சுமதி.

உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்

– டாக்டர் புதேரி தானப்பன்

நூல் பெயர்: உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்
கட்டுரைத் தலைப்பு: வள்ளுவர் கற்பிக்கும் அறிவின் பெருமை.
ஆசிரியர்: முனைவர் செ. இராஜேஸ்வரி
சந்திரோதயம் பதிப்பகம்
தொடர்பு எண்: 7010997639
110 பக்கங்கள்; விலை ₹. 250/-



"குறள் காட்டும் இன்பம்" என்பது இந்த நூலில் ஆறாவது கட்டுரையாக இருக்கிறது. தனிமனித இன்பம், குடும்பத்தினரின் இன்பம், சமூகத்திற்கு இன்பம், உடல் நலமும் இன்பமும், முனிவும் இணைவும், சிற்றின்பம் மற்றின்பம், மெய்யறிவும் இன்பமும் என்னும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உட் தலைப்புகளைக் கொண்டு இக் கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற நூலாக திருக்குறள் திகழ்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தமிழகத்தில் இந்நூலைப் போற்றாத புலவரும் இல்லை; இந்நூற் கருத்துகளைக் கையாளாத நூலும் இல்லை. அவ்வாறே இந்நூல் மொழிபெயர்க்கப்படாத மொழியும் இல்லை.

இன்பம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒரு தன்மையாகும். இந்த இன்பத்தை மனிதனால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். எது உண்மையான இன்பம் என்றால் அறத்தின் மூலம் கிடைக்கக்கூடியதே உண்மையான இன்பம் ஆகும்; மற்றவை யாவும் இன்பம் போல் தோன்றினாலும் அவை இன்பம் ஆகா என்பது வள்ளுவர் கூற்று. இக் கூற்றினைத் தெளிவுபடுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அறம் என்பது சிறப்பையும் கொடுக்கும்; செல்வத்தையும் கொடுக்கும் என்பதையும் அந்த அறமே ஒருவனுடைய தகுதியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதையும் ஒரு குடும்பத்திற்கு குழந்தைகள் மிகவும் இன்றியமையாதவர்களாக விளங்குகிறார்கள்; அவர்களே அக் குடும்பத்தின் இன்பத்தை மிகுதியாக்குகிறார்கள் என்பதையும் திருக்குறள் வாயிலாக ஆசிரியர் எடுத்துச் சொல்லுகிறார்.

இக்காலத்து மக்களில் பலரும் அறத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அறத்தினால் வரும் சிறப்பையும் அறத்தினால் வரும் செல்வத்தையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. பணம் கொடுத்துச் சிறப்பைத் தேடிச் செல்கின்றனர். எந்த வழியில் செல்வம் சேர்ந்தாலும் மகிழ்ச்சியே கொள்கின்றனர். அத்தகையோர் இந்தச் சமுதாயத்தைப் பற்றியும் பொதுநலத்தைப் பற்றியும் கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை. தன்னலமுற்றோரே இச்சமுதாயத்தில் நிறைந்துள்ளனர். அவர்களே இச்சமுதாயத்தை ஆட்டிப் படைப்போராய் விளங்குகின்றனர்.

ஒரு தனி மனிதனுக்கும் குடும்பத்துக்கும் இன்பம் என்பது மிகவும் இன்றியமையாதது. அதேபோல் ஒரு சமுதாயத்திற்கும் அஃது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. ஒரு சமுதாயத்தின் இன்பம் என்பது வறியார்க்கு ஒன்று ஈவதில் அடங்கியுள்ளது. இங்கே கொடுப்போர்க்கும் இன்பம்; பெறுவோர்க்கும் இன்பம். இதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுவதை எடுத்துச் சொல்லி உலகில் உள்ள அனைத்து மதங்களிலும் இது பின்பற்றப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

அதுமட்டுமின்றி இன்பம் என்பது வயிறு புடைக்க உண்ணாமல் குறைவாக உணவு உண்ணுதலாலும் ஏற்படுகிறது என்றும் ஒரு பெண் தன் கணவனிடம் பொய்க் கோபம் கொள்வதிலும் இனிமையான சொற்களைக் கூறுவதிலும் இன்பம் ஏற்படுகிறது என்றும் அந்த இன்பம் மறு பிறவியிலும் தொடரும் என்றும் கூறுகிறார்.

மூன்று வேளையும் மூக்கைப் பிடிக்க உண்பதையும் எந்நேரமும் பணத்தைப் பற்றியே சிந்திப்பதையும் மக்களை ஏமாற்றிப் பணம் சேர்ப்ப்பதையுமே 99 விழுக்காடு மக்களுக்கு வாழ்நாள் நோக்கமாக உள்ளது. இவற்றை யெல்லாம் சிற்றின்பம் என்று பெரியோர் கூறுகின்றனர். வாழ்நாள் முழுவதும் அறச் சிந்தனையுடன் வாழ்க்கை நடத்துவதுதான் உண்மையான இன்பமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்; அதுவே பேரின்பமாகும்.

இவ்வாறு வள்ளுவர் கூறும் இன்பத்தின் பல வகைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது . இன்றைய இளைஞர்கள் இத்தகைய கட்டுரைகளைப் படித்து, வள்ளுவர் கூறும் அறச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதற்கு இந்நூல் வழிவகுக்கிறது..

இந்த நூலின் ஏழாவது கட்டுரையாக , ‘‘திருக்குறள் மொழிபெயர்ப்பில் சமயப் பின்னணி" என்பது இடம்பெற்றுள்ளது. திருக்குறளைப் பலரும் பல மொழிகளில் பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையாக மொழிபெயர்த்துள்ளனர்.

“மொழிபெயர்ப்பு என்பது மூலச் சொற்களை அப்படியே வேற்று மொழிக்குக் கொண்டுவருவது அல்ல; மூல மொழியின் கருத்துக்களைக் கொண்டுவருவது ஆகும்" என்னும் இந் நூலாசிரியரின் கருத்து மிகவும் சரி.

அந்த மொழிபெயர்ப்புகளில் ஒவ்வொருவரும் அவரவரது அறிவுக்கேற்பவும் அனுபவத்துக்கு ஏற்பவும் கலாசாரம், பண்பாட்டுக்கு ஏற்பவும் தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். கடவுள் ஏற்பாளர்கள் ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் கடவுள் மறுப்பாளர்கள் நாத்திகக் கண்ணோட்டத்திலும் மொழிபெயர்த்துள்ளனர். அந்த வகையில் இங்கே, இந்தக் கட்டுரையில் திருக்குறள் மொழிபெயர்ப்பில் அமைந்துள்ள சமயப் பின்னணி குறித்து கட்டுரை ஆசிரியர் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சிறிய அளவிலான, மூன்று பக்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு கட்டுரை. இக் கட்டுரையில், திருக்குறளின் "கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில் உள்ள ‘சேர்ந்தார்’ என்னும் ஒரு சொல்லை மட்டும் இவர் ஆராய்கிறார்.

அதாவது, ஆங்கிலேய மொழிபெயர்ப்பாளர்களான ட்ரூ, ஜி. யூ. போப், எல்லீசு ஆகியோரின் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ள சொற்களை ஆராயும்போது அவற்றில் சமயப் பின்னணியின் தலையீடு இருப்பதாக அம்மையார் கருதுகிறார்.

சேர்ந்தார் என்னும் சொல் நான்கு குறள்களில் வள்ளுவர் கையாள்கிறார். அவை,

1. *“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் " - (குறள் - 3)*
2. *“வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்" - (குறள் - 4)*
3. *“தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார் " - (குறள் - 7)*
4. *“அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார் " - (குறள் - 8)*

என்பனவாகும்.

இந்தச் சேர்ந்தார் என்னும் சொல்லுக்கு ஜி. யூ. போப், எஃப். டபிள்யூ. எல்லீசு, ட்ரூ ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருள் சொல்லுகின்றனர். ஆம்.

‘சேர்ந்தார்’ என்னும் இச் சொல்லுக்கு,
ஜி. யூ. போப் அவர்கள், Gain என்றும்,
எல்லீசு அவர்கள், adore என்றும்,
ட்ரூ அவர்கள், United என்றும்,

மொழிபெயர்க்கிறார்கள் என்பதை அம்மையார் எடுத்துச் சொல்லுகிறார். இந்த ஒவ்வொன்றுக்குமான விளக்கத்தையும் தருகிறார். எல்லீசும் ட்ரூ வும் சமயப் பின்னணி உள்ள பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளனர். ஜி. யூ. போப், சமயப் பின்னணி இல்லாத பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார் என்கிறார் நூலாசிரியர்.

அப் பொருள்களை அம்மையார் விளக்கிச் சொல்வது ஏற்புடைத்து எனலாம். அப் பொருள்களின் மூல வடிவம் இலத்தீன் மொழியில் என்னவாக இருக்கிறது; எபிரேய மொழியில் என்னவாக இருக்கிறது; கிரேக்க மொழியில் என்னவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லுகிறார். அந்த மொழிகளைத் தெரிந்தவர்களால் மட்டுமே இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

திருக்குறளில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அந்த மொழிகளைப் பயின்று மேலும் ஆய்வு செய்ய இக் கட்டுரை ஓர் உந்துதல் சக்தியாக விளங்கும் என்பது திண்ணம்.

இது ஒரு சிறிய கட்டுரைதான். ஆனால் ஆழமான பொருள் பொதிந்த கட்டுரையாக விளங்குகிறது.

அடுத்த எட்டாவது கட்டுரை, "அறிவியல் நோக்கில் காமத்துப்பால்" என்பதாகும். வள்ளுவரின் காமத்துப்பால் என்பது இன்பத்துப்பால் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் காமம் என்ற சொல் இக்காலத்தில் விரும்பத்தகாத ஒரு சொல்லாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் இது ஓர் அழகான சொல்லாகும். இந்தக் காமம் அல்லது இன்பம் அல்லது காதல் இல்லாவிடில் இவ்வுலகு இயங்காது. இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் தோன்றுவதற்கு இந்த இன்பம்தான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. அதனால்தான் ஆண் பெண் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு நமது முன்னோர்கள் சிவலிங்கம் என்னும் உருவ வழிபாட்டை நாம் வணங்கும் கடவுளாக வடிவமைத்துள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும்.

இந்நூலாசிரியர் முனைவர் இராசேசுவரி அம்மையார் பேராசிரியராகப் பணியாற்றியவர்; நிறைய கட்டுரைகளை எழுதியுள்ளார்; நல்ல கவிஞராக விளங்கும் இவர், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்; பல ஆங்கிலக் கவிதைகளை மோழி பெயர்த்திருக்கும் இவர், பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கடந்த இரண்டாண்டுகளாக, "தமிழணங்கு" என்னும் மாத இதழைச் செவ்வனே நடத்திவருவதோடு, "சக்தி" என்னும் இணைய இதழையும் நடத்தி வருவதனால் இதழாசிரியராகவும் விளங்குகிறார். பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்; இவை அனைத்தையும் கடந்து இவர் ஒரு சோதிடராகவும் திகழ்கிறார் என்பது சிறப்பு.

இத்தகைய சிறப்பான தகுதிகளுக்கு ஆரம் அணிவித்து அழகு படுத்துவதுபோல பல விருதுகளும் இவரைத் தேடி வந்து அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

அம்மையார், இக்கட்டுரை தொடர்பாக, "உளவியல் அறிஞர்களின் கருத்துகளையும் சுரப்பிகளின் செயற்பாடுகளையும் அவற்றிற்கேற்ப உள்ள திருக்குறள் காட்சிகளையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுவரை யாரும் காமத்துப்பாலை உளவியல் நோக்கிலும் உடலியல் நோக்கிலும் இவ்வளவு அருமையாக எழுதியதில்லை. திருக்குறளை அறநூலாக மட்டுமல்லாமல் சுரப்பிகளின் அறிவியல் இயல்பை உணர்ந்து அதற்கேற்பத் திருவள்ளுவர் தந்துள்ளார் என்னும் வியப்பான செய்திகளை

எடுத்துரைத்தமைக்கு முனைவர் இராசேசுவரிக்குப் பாராட்டுகள்" என்று இலக்குவனார் திருவள்ளுவன் தனது அணிந்துரையில் பாராட்டுவது சாலப் பொருத்தமாகும்.

பாலியல் வக்கிரத்தைத் தடுப்பதில் நமது உடலில் உள்ள ஒருவகைச் சுரப்புகளின் பங்கு என்ன என்பதை இக்கட்டுரை எடுத்துச் சொல்லுகிறது. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்புக்கும் காதல் நடவடிக்கைகளுக்கும் குறிப்பிட்ட சுரப்பிகளே காரணமாகும்; பாலியல் வக்கிரம், வன்முறை போன்ற செயற்பாடுகளுக்கும் இச் சுரப்பிகளே காரணமாகும்; பாலுணர்வுச் சுரப்பி என்ற சுரப்பு காதல் வேட்கையைத் தோற்றுவிக்கிறது என்னும் அறிவியல் உண்மையை இங்கே நாம் காண்கிறோம். மையல் சுரப்பி என்னும் சுரப்பி சுரக்கும் போது நமக்கு மிகவும் மகிழ்ச்சியான உணர்வு ஏற்படுகிறது என்கிறார். இதைத்தான் தொல்காப்பியர் இயற்கைப் புணர்ச்சி என்றும் மெய்யுறு புணர்ச்சி என்றும் அழைப்பதாக அம்மையார் கூறுகிறார். வள்ளுவரும் இதனையே,

"அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு

என்று கூறுவதாகவும் சொல்லுகிறார். ஆக, பாலுணர்வுச் சுரப்பி, மையல் சுரப்பி, களிப்புச் சுரப்பி, வளர்சிதைச் சுரப்பி, கடத்து அண்ணீரகச் சுரப்பி போன்ற பல்வேறு சுரப்பிகள் மனித உடலில் சுரக்கின்றன என்றும் அச் சுரப்பிகளின் சுரப்பால் ஆண், பெண் உடலில் காமம் தொடர்பான பல்வேறு உந்து சக்திகள் உடலில் ஏற்பட்டு அச் சக்திகளுக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் இந்நூலாசிரியர் எடுத்துச் சொல்வதைக் காண்கிறோம்.

வள்ளுவரின் காமத்துப்பால் ஆண் பெண் உளவியலையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த உளவியலை ஒவ்வொரு தலைவன், தலைவி வாயிலாகவும் நாம் காணமுடியும் என்பதை வெவ்வேறு குறள்கள் மூலம் ஆசிரியர் விளக்கிச் செல்வது பாராட்டக் கூடியதாக உள்ளது. "காதல் என்பது விருப்பத்தின் காரணமாக மனதில் தோன்றி உடம்பில் பரவி உறுப்புகளைத் தூண்டிவிட்டு, கலவியில் நிறைவுறும் ஓர் உணர்ச்சிப் பயணம் ஆகும்" என்ற கருத்துடன் இக்கட்டுரையை முடிப்பது அழகாக உள்ளது.

"வள்ளுவர் காட்டும் காதல் வாழ்க்கை" என்னும் ஒன்பதாவது கட்டுரை பழந்தமிழரின் காதற் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. நமது அக வாழ்க்கையில் நிகழும் ஒழுக்கங்கள் என்னும் செயற்பாடுகளை ஐந்து பெரும் பிரிவுகளாக நமது முன்னோர் பிரித்து, அவற்றை நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பகுத்துள்ளனர்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படுகிறது; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படுகிறது; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படுகிறது; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படுகிறது; வறண்ட நிலம் பாலை எனப்படுகிறது.

அந்தந்த நிலங்களுக்கு எனத் தனித்தனியே மக்களும் அந்த மக்களுக்கான தொழிலும் அவர்கள் வணங்குதற்குரிய தெய்வமும் அவர்கள் உண்ணும் உணவு, பருகும் நீர், அடிக்கும் பறை, இசைக்கும் யாழ், யாழுக்குரிய பண், அந்த நிலங்களுக்குரிய மரங்கள், பூக்கள், பறவைகள் முதலியனவும் விலங்குகளும் ஊர்களும் இன்ன பிறவும் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

திருக்குறளின் காமத்துப்பால் அகவாழ்வைப்பற்றி எடுத்துரைக்கிறது. தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதியாக விளங்கி இது தமிழ் நாட்டு மக்களின் பண்பாட்டை பறைசாற்றுகிறது என்பதை ஆசிரியர் பல்வேறு குறள்களை எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

இப்பகுதியின் 25 அதிகாரங்களையும் அறிஞர் பெருமக்கள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தைந்து அதிகாரங்களாகப் பிரித்துக் காண்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அடுத்து, புணர்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் பபிரிதலின் பால்டும் குறள்களின அதிகாரங்களையும் இருத்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் இரங்கலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஊடலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஐந்தைந்து அதிகாரங்களாக எடுத்துச் சொல்லுகிறார்.

வள்ளுவத்தில் சில குறள்கள் பெண்ணியம் சார்ந்த குரலாக ஒலிப்பதையும் அவற்றுக்குத் தூணாகத் தொல்காப்பியரின் நூற்பாவையும் எடுத்துக் காட்டுவது ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

தானமாகப் பெற்ற
சில சொற்களையும்
கடனாகக் கிடைத்த
பல சொற்களையும்
பலரிடம் களவாடிய
பெருஞ் சொற்களையும்
மனதோர முலையில்
பதுக்கி வைத்திருந்த
சொற் களஞ்சியத்தின்
சாவியை தொலைத்துவிட்டுத்
தேடுபவளைத்
சிறுமதிகாரி
என்பதைவிட
வேறென்ன சொல்வது?

- புனிதா, கோவை

தாசி குலத்தில் ஒரு தியாகத் தாய் - குஞ்சாரம்மாள்

தாது வருடப் பஞ்சம் என்ற பெயரை நாம் கேள்விப்பட்டிருப்போம்...

1875 தொடங்கி 80 வரை தமிழகத்தைப் புரட்டிப் போட்ட பஞ்சம் அது. கண் முன்னே கணவனும், மனைவியும் ஒட்டிய வயிருடன், யார் முதலில் சாகப்போகிறோம் என்று தெரியாமல் ஒருவரை ஒருவர் வெற்றுப் பார்வை பார்த்தபடி படுத்துக் கிடந்த வேதனை மிகுந்த காலம் அது.

பஞ்சம் தந்த பாடங்கள் ஒரு பக்கம் இன்றும் பேசப்பட்டு வருகிறது. அதில் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய கதை குஞ்சரம்மாவினுடையது. குஞ்சரம் தாசி குலத்துப் பெண்மணி. மதுரையில் கொடிகட்டிப் பறந்த தாசி..பெரும் செல்வச் செழிப்பு - மதுரை நகரைச் சுற்றி இருந்த செல்வந்தர்கள் எல்லாம் குஞ்சரத்தின் அழகில் மயங்கிக் கிடந்த காலம் அது. வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ள சந்தில் இருந்த இரண்டு பெரும் வீடுகளும் அவளுடையவை தான். தாது வருடம் துவங்கிய இரண்டாவது வாரத்தில் அந்த முடிவினை எடுத்தாள்.

கொடும் பஞ்சத்தில் மக்கள் கஞ்சிக்கு வழியின்றி, கணக்கின்றிச் சாவதைப் பார்த்து - வேதனையால் துடித்து தினமும் கஞ்சி காய்ச்சி ஊற்றத் துவங்கினாள். பெரும் வட்டையில் காய்ச்சிய கஞ்சியை விசாலமான தனது வீட்டுத் திண்ணையில் வைத்து அவள் ஊற்றும் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீ போல் பரவியது.. வடக்கு ஆவணி வீதியை நோக்கி மக்கள் சாரை சாரையாக வர ஆரம்பித்தனர். இவளுக்கு எதற்கு இந்த வேலை? சொத்தையெல்லாம் விட்டுட்டு தெருவுக்கு வரப்போறா என்று பெருந்தனக்காரர்கள் பேசிக் கொண்டனர்.

அவளின் செய்கை அவர்களை கூசச் செய்தது - ஆனால், கஞ்சி ஊத்தும் செய்தி கேட்டு மக்கள் வந்து கொண்டேயிருந்தனர். அந்தக் கூட்டத்தை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. பரட்டைத் தலையும் எலும்பும் தோலுமாக துணியென்று சொல்ல முடியாத ஒன்று இடுப்பிலே சுற்றியிருக்க குழந்தைகளைத் தூக்கியபடி வரிசை, வரிசையாக வந்து கொண்டிருந்தனர்.

ஒரு வட்டையில் துவங்கியது, மூன்று வட்டையானது, அதற்கு மேல் அதிகப்படுத்த முடியவில்லை. தினமும் ஒரு வேளைக் கஞ்சி ஊற்றப்பட்டது - அந்தக் கஞ்சியை வாங்க,

காலையிலிருந்தே கால்கடுக்க நின்றனர். தேவையின் பயங்கரம் நினைத்துக் கூட பார்க்க முடியாதபடி இருந்தது - ஆனாலும், அவள் அடுப்பிலே விறகுகளைத் தள்ளி தன்னம்பிக்கையோடு எரித்துக் கொண்டிருந்தாள். தாது வருடத்தின் ஆறாவது வாரத்தில் தான் கலெக்டர் கஞ்சித்தொட்டியைத் திறக்க முன் வந்தார்.ஒரு வகையில் அதற்கு குஞ்சரத்தின் செயல்தான் காரணம்..

நகரில் மூன்று இடங்களில் அரசு கஞ்சித்தொட்டியைத் திறந்தது. நகரின் மொத்தப் பசிக்கு குஞ்சரத்தின் அடுப்பே கதி என இருந்த நிலைமை கொஞ்சம் மாறியது.ஆனாலும், தாது வருடம் முழுவதும் குஞ்சரத்தின் அடுப்பு எரிந்தது. பதிமூன்று மாத காலம் எரிந்த அடுப்பு, எல்லாவற்றையும் எரித்தது. அவள் தனது வாழ்க்கை முழுவதும் சேமித்த சொத்துக்களை உலையிலே போட்டாள்.

கல் பதித்த தங்க நகைகள் - வெள்ளி நகைகள் - முத்துக்கள் - காசு மாலை -மோதிரம் - ஒட்டியாணம், தோடு-ஜிமிக்கி எல்லாம் கஞ்சியாய் மாறி தட்டேந்தி நின்ற நீண்ட வரிசைக்கு பசிப்பிணி தீர்த்தது. தொடர்ந்து எரிந்த அடுப்பின் புகையடித்துக் கரி படிந்திருந்த இரண்டு பெரிய வீடுகளும் விற்கப்பட்டு கஞ்சியாய் மாறியது.தாது கழிந்த இரண்டாவது மாதத்தில் அவள் அடுப்பு அணைந்தது.

அவள் ஓட்டு வீட்டிற்குள் படுத்த படுக்கையானான். யாரைப் பற்றிப் பேச - யாரிடமும் எதுவும் இல்லாத கொடும் பஞ்சத்தில் கூட குஞ்சத்தைப் பற்றி ஊரெல்லாம் பேசினார்கள். அவள் முகம் மலர்ந்திருந்தது - தாய்மையின் பூரிப்போடு அவள் படுத்துக்கிடந்தாள். ஒரு நாள் மலர்ந்த முகத்தோடு - விடைபெற்றாள் அந்தத் தெய்வத்தாய் - தங்கள் வீட்டில் நடந்த சாவாகத்தான் நகரவாசிகள் பலரும் பார்த்தார்கள் அவர் இறப்பை.

சின்ன ஓட்டு வீட்டிலிருந்து குஞ்சரத்தாயை வெளியில் தூக்கிய பொழுது வடக்கு ஆவணி வீதி - கொள்ள முடியாத அளவு கூட்டம் நின்றது.கோவில் திருவிழாக்களைத் தவிர மதுரையில் மனிதர்கள் கூடிய மிகப்பெரிய கூட்டம் இது தான் - என்று கலெக்டர் தனது குறிப்பிலே எழுதி வைத்தார். நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் அவளின் ரத்தமென நினைத்து நினைவுகளின் வழியே கட்டிப்புரண்டு கதறியழுதனர்.

அவள், நாதியற்றவர்களின் பெரும் தெய்வமானாள் - எண்ணிலடங்கா மனிதக் கூட்டம் அந்தத் தெய்வத்தை நாள்தோறும் வணங்கிச் செல்ல வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ள உள் சந்துக்கு அலையலையாய் வந்து கொண்டிருந்தது.

அவளுக்கு எதைப் படையலிட்டு வணங்குவது எனத் தெரியாமல் தவித்த பொழுது.. சலங்கையைப் படையிலிட்டு வணங்கி தெய்வமாக்கிக் கொண்டனர்.. மாமதுரை மக்கள்..

This is a Lady Like No Other

Karthik Balachandran .

Muthulakshmi Reddy was born in 1886 in the princely state of Pudukottai in Tamilnadu. Her father was Narayanswami Iyer. Her mother was a Devadasi who, In case you don't know, were women who were ostensibly "dedicated" to temple deities tasked with passing on the baton of the art of dance to the next generation. The grim reality was different. They were often subjected to exploitation and were considered prostitutes by the British government. It was actually worse than prostitution- no one chose to be a devadasi.

The prepubescent girl was initiated into the system by a religious ceremony which ensured her permanent status as a concubine. She would have a male patron, but no rights to his surname or inheritance. Devadasis needn't marry and were called, "Nityasumangali" - meaning immune to widowhood. It was a crass euphemism - after all, you can't become a widow if you aren't married.

Luckily for Muthulakshmi, her father was an academician and a school principal. A sole oasis in an otherwise barren desert. He gave her the power of education. The class in which she studied had 40 boys and 3 girls - separated by a screen. Even then the parents of the boys objected, fearing their "innocent" sons would be ensnared by a prepubescent femme fatale. This may sound absurd, but this was a common trope in those days. One of the teachers resigned in protest. But her father stood with her and provided her a plank.

After attaining puberty, she was home schooled, as was the tradition in those days. She wanted to change not just her destiny, but also those of others. She asked the Maharaja of Pudukottai for funds to study medicine.The stunned Maharaja gave her a princely sum of Rs.150 which was the much needed escape velocity that changed her trajectory.

She became the first woman to enter Madras Medical College. She was studious and bagged several medals. When she wanted to take obstetrics and become a surgeon, the professors were shocked. Surgery with its blood and gore, was considered a man thing then. Nevertheless, with characteristic persistence, she became an obstetrician. She started catering to the elite professionals first. However, a turning point happened soon.

Her sister developed rectal cancer and eventually died. Back then, cancer wasn't known to the public as the emperor of maladies. Those who were unlucky enough to get it were considered doomed. No one wanted to spend on a lost cause. So Dr Muthulakshmi took it upon herself to go to the UK and get trained in Royal Marsden hospital to manage cancer patients. She had a rare combination of strong roots and powerful wings.

She came back to Madras, but faced painful apathy about cancer.

She turned to Women's India Association - which helped fund, the first cancer hospital in Madras - the Adyar Cancer Institute. One day, three girls from Namakkal ran away from the Devadasi system and asked her, "Now what will happen of us? Where will we stay?". She realized the dire problem and set about the long journey that would culminate in their emancipation.

She sheltered them, but not just them. She started the Avvai home. She met Sarojini Naidu and became a nationalist. Realizing the importance of political power, she went on to become the first woman to join the legislative council in British India. She was also the first woman in the world, to become the deputy President of a legislative council.

She met and married Sundara Reddy, with the condition that they will be equals. Dr Muthulakshmi Reddy, faced two simulataneous battles: (i) finding land and funding for the cancer hospital, and (ii) liberation of the devadasis.

For the latter, she had to fight against the likes of Dr Rajagopalachari. In a meeting when a speaker expressed solidarity with her "fallen sisters", she famously thundered, "How dare you call them fallen sisters? Female chastity is impossible without male chastity. The men who exploited them were older and should be held responsible". She knew they weren't "fallen", but "pushed".

To Rajagopalachari and S Satyamurthi, she roared,"If you need someone to preserve the arts and culture, why don't you leave the devadasis and send the women in your home?". The stiff resistance would have wilted a lesser woman, but she was forged in fire. Her efforts bore fruit in both the issues.

The cancer hospital, grew slowly but steadily. She asked everyone who would listen for funds, including King George V. Today it's a world class institute, giving life to many. Her statue stands there, like a guardian angel of the cancer patients. On December 5,1947, at long last, the Madras Presidency passed the bill preventing the dedication of young girls as devadasis.

The laurels followed. She was awarded Padma Bhushan by the Indian government. The Tamil Nadu government has named the pregnancy benefits scheme after her. There is a road in Chennai named after her.

Her story is the triumph of grit over fate. It's a reminder that we can script our own destiny, regardless of where we start. Neither social ostracism, nor the strictures of colonial India could conquer her will. She turned life's proverbial lemons into a lemonade spring, that continues to give even today.

She's the hero, that our daughters need to know about.

பேசுவதற்கு
ஒன்றுமில்லை
எனத் தெரிந்த
பின்னும்...

இயல்பற்ற
ஓர் அன்பை
வெற்று
நம்பிக்கையாக்கி
நெடுங்காலமாய்...

சாலையோர
சுமைதாங்கி
கல்லுக்குள்
மௌனமாய்...
பூத்திருக்கும்
எருக்கம் பூக்களின்
தவம் தான் என்ன?

சோமசுந்தரி.

இருவர்

சதீயபிரபா

ராணி விசிட்டர் என்ற சத்தம் கேட்டு இரண்டாவது மாடியில் ஹாஸ்டல் ரூமில் இருந்து ராணி மடமடவென்று இறங்கி ஓடிப்போனாள். அவள் அப்பாவும் சித்தியும் நின்று கொண்டிருந்தனர். அப்பா இவளை அருகில் அழைத்து தோளில் கை வைத்து அன்பாக நலம் விசாரித்தார். பாக்கெட்டில் இருந்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார். சித்தி இவர்கள் இருவர் முகத்தையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஒரு ஐந்து நிமிடம் அவள் அப்பா பேசி முடித்ததும் சித்தி ' உங்க அப்பா ரொம்ப கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க

வைக்கிறாங்க. நல்லா படி' என்று சலிப்போடு சொன்னாள். அப்பா அவளைத் திரும்பிப் பார்த்த முறைத்தார். பின்பு ராணியின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு வர்றேன்மா என்று சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்.

சட் என்று அந்த இடம் இருள் சூழ்ந்தது. இருட்டில் நடப்பது போலவே அவள் நடந்து தன் அறைக்கு வந்து அப்படியே கவிழ்ந்து படுத்து விட்டாள். சற்று நேரத்தில் அந்த அறைக்குள் நுழைந்த ராதா அவள் முதுகு பக்கமாக குனிந்து அவள் கழுத்தில் முத்தமிட்டு

'என்ன ஆச்சு'

'அப்பா'

ராதா ராணியின் முதுகு பக்கமாகவே கட்டிப்பிடித்து அணைத்துத் தட்டிக் கொடுத்து தூங்க வைத்தாள்.

வெகு நேரம் ராணியைக் கட்டிப்பிடித்தபடியே அங்கு படுத்திருந்தாள் ராதா. இருவரும் இரண்டு ஆண்டுகளாக இப்படித்தான் இணைந்தும் பிணைந்தும் இருக்கிறார்கள்.

ராதாவின் குடும்பம் மிகப்பெரிய குடும்பம். அவள் குடும்பத்தில் ஆண்கள் கூட பெண்களைப் போல அன்பாகவும் அமைதியாகவும் கனிவாகவும் தான் பேசுவார்கள். ஒரு சேலையை அவர்களுக்குக் கட்டி விட்டால் அவர்களின் மீசை இல்லாத மழிக்கப்பட்ட முகங்கள் அப்படியே பெண்களைப் போலவே காட்சி தரும். அவ்வளவு அன்பான குடும்பம். கூட்டுக் குடும்பம். குழந்தைகளோடு சேர்த்து 16 பேர்.

ராதாவுக்கோ ஒட்டு கம்பீரமான ஆணைப் போல் இருக்கணும்னு ஆசை. அதனால் தலை முடியை பாப் செய்துகொண்டு எப்போதும் பேண்ட் ஷர்ட் போட்டு இருப்பாள். இவள் ஒரு லேடிஸ் ஜெம்மில் வேலை பார்த்ததால் அந்த டிரஸ் அவளுக்குப் பொருத்தமாக இருந்தது.

ராதாவின் குடும்பத்தாரும் அவளிடம் இதெல்லாம் கல்யாணம் பேசுகின்ற வரைக்கும் தான். கல்யாணம் பேசியதும் சராசரிப் பெண்ணைப் போல் தலைமுடி வளர்த்து சுடிதார் துப்பட்டா போட வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். சரி என்று சொல்லியபடி இவள் சென்னையில் இப்படி இருந்து வந்தாள்.

ராணிக்கு அம்மா சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். அவள் அப்பா இவளை ஹாஸ்டலில் சேர்த்து நல்ல விதமாக படிக்க வைத்துக் கொண்டிருந்தார். சித்தி கொடுமை கிடையாது. ஆனாலும் அனாதை போன்ற ஒரு தவிப்பு இருந்தது. ராதா அந்த தவிப்பை நீக்கினாள்.

அன்று மாலை இருவரும் வெளியே கிளம்பினர். ராதாவின் பைக்கில் ராணி அமர்ந்தாள். பைக் நிறுத்தும் இடத்தில் ஒரு மோதல். பைக்கை வெளியே எடுத்தவனைப் பார்த்து ராதா கோபத்தில் ஒரு கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினாள். அவன் வண்டியைப் பார்க் பண்ணிட்டு வந்து இவளை ஓங்கி கன்னத்தில் அறைந்து விட்டான்.

இருவரும் கத்திவிட்டனர்.

'பொம்பிளையா லட்சணமா இரு. மரியாதையா பேசு' என்றான்

கருப்பு டி ஷர்ட் போட்டு முறுக்கு மீசை வைத்து போலீஸ்காரன் போல இருந்தான். அவளை இதுவரை யாரும் அடித்தது கிடையாது. அன்பு ஒன்றை மட்டுமே பார்த்து வளர்ந்தவள் ராதா. அவள் பின்னால் உட்கார்ந்த ராணிக்கும் பெரிய அதிர்ச்சி.

இருவரும் சற்று நேரம் அப்படியே நின்று விட்டு பின்பு அந்த காம்ப்ளக்ஸ்க்குள் போய்விட்டார்கள்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு இருவரும் தங்கள் மனதுக்குள் அவனைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தார்கள். ஹாஸ்டலுக்கு திரும்பி வந்ததும் ஒரு பெட்ஷீட்டை எடுத்து கீழே விரித்து ராணி தனியாகப் படுத்துக் கொண்டாள். ராதா கட்டிலில் படுத்தபடி உறங்கி விட்டாள்.

இதன் பிறகு இருவரது வாழ்க்கையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனால் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவில்லை. ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்கவும் இல்லை.

சில மாதங்கள் கழித்து ராதா தன் பெரியம்மா மகள் திருமணத்திற்காக சொந்த ஊருக்குப் போனாள். அந்தத் திருமண கலகலப்பில் வீட்டில் பலரும் பலரது திருமணங்களைப் பற்றி பேசிக்கொண்டே இருந்தார்கள் அவளுக்கு மனதில் ஒரு கிளுகிளுப்பும் உற்சாகமும் தோன்றியது. திருமணம் பற்றி இவர்கள் பேசுகின்ற போதெல்லாம் அவளை அடித்த அந்த மீசைக்காரனின் நினைவு தான் வந்தது.

'இப்படி ஒருவன் முன்பின் தெரியாத பெண்ணை அடிப்பானா? என்ன துணிச்சல் இருந்தால் இப்படி அடித்திருப்பான்? நான் என்ன சொல்லிவிட்டேன்? ஒரு கெட்ட வார்த்தை சொல்லிவிட்டேன். அதற்கு இப்படியா அடிப்பான் ? பொம்பள புள்ளையா லட்சணமாயிரு என்று சொன்னானே' என்று பலவாறாக அவனைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தாள்.

மறுநாள் அவனை அந்தக் கல்யாண வீட்டில் பார்த்து விட்டாள். ஒரே அதிர்ச்சி. அவன் தனக்கு உறவா என்று கூட தெரியவில்லை. அவனோடு ஒரு பெண் இருந்தாள். அவள் அவனது தோளைத் தொட்ட படியே நின்று கொண்டிருந்தாள்.

திருமணம் முடிந்த மறுநாள் இவர்களுடைய குடும்பத்தினர் அவர்களைப் பற்றிய பேசிக் கொண்டிருந்தார்கள்.

இவளுக்கு அவன் யார் அந்த பெண் அவனது மனைவியா? அவன் நமக்கு உறவா? என்று கேட்க ஆசை தான். ஆனால் எப்படி எப்படி கேட்பது? பேசுகின்றவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்களே என்ற அச்சமும் தயக்கமும் ஏற்பட்டது.

பூ தொடுக்கும் தன் அத்தையின் முன் உட்கார்ந்து இரண்டு இரண்டு மல்லிகை மொட்டுக்களாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது சித்தி பெண் 'அந்தப் பெண் மாலினியை நம் அண்ணனுக்கு கட்டி வைக்கலாம். அப்படியே ராதாவை சேகருக்குக் கட்டி வைத்து விடலாம்' என்றாள்.

'ஓ அவன் பேர் சேகரா?'

இவளுக்கும் ஆசை தான் அவனை திருமணம் செய்து கொள்ள; ஆனால் அவளுக்கு நடப்பது எல்லாம் கனவு போல் தோன்றியது

இரண்டு நாட்கள் கழித்து சென்னைக்கு வந்து விட்டாள் இவளைக் கண்டதும் ராணி 'உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லனும். இந்த ஒரு வாரத்தில் நான் தினமும் சேகரைப் போய்ப் பார்த்தேன். நாங்க லவ் பண்றோம். நான் அப்பா கிட்ட சொல்லிட்டேன். அப்பா மட்டும் அடுத்த வாரம் வர்றாங்க' என்றாள்

ராதாவின் முகம் சட் என்று மாறியது 'எந்த சேகர்? யார் சேகர்? யாரைப் பத்தி பேசுற?' என்று முகம் சுண்டிய படி கேட்டாள்.

' அன்னைக்கு உன்னை அடிச்சாரே அவர்தான்'.

'என்னை அடிச்சவன் உன் லவ்வரா? ராணி,

'ஐயோ ராதா நான் எவ்வளவோ தடவை கேட்டிட்டேன். நான் அடிக்கவே இல்லைங்கன்னு சொல்றாரு டி'

'அடிக்கவே இல்லைன்னு பொய் சொல்றவனை நீ லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்க போறியா'

ராணியின் காதலும் கல்யாணமும் ராதாவுக்கு சற்று எரிச்சலாகவும் கோபமாகவும் இருந்தது. ஆனால் தனக்கும் அவனைத் தானே அன்று நம் வீட்டில் கல்யாணம் செய்யலாம் என்றார்கள். ஒரே குழப்பம்

ராதா சேகரைக் கல்யாண வீட்டில் பார்த்ததைப் பற்றி ராணியிடம் எதுவும் சொல்லவில்லை.

'ராதா, இன்னைக்கு ஈவினிங் வா. நாம அன்னைக்கு போனோமே, அதே காம்ப்ளக்ஸ்ல வச்சு தான் அவரை நான் பார்த்தேன். அங்கேயே போவோம். அவர் அங்க என்னைப் பார்க்க வருவார். உனக்கு நான் இன்ட்ரடியூஸ் பண்ணி வைக்கிறேன் வா'. என்றாள்

இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது 'அவனைத்தானே நாம் கல்யாண வீட்டில் அன்று பார்த்தோம். நமக்கு திருமணம் செய்வதாக வீட்டில் சொன்னார்களே. இங்கே இவளை எப்பிடி. பெரிய பொறுக்கியாக இருப்பானோ' என்று நினைத்தபடி மாலையில் ராணியுடன் புறப்பட்டாள்.

ராதா இனி பைக்கை எடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாள் இருவரும் ஒரு 'கேப்' பிடித்து போனார்கள்.

அவனைப் பார்த்ததும் ராணி உற்சாகமாக பேசிக்கொண்டே இருந்தாள். ராதாவுக்கு ஒரு ஹலோ மட்டும் சொன்னான். அன்றைக்கு அடித்ததற்கு ஒரு sorry கூடசொல்லல. அப்படி ஒரு சம்பவமே நடைபெறாதது போல் அவன் ராணியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ராதா சிறிது நேரம் அங்கே உட்கார்ந்து விட்டு பின்பு 'சரி கிளம்பலாம் வா' என்று சொல்லி ராணியை அழைத்துக்கொண்டு வந்து விட்டாள். இவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னை அடிக்காதவன் மாதிரியே நடிக்கிறானே இவனை நம்பி ராணி மோசம் போகிறாளே என்று மனதுக்குள் ஒரு கவலை வந்தது. ஆனால் ராணியோ அவனைப் பற்றி சிலாகித்துக் கொண்டு வந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து ஊரில் தன் பெரியம்மா மகள் கமலாவுக்கு போன் செய்தாள். போன் செய்து சும்மா பேசுவது போலப் பேசினாள் அப்போது அவள் 'எல்லாம்

தெரிஞ்சுக்கிட்டு தானே பேசுற' என்று கேட்டாள். 'உனக்கும் சேகருக்கும் ஜாதகம் பார்த்தார்கள் பொருத்தம் சரியா இருக்குது அதனால கல்யாணம் பண்ணலாம்னு முடிவு பண்ணிட்டாங்க' என்றாள்.

ராதா 'யாரு சேகர்?' என்று கேட்டாள். 'அன்றைக்கு நாம் எல்லாம் பேசிக் கொண்டிருந்தோமே மாலினி. அவளோட அண்ணன். மாலினியை எங்க அண்ணனுக்கு தான் முடிக்க போறாங்க. சேகருக்கு உன்னை கல்யாணம் முடிக்க போறாங்க' என்றாள்.

இவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது இங்கே ராணியையும் திருமணம் செய்யப் போகிறான்

' சேகருக்கு தெரியுமா இந்த கல்யாணம் ஏற்பாடு' என்றாள்.

'ம்ம் நம்முடைய கல்யாண வீடியோவில் உன்னைப் பார்த்துவிட்டு சரின்னு சொல்லிட்டார்.'

ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தாள். உடனே கமலா 'இன்னொரு விஷயம் தெரியுமா ஒரே நாளில் அவுங்க இரண்டு பேருக்கும் கல்யாணம்' என்றாள்.

'அண்ணனுக்கும் எனக்கும்?' என்று ராதா சொன்னாள்.

'.இல்லை இல்லை நம்ம சேகருக்கும் சேகர் தம்பிக்கும்' என்றாள். 'அப்படியா அவருக்கு எங்க பொண்ணு பார்த்து இருக்காங்க?'

சேகரின் தம்பிக்கு கல்யாணமானால் எனக்கென்ன?' என்று மனதுக்குள் தோன்றியது. 'சேகர் ட்வின் பிரதர்ஸ் ராதா. அவங்க அண்ணே ராஜசேகர். இவரு சந்திரசேகர். ரெண்டு பேருக்கும் ஒரே நாளில் கல்யாணம். அவர் சென்னையில் தான் ஒரு பொண்ண லவ் பண்றாராம் ஆனால் வேற ஜாதியாம். அவுங்க அம்மா அப்பா சரின்னு சொல்லிட்டாங்க. அதனால ஒரே நாளில் மூன்று கல்யாணமும் நடக்கப் போகுது .மூணு மண்டபம் பிடிக்கிறாங்க . ஒரே கல்யாணப் பேச்சு தான். சீக்கிரம் வா' என்றாள்.

ராதா ராணியை அழைத்து 'கங்கிறாஜுலேஷன்ஸ்' என்றாள். 'நாம் இருவர். நம் சேகரும் இருவர்' என்றாள். ராணிக்கு ஒன்றும் புரியவில்லை. ராதாவுக்கோ சந்தோஷம் உடலெங்கும் ஜிவ் என்று பரவியது. சேகரைப் பார்க்கனும் எப்படி சம்மதம் சொன்னார் என்று கேட்கனும். அவரிடம் 'சாரி' சொல்லனும் என்று அவள் மனசு கிடந்து துள்ளியது.

அது கட்டிடமல்ல; பெருந்தாயின் கண்ணீர் காவியம்

வே. மதிமாறன்

அர்ஜுமந்த் பானு பேகம் இவர் இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற பெண்மணி. இவரின் பெருமைக்குரிய பெயரை சொன்னால் உலகே அறியும். மும்தாஜ் மஹால். அவரின் கல்லறைதான் தாஜ்மஹால். பேரரசர் ஷாஜகானுடன் திருமணம் முடிந்தபிறகு ஏற்பட்ட உறவல்ல அது. திருமணத்திற்கு முன்பே ஷாஜகான், அர்ஜுமந்த் பானு பேகத்தின் உறவினர்தான்.

மும்தாஜ் மஹாலின் அத்தை மெஹர் ஆல்-நேசா, ஷாஜகானின் தந்தை பேரரசர் ஜஹாங்கீரை மணந்தார். அவரை மணந்த பிறகு, அந்த அத்தை நூர் ஜஹான் ஆனார். 'பெண்கள் வெளி உலகிற்கே வரக்கூடாது' என்ற இறுக்கமான காலக்கட்டத்தில இந்த நாட்டையே கட்டி ஆண்ட நூர் ஜஹான்தான் மும்தாஜின் அத்தை.

ஆனால், அத்தையின் மகனால்ல ஷாஜகான். ஷாஜகானின் தாய் பேரரசி ஜகத் கோசைன். பிறப்பால் இந்து சமூகத்தைச் சேர்ந்த ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தவர்.

ராஜா உதய் சிங்கின் மகள். அவரின் மகன்தான் ஷாஜகான். இப்படியும் சொல்லலாம், உதய் சிங்கின் பேரன்தான் ஷாஜகான்.மும்தாஜ் ஆக அறியப்படுகிற அர்ஜுமந்த் பானு, ஷாஜகானின் இரண்டாவது மனைவி. ஷாஜகானுக்கு பல மனைவிகள் இருந்தாலும்; நூர் ஜஹானுக்கு முக்கியத்துவம் கொடுத்த தன் தந்தை ஜஹாங்கீரைப் போல், ஷாஜகானும் மும்தாஜை அதிகாரத்தில் அமர்த்தினார். 'அந்தப்புரத்தில், அரண்மனையில் அதற்கும் வெளியையும்கூட; ஷாஜகானுக்கு மும்தாஜ் மீதிருந்த பிரியத்தில் நூற்றில் ஒரு பங்கு கூட மற்ற பெண்கள் மீது ஏற்படவில்லை.

மும்தாஜ் இல்லாமல் ஷாஜகானால் வாழ முடியாது என்கிற நிலையில் அவர் இருந்தார்' என ஷாஜகானின் அரசவை வரலாற்றாசிரியர் இனாயத் கான் 'ஷாஜக கான் நாமா' நூலில் குறிப்பிடுகிறார். மும்தாஜ் ஷாஜகான் பெரும் காதலின் விளைவாக 13 குழந்தைகளை பெற்றெடுக்கிறார் மும்தாஜ். அவர்களின் மூன்றாவது மகன்தான் ஔரங்கசீப். 13ல் 7 குழந்தைகள், குழந்தை காலங்களிலேயே மரணத்து விடுகின்றன. 13 குழந்தைகளுக்குப் பிறகும் பெருக்கெடுத்து ஓடியது பெருங்காதல். 14 ஆவது குழந்தையைப் பிரசவிக்கும்போது பெருக்கெடுத்த ரத்தப்போக்கோடு, 30 மணி நேரப் பிரசவவலியின் வேதனையிலிருந்து விடுதலையை, அந்தத் தாய்க்கு மரணம்தான் தந்தது. 1631 ஜூன் 17 அன்று 14 வது குழந்தையோடு இறந்துபோகிறாள் அந்த மாபெரும் தாய்.

ராஜ உபசாரம், ராஜ வைத்தியம், கடைசிவரை போராடிய பேரரசன் ஷாஜகான் என்ற பெருங்காதலன் இருந்தும்,பிரசவத்தின் மரணத்தைத் தடுக்க முடியவில்லை. 13 முறை பிள்ளைப் பெற்ற பேர் அனுபவமும் பாதுகாக்கவில்லை. ஆனால், இன்றோ மிக எளிய குடுப்பத்தில்கூட பிறப்பில் குழந்தைகளின் மரணத்தையும் பெண்களைப் பிரசவ மரணத்திலிருந்தும் முற்றிலுமாக பாதுகாத்திருக்கிறது நவீன மருத்துவம்.

இப்போதும், 'வீட்டிலிருந்தே பிரசவம் பார்க்கலாம்' என பெண்களின், குழந்தைகளின் உயிரோடு விளையாடும் ஆண்களை எச்சரிக்கிறது பேரரசி மும்தாஜின் பிரசவ மரணம். ஆக்ராவில் பிறந்த மும்தாஜ் புர்ஹான்பூரில் மரணமடைந்தார். அவரின் உடல் புர்ஹான்பூர் தபதி நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டது. 6 மாதங்கள் கழித்து அவர் உடல் ஆக்ராவிற்குக் கொண்டு வரப்பட்டு ஜனவரி 8, 1632 அன்று யமுனை நதிக்கரையில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. அதுவும் நீடிக்கவில்லை. அதன் அருகிலேயே இன்னொரு கல்லறை கட்டி அங்கு மாற்றப்பட்டது. மூன்று முறை அவர் உடல் புதைக்கப்பட்டது.

இறுதியாக புதைக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட அந்தக் கல்லறைக்கு 'ரவுசா-இ-முனவ்வரா' என்று பெயர் வைக்கப்பட்டது. அதுதான் உலகம் வியக்கும் தாஜ்மஹால். இந்தத் தொகுப்பு, தாஜ்மஹாலின் சிறப்புகளை சொல்வதல்ல; அது கட்டுவதற்குக் காரணமாக இருந்த காதலின் வலியைச் சொல்வது.

அர்ஜுமந்த் பானு பேகம் என்கிற மும்தாஜ் மஹால் மரணப்படுக்கையில் இருக்கும்போது தன் கணவரிடம், 'என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணிடமும் குழந்தை பெற்றுக்கொள்ளக்கூடாது எனச் சத்தியம் பெற்றார்' என குறிப்பிட்டிருக்கிறார்

அரசவையின் வரலாற்று ஆசிரியர் இனாயத் கான். 'கனவில் பிரம்மாண்டமான அரண்மனையையும் மிக அழகான தோட்டத்தையும் கண்டேன். என் நினைவாக உலகில் எங்குமே இதற்கு இணையில்லை என்பதுபோல் அப்படியொரு ஒரு கல்லறையை நீங்கள் கட்டவேண்டும்'

எனவும் தன் காதல் கணவன் ஷாஜகானிடம் கடைசி ஆசையைச் சொல்லிப் பிரிந்திருக்கிறாள் பெரும் காதல் கொண்ட அந்த உன்னதப் பெண். ஆக்ரா கோட்டை அரண்மனையில் தன் அறையிலிருந்து, ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவிலிருந்து பார்த்தாலும் பிரம்மாண்டமாக தெரியவேண்டும் என திட்டமிட்டுக் கல்லறையைக் கட்டினான் ஷாஜகான்.

அவன் திட்டமிட்டதுபோலவே அவன் வாழ்க்கையின் இறுதி காலங்களில் நடந்தது. ஏழரை ஆண்டுகள் அரண்மணைச் சிறையில் தன் அறையிலிருந்தபடி காதலியின் கல்லறையை பார்த்துக் கொண்டே இறந்துபோனான் ஷாஜகான்.

தாஜ்மஹால் என்பது கட்டிடமல்ல; தன் கணவன் மீது கொண்ட பெருங்காதலின் காரணமாக, அவனின் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு, அவனுக்காகவே வாழ்ந்து, அவனின் 14 வது பிள்ளையை பெற்றெடுக்கும்போதே,இறந்துபோன பெருந்தாயின் கண்ணீர் காவியம்-

- முகநூல் பதிவு

பெண் நினைத்தால்

மண் நினைத்தால்
இரும்பைக் கூட
துரு ஆக்கும்.....!!!!!
ஒரு பெண் நினைத்தால்
இமயத்தைக் கூட
தூசி ஆக்கிடுவாள்...!!
காற்று இல்லாத
இடம் சூனியம்.....!!!!
பெண் இல்லாத
இடமும் சூனியம்....!!!!
காற்று வெல்லாத
இடமும் இல்லை....!!!
பெண்மை வெல்லாத
இடமும் இல்லை.....!!!!
காற்று நில்லாமல்
உயிரும் இல்லை.....!!!!
பெண்மை இல்லாமல்
உலகமும் இல்லை.....!!!!
விண்ணை அளப்பது
இயலாது.....!!!!
பெண்ணை அளப்பதும் இயலாது...!!!!
எப்பொழுதும்
பெண் மேல் வை
பக்தியடா.....!!!!
தினம் ஏற்றம் பெறும்
புத்தியடா.....!!!!

மீயடுப்பு மீதிலே

வித்யா மனோகரீ
புதுவை

நூல்: மீயடுப்பு மீதிலே
ஆசிரியர்: மகாகவி ஈரோடு தமிழன்பன்
வெளியீடு: ஒருதுளிக் கவிதை (புதுச்சேரி)

மகாகவி ஈரோடு தமிழன்பன் படைத்தளித்திருக்கும் ஈரோ சென்வியம் என்ற புதுவகை யாப்பில் அமைந்துள்ள மீயடுப்பு மீதிலே என்ற நூல் குறித்து சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். முதலில் நூல் பெயர் குறித்தும் நூல் எழுதப்பட்டிருக்கும் யாப்பு வகைமை குறித்தும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் அதன் பிறகு கவிதைகளுக்குள் நுழைந்தால் அவற்றை முழுமையாக இரசிக்க முடியும் என்று நம்புகிறேன்.

மரபு, புதுக்கவிதை, படிமம், குறியீடு, அழகியல், பல்வகைப்பாடுபொருள்கள் மீதான படைப்பாளுமை, ஜென் தத்துவம், சித்தர் சித்தாந்தம் நிரம்பிய படைப்பழகு என்று புதுமையின் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் விளங்குபவர் நம் மகாகவி.


மீயடுப்பு மீதிலே
ஈரோடு தமிழன்பன்
தெளிவாகத் தெரிந்த 2500 ஆண்டுக்கால யாப்பு வரலாற்றில் ஒரு புதிய யாப்பை அறிமுகம் செய்து, அதற்கு இலக்கியமாய் 121 கவிதைகளையும் விருந்தாகப் படைத்துள்ளார் மகாகவி: 'விருந்தே தானும் புதுவது கிளர்ந்த யாப்பின் மேற்றல்லவா?' மொத்தத்தில் நூல் தலைப்பு, புது யாப்பு, நூற்கவிதை என அனைத்திலும் ஒரு புதுமையையும், புரட்சியையும், இளமையையும், முருகியலையும் காண்கிறோம். இதுமாதிரி இன்னும் பல கவிதைகள் கவிதைத் தொகுப்புகள் தோன்றவும், தமிழிலக்கியத்தின் வளம் கூடவும் 'மீயடுப்பு மீதிலே' வழிகோலும்; 'ஈரோசென்வியம்' யாப்பு என்றென்றும் வாழும்.
மருதூர் அரங்கராசன்
ஒருதுளிக் கவிதை
ரூ.200/-

தமிழன்பன் ஐயாஹைக்கூ, லிமரைக்கூ, சென்ரியு, பழமொன்றியுதுளிப்பா, வினாக்களால் அமைந்த பாக்கள், தத்துபித்துவம், சின்கொயன் என்று பல்வேறு புதுப்புது வகைமைகளைத் தமிழில் படைத்து படைப்புலகிற்கு பெருந் தொண்டாற்றி வருபவர். அவ்வகையில் ஈரோசென்வியம் என்ற புது வகை யாப்பையும் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். அவ்வகைமையில் 'துளி!துளி!மழைத்துளி'!

'கப்பரை ஒரு கண்ணில் கலக்கம் இரு கண்ணில்' என்று மேலும் இரு நூல்கள் படைத்தளித்துள்ளார். இந்நூலின் முன்னுரையில் மகாகவி ஈரோசென்வியம் பற்றி பேசுகையில், தமிழ் யாப்பின் தனிச்சிறப்பான எதுகை மோனைகளைப் பயன்படுத்திக் கவிதை நரம்புகளில் ஓசை இன்பத்தைப் புகுத்தியுள்ளேன். எதுகை மோனைகளால் இடரப்படுவதற்கு மாறாக அவற்றின் நுழைவுகளால் திருப்பங்களும் பொருட்போக்கில் அழகு அதிர்வுகளும் கவிதைகள் சந்தித்திருக்கின்றன.

இக்கவிதைகளில் முதல் ஈரடிகள் தேரின் வடம்பிடிப்பது போல் அடுத்து வரும் அடிகளுக்கேற்ற எதுகை மோனைகள் பெற்றோ பெறாமலோ வரலாம். தொடர்ந்து வரும் அடிகளில் கட்டாயமாக எதுகை மோனைக் கட்டமைப்பு இருக்கவேண்டும். கவித்தேர் உருளும் இடங்கள் இவை. இறுதி ஒற்றைவரி தனித்து நிற்பது. தேர்வந்து சேர்ந்து உலா முடிகிற 'நிலை' இது .

குறுந்தேர் ஊர்வலம் இக்கவிதை என்று குறிப்பிட்டுள்ளார் மகாகவி.

யாப்பு வகைமைக்கான பெயர்க் காரணத்தை பேராசிரியர். மருதூர் அரங்கராசன் அவர்கள் இந்நூல் அணிந்துரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூற்றின்படி

'ஈரோசென்வியம்' என்ற பெயரில் ஒரு புது யாப்பைக் கண்டறிந்து, அந்த யாப்பை அடியொற்றி, 121 கவிதைகளை இயற்றித் தனியொரு நூலாகத் தந்துள்ள மகாகவி ஈரோடு தமிழன்பனார் நமது போற்றுதலுக்கும் வணக்கத்திற்குரிம் உரியவர். 'சென்ரியூ' என்னும் ஜப்பானியக் கவிதை வடிவம், அதனை உருவாக்கி அறிமுகப்படுத்தியவரின் புனைபெயரைப் பெற்றதைப் போன்றே மகாகவி ஈரோடு தமிழன்பனார் புதுவதாகக் கண்டறிந்து அறிமுகப்படுத்தியுள்ள இந்தப் புதிய யாப்பு வகையும் 'ஈரோசென்வியம்' எனப் பெயர் பெற்றது எனலாம்.

கவிஞரை வளர்த்த 'ஈரோடு' என்னும் ஊரிலிருந்து 'ஈரோ' என்பதும், கவிஞரை ஈன்றெடுத்த 'சென்னிமலை என்னும் ஊரிலிருந்து 'சென்' என்பதும், சிறப்புமிக்க பெருமைக்குரிய - வியத்தகு கருத்தைச் சொல்வதாகக் கவிதை இருக்க வேண்டும் என்பதால் 'வியம்' என்பதும் எடுக்கப்பட்டு, இணைக்கப்பட்டு 'ஈரோசென்வியம்' என்னும் பெயர் புதுயாப்புக்குச் சூட்டப்பட்டதுள்ளது. 'ஈரோசென்வியம்' என்னும் இப்பெயர் முதலில் 'சென்னிமலையில் பிறந்து, ஈரோட்டில் வளர்ந்து பெருமைக்குரியவராகத் திகழும்' கவிஞருக்கு ஆகி, அடுத்து அவர் புதுவதாகக் கிளந்த யாப்பிற்கு ஆகி வந்தமையால் இதனை 'இருமடியாகுபெயர்' எனலாம். இந்த 'ஈரோசென்வியம்' என்னும் புதிய பாவகை, வெண்பா

ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபா போன்று காலத்தைக் கடந்து வெற்றிநடையிடும் என உறுதியாக நம்பலாம் என்கிறார் பேராசிரியர்.மருதூர் அரங்கராசனார்.

அடுத்து நாம் நூலின் தலைப்பு குறித்த விளக்கத்தைப் பார்க்கலாம். பேராசிரியர். மருதூர் அரங்கராசனார் உரையில்,

ஐம்பதாண்டுகளுக்கு முன்பாகச் சிற்றூர்களில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து நகரப்பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் விறகு வைத்து எரிக்கும் 'சூட்டடுப்பு' அல்லது 'மண்ணடுப்பு' என்னும் ஒருவகை அடுப்பைப் பார்த்திருக்கக்கூடும். மண்ணால் செய்து, நெருப்பால் சுட்டு, அடுப்பங்கரையில் பதித்து, விறகிட்டு எரித்து, சமைக்கப் பயன்படும் அடுப்பையே 'சூட்டடுப்பு' என்று வழங்குவர். இந்தச் சூட்டடுப்பில் இரண்டு அடுப்புகள் இருக்கும். ஒன்று தாயடுப்பு; மற்றொன்று சேயடுப்பு. தாயடுப்பைத் தலையடுப்பு, பெரிய அடுப்பு, முதலடுப்பு, முதன்மையடுப்பு என்றும் வழங்குவர். தாயடுப்பில்தான் விறகைச் செருகி எரிக்க முடியும்; சேயடுப்பில் நேரடியாக விறகைச் செருக முடியாது. தாயடுப்பில் செருகப்பட்டு எரிகின்ற விறகு தருகிற தீயின் வெப்பத்தை உட்புறமாக உள்வாங்கிச் சேயடுப்பும் நமக்காகச் சமைக்கின்ற தொழிலைச் செய்யும். இந்தச் சேயடுப்பைத் துணையடுப்பு, கிளையடுப்பு, பக்க அடுப்பு, இணையடுப்பு, சித்தடுப்பு (சிற்றடுப்பு), கொடியடுப்பு, என்றெல்லாம் வழங்குவர். நேரடியாக விறகை உள்வாங்கக் கூடிய அமைப்பு வசதி வாய்ப்பு மீயடுப்புக்கு இல்லை என்றாலும், தாயடுப்பில் எரிகிற விறகிலிருந்து தீயை வெப்பத்தை உட்புறமாக வாங்கி, அந்த மீயடுப்பும் நமக்காகச் சமைக்கும். மீயடுப்பு மீதிலே இருக்கும் பாத்திரம் வெப்பமுறும்; உள்ளிருக்கும் தண்ணீர் சூடேறும்; உலை கொதிக்கும்; சோறு குழையும்; பால் பொங்கும். அதுபோல இந்தச் சமுதாயத்தில் இருக்கிற அவலங்கள், அவமானங்கள், நல்லது, கெட்டது, பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு. ஆட்சியின் அவலம், ஊழல், கையூட்டு, முறைகேடு, கண்ணீர், கலவரம், வன்முறை, பாலியல் கொடுமை... போன்றவற்றையெல்லாம் நேரடியாகக் களத்தில் நின்று எதிர்க்கும் எதிர்கொள்ளும்களப்பணியாளர்கள்தாயடுப்புப்போன்றவர்கள். இந்தஅவலங்களெல்லாம் நேரடியாகக் களத்திலில்லை என்றாலும், நேரடியாகக் களத்திலிருப்போர் வழியாகப் பெறப்படும் உணர்வுகள் மீயடுப்பு மீதினிலே பாத்திரமாக இருக்கக்கூடிய கவிஞரையும் தாக்குகின்றன; கவிஞரின் உணர்வுகளையும் கொதிப்புறச் செய்கின்றன; மகாகவியின் கவிதைகளை உள்வாங்கிப் படிக்கும் வாசகர்களாகிய நம்மையும் அவை தாக்குகின்றன; அவற்றுக்கு நாமும் எதிர்வினை ஆற்றுவோம். சமுதாய அவலங்கள் ஏற்படுத்திய தாக்கத்திற்குக் கவிஞர் வெளிப்படுத்திய எதிர்வினைகள்தான் கவிதை வடிவில் 'மீயடுப்பு மீதிலே எனும் தலைப்பில் நூலாக மலர்ந்துள்ளது.

நூலின் நிறைவுக் கவிதையாக வரும் 121 ஆவது கவிதை உணர்வுகளை தூண்டும் அற்புதக் கவிதை.

தாயடுப்பு விறகிடத்
தணல் சுரக்கும் வேளையில்

மீயடுப்பும் பற்றுமே
வெப்பமெங்கும் தொற்றுமே
சேயடுப்புத் தூங்குமோ
சீவனுள்ள நெருப்பினால்
போயடுத்துப் பாரடா
பொங்குமந்தச் சோற்றினைப்
போற்றியிசை பாடடா!

என்கிறது கவிதை.

தாயடுப்பு செயலாற்றிக் கொண்டிருக்கும்போது, அதனோடு பங்கு பெறாமல் சேயடுப்பு தனித்து ஓய்ந்திருக்க முடியாது. தாயடுப்பாகவோ சேயடுப்பாகவோ அவலங்களுக்கு எதிர்வினையாற்ற நம்மையும் அழைப்பதைப் போலவே கவிதைகளைப் படைத்துள்ளார் மகாகவி ஈரோடு தமிழன்பனார்.

இனி கவிதைகளைக் காணலாம்.

"எத்தனை மறுத்தும்
ஏன்கடவுள் தடுக்கவில்லை?
எத்தனை தொழுதும்
எதிரிலேன் தோன்றவில்லை?
புத்தன் மனத்திலும்
பூக்காக் கடவுள்தான்
நித்தம் பணிவதால்
நேர்ப்படல் சாத்தியமோ?
நினைத்துப் பார்மனமே!"

இக்கவிதையில் மகாகவி எழுப்பியுள்ள வினாக்களை சற்றே சிந்தித்தால் பல விடைகளை நாம் பெற முடியும்

"ஏதென்சு ஞானிக்கு
நானே இளையவன் என்றிருந்தேன்
வாத வல்லமை
பெற்றிருந்தேன்
மோதிய பேர்களை
முட்டியே சாய்த்திருந்தேன்
ஓதியே உணராத
சாவென்னைத் தூசியாய்
ஊதித் தள்ளியதே!"

ஏதென்ஸ் ஞானியாகிய சாக்ரடீஸ்க்கு இளையவன் நான் அறிவில் உயர்ந்தவன் என்றும், வாதம் செய்து வெற்றி பெறுவதில் வல்லவன் என்றும், உடல் பலத்தால் மற்றவரை எளிதில் முட்டி சாய்க்கும் வலிமை எனக்குண்டு என்றும் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்படியாக

அறிவு வலிமை வாதம் புரியும் வல்லமை, உடல் வலிமை என்று அனைத்து வலிமைகளையும் பெற்றிருந்தாலும் அவையெல்லாம் ஒன்றுமே இல்லை என்று எண்ணும் படியாக துரியாய் என்னை ஊதித்தள்ளுகிறது ஒன்று அது எதுவென்றால் எல்லை இல்லாத ஆற்றல் கொண்ட சாவு மட்டுமே என்று தன்னுடைய ஆற்றாமையை இக்கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார் மகாகவி. மரணத்தை வெல்ல முடியாது. வாழுங்காலத்தில் அகந்தை இல்லாமல் மனிதம் போற்றி வாழ்தலே மனிதர்க்கழகு என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும்.

அடுத்த கவிதை...

"வெற்றியின் சாவிகள்
விலைக்குக் கிடைப்பதில்லை
நெற்றி வியர்வைகள்
நேரிய உழைப்புகள்
முற்றும் வினைத்திட்பம்
மூளும் துவளாமை
பற்றி எரிகையில்
வெற்றி பறித்திடலாம்
வேண்டாமே தாயத்து!"

மூடநம்பிக்கைகளை வேரோடு சாய்க்கும் அருமையான கவிதை இது. வெற்றி என்பது வியர்வை சிந்தி உழைப்பதால் இயல்பாகவே கிடைக்கும் அதை விடுத்து மந்திரம் மாயம் தாயத்து இவை எல்லாம் எதற்கு என்று சாடுகிறார் கவிஞர்.

"வெளிச்சச் சம்பவம்
விண்ணில் நடந்திடும் நேரம்
பளிச்சென் றெழுந்தவன்
திசைகளைப் பற்றவைத்தான்
உளியை எடுத்தவன்
உலகைச் செதுக்கினான்
ஒளியின் பட்டறை
ஓயாதி யங்கியது
சிற்பங்கள் அற்புதமே!"

உற்சாகம் ஊட்டி, உழைப்பை நோக்கி நம்மை உந்தித்தள்ளும் உயர்வான வரிகளிவை. 'பளிச்சென்றெழுந்தவன் திசைகளைப் பற்றவைத்தான் ' எனும் போது நமக்குள் ஒளி ஊடுருவுவதை உணரமுடிகிறது.

அடுத்து மாற்றங்களே நம்மை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடியவை எனவே மாற்றங்களை ஏற்க வேண்டும் என்ற கருத்தில் அமைந்த ஒரு கவிதை.

"நேற்றுப்போல் இருப்பதைப்

பார்க்கவா இன்று நேர்ந்தது?
மாற்றுகள் இல்லையோ
மானுடரே இன்றைக்கும்
தோற்ற மூச்சுகளைத்
தொடர்ந்து சுவாசிப்பதா?
ஆற்றலைக் காட்டினால்
ஆகாயம் மாற்றலாம்
அறிவதைச் சாதிக்குமே!"

நேற்றைய நாளைப்போலவே இன்றும் என்றால் இன்றென்ற ஒன்று எதற்கு என்கிறார் மகாகவி. மூச்சுக்காற்றை உள்ளெழுத்து வெளிவிடும் நொடிப்பொழுதில் கூட பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் நிகழ வேண்டும் என்று ஆவல் கொள்கிறார் மகாகவி. நித்தமும் புதுமை வேண்டும் என்று அவரின் கவிமனம் விரும்புவதை நாம் அறிய முடிகிறது. அறிவின் துணைகொண்டு நாம் சாதிக்க முடியும் என்று நமக்கும் வழி காட்டுகிறார்.

"சொற்களைப் பற்றவை
சுடர்தெறிக்கும் இசைமு ழங்கு!
விற்படை பாட்டிலே
வேற்படை பாட்டிலே
உற்பத்தி ஆகட்டும்
குருதியைக் குளிப்பாட்டும்
கற்பனை எதற்கினி?
களமாடும் இசைவேண்டும்
ஆயுதப் பாடல்செய்!"

பாடல் என்றால் இனி வில்லிலிருந்து புறப்படும் நாணாக இருத்தல் வேண்டும். மெல்ல மனம் வருடும் கற்பனைச் சொற்கள் வேண்டாம். விற்படை, வேர்படைகள் பாட்டிலே உற்பத்தியாகி போர்ப்பரணியாக, களமாடும் இசையாக வேண்டும் என்கிறார் மகாகவி.

இப்படியாக இத்தொகுப்பில் உள்ள 121 கவிதைகளும் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு நூலாக விரியக்கூடிய அளவிற்கு பொருளாழம் மிக்கவை . அக்கம் பக்கத்தின் புன்னகைகள், போராட்டங்கள், கண்ணீர், கலவரங்கள், புரிதல்கள், புரியாமைகள், இறப்புகள், பிறப்புகள் எல்லாமே ஒருவன் மீயடுப்பாக இருக்கும் போதும் அவனுள் வந்து சேர்ந்து தாக்கத்தை அவனிடம் ஏற்படுத்தவே செய்யும் என்று மகாகவி நூல் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதைப் போலவே இக்கவிதைகளை வாசித்த பிறகு நாமும் தாயடுப்பாகவே அல்லது சேயடுப்பாகவோ மாறிவிடுவோம் என்பது திண்ணம். அற்புதமான இத்தொகுப்பைப்போலவே மற்றும் ஒரு நூலோடு உங்களைச் சந்திப்பேன்.

நன்றி!

ஆளுமைத்திறம் ஓங்கி வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி, சென்னை.

ஆளுமைத்திறம் என்பது மனவளம் ஆகும். இதனை அறிவாட்சித் தரம் என்பர். அறிவு ஆட்சி செய்யும் தன்மையைப் பொறுத்து ஆளுமைத்திறம் அமைகிறது.

எண்ணியவர் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையவராக இருக்கப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்." *(திரு. 666)*

நன்மை விளைக்கும் ஊழ் இல்லாதிருத்தல், யார்க்கும் பழி அன்று. அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருத்தலே பழியாகும். (பொறி இன்மை என்பதற்கு உடல் உறுப்பு இல்லாமை என்றும் உரையாசிரியர்கள் பொருள் கூறுவர்.)

'பொறி இன்மை யார்க்கும் பழிஅன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி' *(திரு. 618)*

என திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அறிவாட்சித்தரம்

மூன்று வயது முதல் இன்றுவரை செய்த செயல்கள் எல்லாம் உயிரில் பதிவாகி இருப்பதை, மேலடுக்குப் பதிவுகள் (பிராரப்த கர்மம்) என்பர்.

பெற்றோர் மூலம் பெற்ற மரபு வழிவந்த பதிவுகள் கருவமைப்புப் பதிவுகள் (சஞ்சித கர்மம்) என்பர்.

இவை இரண்டும் சேர்ந்துதான் ஒரு மனிதனுடைய குணநலன் அமைகிறது. இதுவே ஒருவரது அறிவாட்சித்தரம் *(Personality)* ஆகும். அறிவாட்சித்தரம் வலிமையாக இருப்பதே ஆளுமைத்திறமாகும்.

குணநலப் பேறு:

மக்கள் போற்றும் நல்ல குணங்களுடன் வாழ்வது குணநலப்பேறு ஆகும்.

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே. மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று என்பார் திருவள்ளுவர்.

குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத்து உள்ளதூம் அன்று. (திரு. 982)

குணநலன் ஒன்றே தேவை:

மனிதனுக்கு முதன்மையாக தேவைப்படுவது ஒழுக்கமான குணநலனாகும்.

'பணமோ, பெயரோ, புகழோ, கல்வியறிவோ, எதையும் சாதித்து விடாது. ஒழுக்கமான குணநலன் ஒன்றுதான் கடினச் சுவர்களை எல்லாம் பிளந்துக் கொண்டு போக வல்லது. இதை நினைவில் கொள்ளுங்கள்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

குணநலம் பெறும் வழிகள்:

1. தன்னை அறிதல்
2. தன் குறை நிறை உணர்தல்
3. திருத்தம் பெற வழி வகுத்தல்
4. வகுத்த வழியில் வாழ்ந்து காட்டுதல்

தன்னைப்பற்றி ஆராய்ந்து, குறைகளைக் களைந்து, 1. உள்ளதை உணர்தல், 2. நல்லதைச் செய்தல் 3. அல்லதை விடுதல் என அதற்கான வழிகளை எடுத்துரைத்தார் வேதாத்திரி மகரிசி.

உள்ளதை உணர்தல்:

உள் + அதை (இறை) உணர்தலாகும். எங்கும் நீக்கமற நிறைந்து, நமக்குள்ளே உயிராக இயங்கிக் கொண்டிருக்கும் இறையாற்றலை உணர்தலாகும்.

'உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே' (திருமந்திரம் – 431)

என்பார் திருமூலர்.

உள்ளதை உணர்ந்தால் நல்லது நிலைக்கும் அல்லது தானே விலகும்.

நல்லதைச் செய்தல்:

தமக்கும் பிறருக்கும் நன்மை தரத்தக்க செயல்களைச் செய்தல்

ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை. அறத்தை போற்றாமல் மறப்பதைவிட கெடுதியானதும் இல்லை என்பார் திருவள்ளுவர்.

'அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு' (திரு. 32)

மனத்தூய்மையோடு, ஒழுக்கம், கடமை, ஈகையைக் கடைப்பிடித்தலை, வலியுறுத்துதல் காணலாம்.

அல்லதை விடுதல்:

தனக்கும், சமுதாயத்திற்கும் துன்பம் தரும் எண்ணம், சொல், செயல்களைத் தவிர்த்தலாம்.

தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத்தீய செயல்கள் தீயைவிடக் கொடியனவாக அஞ்சப்படும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (திரு. 202)

என்பார் திருவள்ளுவர்.

விலங்கினப் பண்புகள்:

ஓரறிவு முதல் ஐந்தறிவு விலங்கினங்களாகி இறுதியாக ஆறாவது அறிவுடைய மனிதனாக வந்தது வரை, அந்த உயிரினங்களின் தன்மைகள் கருத்தொடராக மனிதன் உயிரில் (கருமையத்தில்) பதிவாகி உள்ளதை, விலங்கினப் பதிவுகள் என்பர்.

அவை, இரண்டறிவு முதல் மற்ற உயிரினத்தை துன்புறுத்தல், கொலை செய்தல், பிறவற்றின் பொருள் பறித்தல், பிறவற்றின் வாழ்க்கை சுதந்திரத்தை அழித்தல் ஆகியன அடங்கும்.

இந்த நான்கு தன்மைகள் விலங்கினங்களிடமிருந்து கருத்தொடராக மனிதனுக்கு வந்துள்ளன. அத்தகைய பதிவுகள் மனிதனிடம் உறக்க நிலையில் இருந்து, காலத்தால் வெளிப்படுகின்றன.

இதனை உளவியலின் தந்தை செக்மண்டுபிராய்டு குறிப்பிடுகையில்

1. விலங்குணர்ச்சி (ID)
2. பண்பாட்டுணர்ச்சி (EGO)
3. மனசாட்சி (Super EGO)

என்று வகைப்படுத்துவார்.

அறிவைக் கொண்டு அவற்றை உணர்ந்து திருத்தி மேன்மை பெறுவதே குணநலப்பேறு ஆகும்.

மூன்று களங்கங்கள்

மனிதன் உயர்நிலை அடையத் தடையாக உள்ளவை மூன்று களங்கங்கள்

தெய்வம் + களங்கங்கள் - மனிதன்
மனிதன் - களங்கங்கள் - தெய்வம்

1. தன் முனைப்பு (ஆணவம்)
2. வினைப் பதிவு (கன்மம்)
3. அறியாமை (மாயை)

இம்மூன்று களங்கங்கள் களையப்பட வேண்டும்.

1. தன் முனைப்பு:

ஒருவன் தன்னை மற்றவர்களோடும், மற்றவைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை உயர்வாகவோ, தாழ்வாகவோ இருப்பதாக நினைத்துக் கொள்வதும், தன்னை இயற்கை மற்றும் சமுதாயத்திலிருந்து வேறுபடுத்திக் கொண்டு முரண்பாடாக வாழ்வதும் தன்முனைப்பாகும்.

மனிதனிடம் உள்ள தன் முனைப்பால், 'தான்' என்ற அதிகாரப் பற்றும், 'தனது' என்ற பொருள் பற்றும் எழுச்சி பெறுகின்றது. 'தான்' என்பது பிறரை அடக்கிஆள வேண்டும் என்ற அதிகார ஆசையாகும் 'தனது' என்பது வாழ்க்கைக்கு இன்பம் தரும் பொருட்களை மேலும் மேலும் சேர்த்துக் கொண்டே இருக்கும் பொருள் பற்று ஆகும்.

ஆறு தீய குணங்கள்:

தான், தனது என்ற பற்றால் ஆறு தீய குணங்கள் உருவாகின்றன. அவை பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை வஞ்சம் என்பவைகளாகும்.

இவற்றை காம, குரோத, லோப, மோக, மத, மார்ச்சரியம் என்பர் வடநூலார்.

இந்த ஆறு தீய குணங்களே, பொய், களவு, கொலை, சூது, கற்பழிவு எனும் ஐந்து பெரும் பழிச்செயல்களுக்கு அடித்தளம் ஆகும்.

உணர்ச்சிவயப்பட்ட நிலையில் செயல்கள் ஆற்றிப் பெறும் பதிவுகளே பழிச்செயல் பதிவுகளாகின்றன.

'விழிப்புநிலையில் ஆறு தீய குணங்கள் எழாமல் அவற்றை முறையே நிறைமனம், பொறுமை, ஈகை, கற்புநெறி, சமநோக்கு, மன்னிப்பு என சீரமைத்துக் கொள்வதே குணநலப் பேறு ஆகும். மனிதனை துன்பம் வராது காக்கும் வழியாகும்.' என்பார் வேதாத்திரி மகரிசி.

எழுவரும் அவர்களுடைய உறவுகளும்:

‘காம உட் பகைவனும், கோப வெங்கொடியனும்
லோப முழுமூடனம், கடுமோக வீணனும்,
கொடுமதம் எனும்துட்ட, கண்கெட்ட ஆங்காரியும்
ஏம அறுமாச்சரிய விழலனும், கொலையென்று
இயம்பு பாதகனுமாய் இவ் வெழுவரும்
இவர்க்கு உற்ற உறவான பேய்களும்
எனைப் பற்றிடாமல் அருள்வாய்’ *(திருவருட்பா. 6)*

என்பார் அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார்

‘மக்கள் விழித்துக் கொண்டிருக்கும் வீட்டில் திருடன் நுழைவதில்லை. அதுபோல நீ எப்போதும் எச்சரிக்கையாகவும் விழிப்போடும் இருந்தால், உனது தூய்மையைக் கொள்ளை கொள்ளக்கூடிய தீய எண்ணங்கள் உன் மனதில் நுழையாது’ என்பார் இராமகிருஷ்ண பரமஹம்சர்.

2. வினைப்பதிவு: (கன்மம்)

எண்ணம், சொல், செயல்கள் மூலம் உணர்ச்சிவயப்பட்டு செயலாற்றி, அவை உயிரில் பதிவாவதே வினைப்பதிவு ஆகும். தக்க விளைவை, தக்க காலத்தில் இடம், காலம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபருக்கு ஏற்ப நன்மை அல்லது தீமையாக வெளிப்படுத்தும்.

‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’
‘ஆங்காரத்தில் செய்தவை சாயங்காலத்தில் விளையும்’

எனும் பழமொழிகள் உணர்த்தும்.

தீமை பயக்கத்தக்க இருவினைகளும். மெய்யுணர்வு பெற்ற அறிஞர்களைச் சேராது என்பார் திருவள்ளுவர்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு *(திரு.5)*

இருவினைகளை நல்வினை, தீவினை என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். அவை பழவினை (சஞ்சிதம், பிராரப்தம்), புகுவினை (ஆகாம்யம்) எனும் இருவினைகளாகும் என்பார் வேதாத்திரி மகரிசி.

செயல் விளைவு நியதி:

‘அறமான செயல் ஆக்கம் தரும். தீயசெயல் கடைசியில் அழிவுக்கே கொண்டுபோம். இம்மண்ணில் பிறந்தவர் அனுபவிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரே சரக்கு அவர்கள் முன்னாட்களில் செய்த செயல்களின் விளைச்சல் தான். இதை சிந்தித்துப் பார்த்தால் எந்த

மதமும் சொல்வது இதைத் தவிர வேறு இல்லை. தீமையை விளக்கி நன்மையைச் செய். இதுதான் மனிதனுக்கு நல்வழிகாட்டும் மதத்தில் அடிப்படை என்பார் ஔவையார்.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தார் சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.' (நல்வழி - 2)

'வெளிப்படையான பாவத்தையும், இரகசியமான பாவத்தையும் நீங்கள் விட்டுவிடுங்கள். ஏனென்றால் எவர்கள் பாவத்தை சம்பாதிக்கின்றனரோ அவர்கள் தங்கள் செய்வினைக்குத் தக்க பலனை அடைந்தே தீருவார்கள்.' என்பது திருக்குர்ரான் வாசகமாகும்.

வினைப் பதிவுக்கேற்ப உடல் பெறுதலும், வினை நீங்கிய பின் உயிர் உடலைவிட்டு பிரிவதையும் பட்டினத்தார் குறிப்பிடுவார்.

'வினைப்போக மேயொரு தேகங் கண்டாய் வினையொழிந்தால்
தினைப்போதளவும் நில்லாது கண்டாய்' (தேகம் -34)

3. அறியாமை: (மாயை)

ஒன்றைப் பற்றிய ஆராய்ச்சியும் தெளிவும் இன்மையைக் குறிப்பதாகும். தன்னைப் பற்றி அறியாமை, இயற்கையைப் பற்றி அறியாமை, நோய், பிணக்கு, தோல்வி இவற்றுக்கான காரணம் அறியாமை, ஒவ்வொரு செயலுக்கும் விளைவுண்டு என்று அறியாமை.

வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல, அறிவுடையவர்க்கு அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை என்பார் திருவள்ளுவர்.

'எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.' (திரு. 429)

'ஒருவன் தான் யார் என்றும், தான் எங்கிருந்து வந்தோம்? அடுத்து எங்கே போகிறோம்? என்றும் தெரியாத நிலையில் அவன் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? இந்த அடிப்படையான அறியாமையால் அவனுக்கு ஆயிரக்கணக்கான துன்பங்கள் ஏற்படுகின்றன' என்பார் சிந்தனையாளர் ஓஷோ.

அறிவின் மயக்கநிலையான அறியாமை நீங்கி தெளிவு பெறுதல் வேண்டும்.

'நான் யார் என்றறியாத மயக்கத்தோடு
நலமறியா புலன் மயக்கம் மாயை ஆகும்.'

என்பார் வேதாத்திரி மகரிசி.

மனிதனாக்கும் கல்வி:

நம் கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென சிந்தனையாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

'நம் கல்வி ஒரு மனிதனை மருத்துவராகவோ பொறியாளராகவோ, ஆசிரியராகவோ உருவாக்குகிறது. ஆனால் மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்குவதில்லை' என ஐ.நா.சபை முன்னாள் பொதுச் செயலாளர் ஊதாண்ட் கூறுகிறார்.

'கல்வியறிவின் பயன் ஒழுக்கமாகும். பல நூல்களைப் பயின்ற ஒருவன் ஒழுக்கமில்லாதவனாக இருந்தால் அவன் கல்வியாளனாகான்' என்பார் திரு.வி.க.

அருட் கல்வி:

கல்வி ஒருவருக்கு மனவலிமை, ஒழுக்கம், அமைதி, நிறைவு அளிக்கும் கல்வியாக இருத்தல் வேண்டும்.

'எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வியே நமக்குத் தேவை' என்பார் சுவாமி விவேகானந்தர்.

'ஒழுக்கமான வீட்டிற்குச் சமமான பள்ளியும் இல்லை. நல்லொழுக்கம் உள்ள பெற்றோருக்கு நிகரான ஆசிரியரும் இல்லை. இந்தக் கல்விமுறை வீட்டிலிருந்தே தொடங்கப்பட வேண்டும்' என்பார் மகாத்மா காந்தியடிகள்.

மனவலிமை:

'சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமடங்கக் கல்லார்க்கு வாய்ஏன்? பராபரமே!'

என்பார் தாயுமானவர்.

நாட்டை ஆளும் அரசனே ஆனாலும் துறவி அஞ்சுவதில்லை.

'துறவிக்கு வேந்தனும் துரும்பு' எனும் பழமொழி துறவியின் ஆளுமைத் திறத்தைக் குறிக்கிறது.

'வலிமையற்றவர்களின் பாதையில் தடையாக நின்ற, கருங் கற்பாறை வலிவுமிக்கோனின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது.'

என்பார் அறிஞர் அண்ணா.

உள்ளதை உணர்ந்து, நல்லதைச் செய்து, அல்லதைத் தவிர்த்து, குணநலப் பேறுடன் ஆளுமைத்திறம் ஓங்கி வாழ்க!

விடுதல்

சசிகலா விஸ்வநாதன்
பெங்களூரு

அந்த இளம் மாணவனுக்கு உறக்கம் வரவில்லை. 'நாளை என்ன நடக்கப் போகிறது? தன்னை ஏன் மடாதிபதி அழைத்துள்ளார்?' என்ற விடை தெரியா வினாக்கள் அவன் மனதில்.

திருவிடை மருதூர் வேத பாட சாலையில் வேத அத்யனனம் முறைப்படி செய்து கொண்டிருந்தான். அனைவரும் போற்றும் வண்ணம் சிறந்த மாணவனாக விளங்கினான்.

பொதுவாக அத்யயன முறைகள் வேதங்களின் மீது ஒருவருக்கு ஆழ்ந்த அறிவையும், புரிதலையும், பக்தியையும் வளர்க்க உதவுகின்றன; ஆயினும், ஞானவானாக இருப்பதை விடவும் சிறந்த கல்விமானாக உயர்வதில் அவனுக்கு சொல்லொணா ஆர்வம். கற்பதில் தேர்ந்தவனாக இருப்பதில் அவனுக்கு அளப்பரிய ஆர்வம். தன்னடக்கத்துடன், ஒழுக்க சீலனாகவும் விளங்க, அதைத் தொடரும் பாராட்டும் அதனால் அவன் மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்தது உண்மை. ஆயினும், அந்தப் பையனுக்கு பெரிய பள்ளியில் ஆங்கில மொழி வழி கல்வி கற்றுத் தேர்ந்து புகழ் பெற்ற பல்கலைகழகத்தில் மேற்படிப்பு மேற்கொண்டு சிறந்த கல்வியாளர் கவோ, அறிவியல் அறிஞராகவோ பரிமளிக்க வேண்டும், என்ற பெரு விழைவு இருந்தது.

அந்தணர் வகுப்பில், வறிய இல்லத்தில் பிறந்த பிராமண சிறுவனால், என்ன செய்ய முடியும்!

கிடைத்த கல்வியை சிறப்பாக கற்றது ;தற்போது அவனை ஒரு இக்கட்டில் நிறுத்தியுள்ளது.

அந்த வயது முதிர்ந்த மடாதிபதி அவனை கூப்பிட்டு அனுப்பியிருந்தார். தன் பெற்றோருடன் அவரது வருகைக்கு மலர்ச்சியுடன் காத்திருந்த நேரத்தில், இனம் புரியாத அச்சத்தின் குறுகுறுப்பு, அவனை கலவரத்தில் ஆழ்த்தியது.

முதிய துறவியார் வந்ததும், அவரை நெடுஞ்சாண் கிடையாக, நிலத்தில் தண்டனிட்டு வணங்கி எழுந்தவனை, பேரன்புடனும் கருணையுடனும் அவனை அங்கு அமரச் சொல்லி பணித்தார்.

அங்கிருந்த வேத பண்டிதர்கள், வேதத்தில் அவனது தேர்ச்சி பற்றி வினாக்கள் எழுப்ப., அவனது விடைகளில் புதிய துறவியார் இறும்பூது எய்தினார். சிறிது நேரத்தில் திருவிடைமருதூரிலிருந்து அவனுக்கு கற்பித்த உபாத்தியாயரும் அங்கு வந்தது, சிறுவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பெரியவர்கள் அனைவரும் சேர்ந்து வெகுநேரம் பேசி முடிந்ததும்; முதிய துறவி அவனை அழைத்து, அவனது மேதமையிலும், நல்லொழுக்கத்திலும், தாம் பூரணமாக மன நிறைவு பெற்றுள்ளதாகவும், வேதத்தில் இன்னும் ஆழமாக அத்யயனம் செய்ய அவனை காசிக்கு அனுப்ப உத்தேசித்து இருப்பதாகவும், பின்னாட்களில் பெரிய பொறுப்புகளை நிர்வகிக்க அவன் தன்னைத் தயார் படுத்திக்கொள்ள சித்தமாக இருக்கும்படி கூறினார்.

அப்போதுதான் அந்த எதிர்பாரா சம்பவம் நடந்தேறியது. அந்த சிறுவன், அவர் காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து, ' ஐயனே! எனக்கு பெரிய பொறுப்பை ஏற்றி நடத்துவதில் ஆர்வம் துளியும் இல்லை. எனக்கு கணக்கும் கணினியும் பொருளாதாரமும் புகழ் பெற்ற பல்கலைகழகத்தில் படித்து தேர்ச்சி பெற மிகவும் விழைகிறேன். அதற்கு தாங்கள் எனக்கு அனுக்ரஹிக்க வேண்டுகிறேன் சிறந்த கல்விமானாக எனக்கு வழி காட்டுங்கள். என் பெற்றோரால் இயலாத ஒன்றை குருவான உங்களிடம் யாசிப்பதில் தவறு ஏதும் இல்லையே.

என் மனம் ஞான மார்க்கத்தை விடவும் கர்ம மார்க்கத்தில் செல்ல விழைகிறது. இது நாள் வரை பயின்ற வேதம்; அதற்கு வழிகாட்டும் ஒளியாக திகழக் கூடும் அல்லவா?" என்று கூப்பி நிற்கும் சிறுவனைக் கண்டு,என்று திகைப்படைந்த துறவி, நீண்டதொரு பெரு மூச்சு விட்டார். ' நாம் ஒன்று நினைக்க நம்பீசன் நினைப்பு வேறாய் இருக்கிறது.' என்று சொல்லி, 'இந்த சிறுவனுக்கு வேண்டிய உதவி செய்யுங்கள்' என்று பணித்தார். கண்ணில் நீர் மல்க நின்றிருக்கும் சிறுவனை, வாத்சல்யத்துடன், ' முழுமையாக கற்று தேர்வாயாக! உனது விருப்பம் சங்கல்பிக்கட்டும்! மனத்துக்கண் மாசற மலர்வாயாக!' என்று

கை உயர்த்தி அனுக்கரஹித்தார்

ஒரு சொம்புநீரை த்தான்
பெருஞ்சமுத்திரமென்றே
நம்பித்தொலைக்கிறது
வாஸ்துக்காக
கண்ணாடிக்குடுவையில் வளர்க்கப்படும்
தங்கமீன்

புனிதா, கோவை

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத் தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200

5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*200*
6.	*பாரதியார்*	*100*
7.	*நவீன மொழி பெயர்ப்பு உத்திகள்*	*200*
8.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	
9.	*மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)*	

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1.	*பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ்*	*200*
2.	*மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு*	*150*
3.	*சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*200*
4.	*ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
5.	*உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
6.	*தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200*	
7.	*கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ)*	*300*
8.	*இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி*	*300*

Other Books

1.	Concepts of Constitution - Dr. S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200
3.	Translating Tamil Poetry - Dr. C. Rajeswari	200
4.	Tie Your Hears with Words - Afrah Fathin F.N.	215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	*பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*250*
11.	*பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)**	*300*
12.	*உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள்*	*200*

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)	*300*
விரதங்களின் விளக்கம்	*200*
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)	*200*
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்)	*200*
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு	*250*
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக்கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*ஆங்கிலத் தேன் கவிதைகள்*	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	*குறுந்தொகைக் கவிதைகள்*	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
2.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
3.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்* (Co-author)	*200*
4.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
5.	*மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு*	*400*

தமிழ் இலக்கண நூல்

1.	*தமிழில் வேற்றுமை உருபுகள்*	*200*

சிறுகதை, கவிதை

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*200*
2.	*ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா*	*200*
3.	*மகிழ் பேரின்பம்*	*200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம்	*200*
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்	*200*
நவரத்தினமும் உபரத்தினமும்	*200*
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்	*200*
கடக ராசியின் சூட்சும ரகசியம்	*200*

மாத இதழ்கள்

1.	*தமிழணங்கு மாத இதழ்*	*200*
2.	Love Thamizh	*500*
3.	*சக்தி (பெண்ணிதழ்*	

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி
Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	200 200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari [Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	200

பதிகம் தந்த பைந்தமிழ்ப் பாவை : காரைக்கால் அம்மையார்

மு. பழநிச்சாமி
நாகமலை, மதுரை–19

'பிறையும் புனலும் அனல் அரவும்' சூடும் சிவபரம் பொருளை ஏத்தி வழிபடும் பெற்றியர்தான் காரைக்கால் அம்மையார். கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று நம்பப்படுகிறது. நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகியோருக்குக் காலத்தால் முற்பட்டவர். இவரை, சுந்தரர் தன் திருத்தொண்டத் தொகையில் 'பேயார்க்கும் அடியேன்' எனக் குறிப்பிட்டுப் பேசுவார்.

திருத்தொண்டத் தொகையைச் சற்று விரித்துப் பாடிய நம்பியாண்டார் நம்பியும் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் இவரைக் குறிப்பிட்டுப் பேசுவார். இதையொட்டி சித்தத்தைச் சிவன்பாலே வைத்துத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமானும் இவர் வரலாற்றை விரித்துப் பாடியுள்ளார். பின்வந்த நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் போன்றோர், பதிகம் பாடுவதற்குப் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கி வைத்த பெருந்தகை தான் காரைக்கால் அம்மையார். அவர் தொடங்கி வைத்த இந்த நீரூற்று, பன்னிரு திருமுறை ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாய், வழிகாட்டியாய் அமைந்து அவர்களைச் சேர்த்து இழுத்து வந்து நீந்தித் திளைக்க வழி வகை செய்தது.

பக்தி இலக்கியம் என்பதோர் புத்திலக்கிய வகையைத் தோற்றுவித்து, இறைவன் புகழை முன்னிலைப்படுத்தி, முதன் முதலில் பதிகம் பாடிய பெருமைக்குரியவர். ஒரு பொருள் குறித்து பத்துப்பாட்டுப் பாடினால் அந்தத் தொகுப்பு பதிகம் எனப்படும். அம்மையார் பாடிய திருவாலங்காட்டுத் திருப்பதிகம்தான் தமிழில் தோன்றிய முதல் பதிகமாகும். எனவே தான் அது மூத்த திருப்பதிகம் எனப் போற்றப்படுகிறது.

ஆதி அந்தாதி தந்த தமிழிசையின் தாய் சைவ பக்தி இலக்கிய மரபினை தோற்றுவித்தவர் என்பதோடு, தமிழிசையின் தாய் என்ற பெருமையையும், புதிய இலக்கிய வடிவங்களையும் யாப்பு வகைகளையும் கையாண்டு, தமிழிலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்ற பெருமையையும் பெற்றவர் கரைக்கால் அம்மையார். இவர் இயற்றிய ஒப்பற்ற அற்புதத் திருவந்தாதி எனும் நூல், அந்தாதி முறையில், வெண்பா யாப்பில் பாடப்பட்ட முதல் நூல் என்பதால் அது ஆதி அந்தாதி என அழைக்கப்படுகிறது.

அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது அந்தாதி. இந்நூல் முதற் பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் முதற் சொல்லாக வருமாறு அந்தாதி முறையில் அமைக்கப்பட்டது. இதன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். இதை முன்மாதிரியாகக் கொண்டு தான் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், கபிலர், பரணர், பட்டினத்தடிகள் போன்றோரின் அந்தாதிகளும் தோன்றி வளர்ந்து செல்வாக்குப் பெற்றன.

போர்க்களத்திலும் இடுகாடு- சுடுகாடுகளிலும் உலவிக்கொண்டிருந்த பேய் மகளிரை, சிவபெருமான் திருக்கூத்தாடும் ஈமக்காட்டிற்கு அழைத்து வந்தவர் அம்மையார். அம்மையார் தொடங்கி வைத்த மேற்குறித்த விவரணைகளின் தொடர்ச்சியாக, 'பேய்மகள் என்ற புலனெறி வழக்கின் அடிப்படையில்' உருவானதோர் புத்திலக்கியம்தான் பரணி எனும் சிற்றிலக்கியம். இதன் அடிப்படையில் தமிழில் முதன்முதலில் எழுந்த பரணி தான் ஜெயங்கொண்டரின் கலிங்கத்துப்பரணி. இப்பரணியில் போர்க்களக் காட்சிகள் பாடத் தளம் அமைத்துத் தந்தவர் அம்மையாரே எனலாம்.

பதிக இலக்கியம், பரணி இலக்கியம், அந்தாதி இலக்கியம், போன்ற இவ்வாறான இலக்கியங்களுக்கு மூலகர்த்தாகவும், சிவஞானச் செந்திருவாகவும், தனித்துவமிக்க பெண்ணரசியாகவும் திகழ்ந்த அம்மையார், தேனூறும் தமிழில் வாயூறப் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அவை :

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 11 பாடல்கள்.

1. மூத்ததிருப்பதிகம் 11 பாடல்கள்.
2. திரு இரட்டை மணிமாலை 20 பாடல்கள்.
3. அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள்.

(11 ±11 ± 20±101=143) இப்பொழுது வழக்கத்தில் உள்ளபடி அம்மையார் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 143 ஆகும்.
இனி இவரது பாடல்களில் உள்ள இடைச் செருகல் பற்றிப் பார்ப்போம்.

அம்மையாரின் ஆளுமையை ஓரம் கட்டும் போக்கு இடைச் செருகல் என்பது, பழமையான தமிழ் நூல்களில், பிற்காலத்தவர் மூலப் பிரதியில் இல்லாத தங்கள் கருத்தைப் பாடலாக்கிப் புனைந்து சேர்த்து விடுவதாகும். இவை பாரம்பரியமாக அந்நூலோடு ஒட்டி உறவாடி வேறுபாடு தெரியாமல் இணைந்தே காணப்படும். கம்பராமாயணம், கோவை கம்பன் கழக பதிப்பில், நூற்றுக்கணக்கான பாடல்களை இடைச்செருகல் என இனங்கண்டு ஒதுக்கி, அவற்றைத் தனிப் பகுதியாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர்.

இது போலவே அம்மையார் பதிகத்தில் திருக்கடைக்காப்பு எனும் பதினோராவது பாடலைப் பாடி இடைச்செருகலாகப் புகுத்தி இணைத்துள்ளனர். அம்மையார் இடுகாடு மற்றும் சுடுகாட்டுப் பேய்களைப் படம் பிடித்துக் காட்டிப் பாடியுள்ளார். இவ்வாறு இவர் பேய்களைப் பாடியுள்ளதால் இடைச்செருகலான இந்த பதினோராவது பாடலில்

'காரைக்கால் பேய்' எனும் தொடரையும் தங்கள் கருத்தாகப் பாடி இணைத்துச் சேர்த்து விட்டனர் எனலாம்.

இடைச் செருகல் என்பதற்குச் சான்றாகக் கொள்ளக் தக்கவை.

1) பத்துப் பாடல்களைக் கொண்டது பதிகம் எனப்படும். "கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு பா-வைத் துரைப்பது பதிகம் ஆகும்". (முத்து வீரியம்). எனவே பதிகப் பாடல்களின் எண்ணிக்கை வரம்பு, பத்து என்பது தெளிவுறும். இந்த எண்ணிக்கை வரம்பை மீறி மூத்த பதிகத்தில் இடம்பெற்றுள்ள பதினோராவது பாடல் அம்மையார் பாடலன்று என்பது புரியும்.

2) அம்மையாருக்குப் பின் வந்த நாவுக்கரசர் பெருமான் தன் பதிகங்களில் 11-வது பாடலாக 'திருக்கடைக்காப்பு' பாடவில்லை. அம்மையார், தன் பதிகத்தில் திருக்கடைக் காப்புப் பாடல் பாடியிருந்திருந்தால் அதையொட்டி நாவுக்கரசர், தன் பதிகப் பாடல்களில் திருக்கடைக்காப்புப் பாடலைப் பாடிச் சேர்த்திருப்பார். எனவே இதையும் ஒரு சான்றாகக் கொள்ளலாம். ஞானசம்பந்தர்தான், முதன்முதலாகத் தன் உயர்வையும் உன்னதத்தையும் குலப் பெருமையையும் பதிகத்தின் பலன்களையும் சுட்டிக்காட்டிப் பெருமை சேர்க்க, 10 எனும் எண்ணிக்கையை மாற்றி, திருக்கடைக் காப்பாக 11-ஆம் பாடலைச் சேர்த்து உலவ விட்டவராவார். இதை அடியொட்டி, பின்வந்த சுந்தரரும் பிறரும் திருக்கடைக்காப்பு எனும் பதினோராவது பாடலைச் சேர்த்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டு விட்டனர்

3) 'சிவகதி' எனும் சொல்லாட்சி, அம்மையாரின் திருக்கடைக்காப்புப் பாடலில் காணப்படுகிறது. ஆனால் அம்மையாரின் பாடல்களில் 'சிவன்' எனும் சொல் ஓரிடத்தில் கூட இடம் பெறவில்லை. எனவே இதையும், இப்பதினோராம் பாடல் இடைச் செருகல் என்பதற்குரிய வலுவான சான்றாகக் கொள்ள முடியும்

மேற்கண்ட இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, இது இடைச்செருகல்தான் என்பது தெள்ளிதின் விளங்கும். அத்துடன் அம்மையார், பதினோராம் பாடலில் இடம் பெற்றுள்ளபடி, தன்னைக் 'காரைக்கால் பேய்' எனக் கூறிக் கொள்ளவில்லை என்பதும் புலனாகும் அம்மையார் பாடல்களின் வைப்பு முறையும் அவரை ஓரங்கட்டும் போக்கும் :

சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர்கள், காலத்தால் முற்பட்ட ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த, காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகத்தையும் அதைச் சேர்ந்த பிற பாடல்களையும் அல்லவா முதல் திருமுறையாக இடம் பெறச் செய்திருக்க வேண்டும். சம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாக்கி அதையொட்டி, பன்னிரு திருமுறைகளையும் தொகுத்துள்ளனர்.

திருமுறைகளைத் தொகுத்தவராகக் கருதப்படும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்பியாண்டார் நம்பி, பதினோராம் திருமுறையில் பலர் எழுதிய நூல்களோடு சேர்த்து, பத்தோடு பதினொன்றாக அம்மையார் பாடல்களை வைத்துள்ளார்.

இடைச் செருகல் பாடல்களில் அம்மையாருக்குப் பேய் என்று பெயரிட்டு, போதாததற்கு அவர் பாடல்களையும் உதாசீனப்படுத்தும் வகையில் 11-ஆம் திருமுறையில் கொண்டு வந்து சேர்த்து வைத்துள்ளனர்.

பெரியபுராணத்திலும் இவரது கதை 24-ஆவது புராணமாக 1717-1782 ஆகிய 75 பாடல்களில் அமையப்பெற்றுள்ளது...

பஞ்சபுராணம் பாடும் மரபு சைவக் கோயில்களில் உண்டு. அவற்றில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருப்பல்லாண்டு (9-ம் திருமுறை) ஆகியன மட்டும் இன்றுவரை பாடப் பெற்று வருகிறது. இம்மரபில் காரைக்கால் அம்மையார் பாடல் இடம்பெறாதது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு, தனித்துவமிக்க பெண்ணரசியாக திகழ்ந்த அம்மையாரின் ஆளுமைப் பண்பையெல்லாம், ஆணாதிக்க மனப்பாங்கினாலோ அல்லது பிறவற்றினாலோ புறந்தள்ளி, பின்னுக்குத் தள்ளப்பட்ட சூழலை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவரைப் பற்றிக் குறிப்பிடுபவர்களில் சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் பிரதானமானவர்கள். ஆணாதிக்க மரபு சார்ந்த இவர்கள் இருவரும் பார்ப்பனர்கள். பார்ப்பனர் அல்லாதவரும், பெண் பிறவிக்கு வீடுபேறு இல்லை எனும் கூற்று நிலவிக் கொண்டிருந்த அக்காலத்துப் பெண்பாற் கவிஞருமாய் இருந்த அம்மையாருக்கு, இவர்கள் இருவரும் உரிய இடம் தராததில் வியப்பு எதுவுமில்லை.

சுந்தரர், தன் திருத்தொண்டத் தொகையுள், மிகச் சாதாரணமான நாயன்மார்களுக்கும் பிறர்க்கும் அடைமொழி தந்து பாடியுள்ளார். காட்டாகக் கூற வேண்டுமானால்,

‘ஒலிபுனல் சூழ்ந்த சாந்த மங்கை நீல நக்கற்கும் அடியேன்
‘இலை மலிந்த
வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்’
‘திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன் தன் அடியார்க்கும் அடியேன்’
‘மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்’
‘கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்’

என்றெல்லாம் அடைமொழி தந்து பாடியுள்ளார்

மூத்த திருப்பதிகம் பாடியவரும் பதிகப் பெருவழி அமைத்துத் தந்த சிறப்பிற்குரியவருமானவர்தான் அம்மையார். அவரைக் குறிப்பிடும் பொழுது, ஊர்ப் பெயரோ, அம்மை என்ற சிறப்பு பெயரோ போன்ற எதுவும் இல்லாமல் மொட்டையாக,

'பேயார்க்கும்' அடியேன்எனும்ஒற்றைச்சொல்லால்சுட்டி, ஓரங்கட்டும்மனோபாவத்தைக் காட்டியுள்ளார் எனலாம்.

சேக்கிழார், தன் பெரிய புராணத்தை, சுந்தரருடைய பாடலையும் நம்பியாண்டார் நம்பி பாடலையும் முதல் நூல், வழி நூலாகக் கொண்டு பாடியதால், அந்த மரபார்ந்த முறையை மீறாமல் அதைப் பின்பற்றியே, தன் விரி நூலைப் பாடியுள்ளதாகச் சொல்லி ஒதுங்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.\

இவ்வாறாகக் காரைக்கால் அம்மையார் பற்றிப் பாடிய இம்மூவரும் ஏதோ ஒரு வகையில் அம்மையாரை ஒதுக்கி ஓரங்கட்டக் காரணமாய் அமைந்துள்ளனர் எனலாம். இது ஒரு புறம் இருக்க. இவ்வாறு பழைய தடத்திலிருந்து வேறுபட்டுச் சிந்தித்து எண்ணி எழுதுவது பலருக்குப் பிடிக்காத ஒன்று. பக்தி இலக்கியங்களை வாசிக்கப் பயன்படுத்துவதை விட பூசிக்கப் பயன்படுத்தும், சைவர்கள் அநேகம். இவ்வாறு விடாப்பிடியான சைவப் பற்று உடையவர்கள் எனத் தங்களைக் காட்டிக் கொள்ளும் விபூதிப் பூச்சுப் பேச்சாளர்கள், இப்பதிகங்களில் உண்மையையோ வரலாற்றுத் தடயங்களையோ தேடுதல் கூடாது என்பர்.

காரைக்கால் அம்மையார் பற்றிய புராணக்கதை

அம்மையார் வரலாற்றைப் பெரியபுராணம், காரைக்கால் தல புராணம், பிரம்மாண்ட புராணம் முதலான புராணங்கள் எடுத்துரைக்கின்றது. இவற்றுள் விரவிக் கிடக்கும் மெய்யும் பொய்யும் கற்பனையும் பொங்கி வழியும் காரைக்கால் அம்மையார் கதை நாடறிந்த ஒன்று. இக்கதை குறித்தும் பல எதிர்க் கருத்துக்கள் ஆய்வு உலகில் உண்டு என்பதையும் அறிவேன். நான் இங்கு கதை சொல்லப் போவதில்லை. கதையில் இடம்பெறும் திருப்புமுனையாக உள்ள சில செய்திகளை மட்டும் சுட்டிக்காட்டி உண்மை தேட முயன்று உள்ளேன்.

1) இக்கதையில் மிகமுக்கியப் பங்கு வகிப்பது மாங்கனி. அம்மையார் காலத்தில் இருந்து 500 ஆண்டுகளுக்குப் பின்வந்த சேக்கிழார் பாடுகிறார் என்பதை மனதில் இருத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

2) இக்கட்டான தருணத்தில் இறைவனை வேண்டிய உடனே இரண்டு மாங்கனிகள் கையில் வந்து தங்கியமை மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வு அல்லவா. அவர் வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தக் காரணமாக இருந்த மாங்கனி பற்றி, தன் பாடல்களில் எங்கேனும் ஓரிடத்தில் இலைமறை காயாகக்கூட குறிப்பிடவில்லை

3) இவரைப் பற்றி முதன் முதலில் தொட்டுக்காட்டிய சுந்தரர் தந்த குறிப்பில், 'பேயார்' என்பதைத் தவிர மாங்கனி பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை.

4) அடுத்துப் பாடிய நம்பியாண்டார் நம்பி பாடலிலும் மாங்கனி பற்றிய குறிப்பு ஏதும் இல்லை.

5) 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டு வந்த சேக்கிழார் மட்டுமே, புதிய வரவாக மாங்கனியைக் கொண்டு வந்து காட்டி, தன் கதைக்கு மெருகேற்றிக் களைகட்டும் வகையில் பாடிச் செல்கிறார். எனவே இது முற்றிலும் சேக்கிழாரின் கற்பனைக் கதையே என்பது தெளிவுறும்.

6) சேக்கிழார், காரைக்கால் அம்மையாரைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் புனிதவதி, தனதத்தன், தர்மவதி, பரமதத்தன், நிதிபதி முதலான பெயர்கள் யாவும் இயற்பெயராய் இல்லாமல் காரணப் பெயராய் அமைந்துள்ளது கண்கூடு. இது ஒரு கற்பனைக் கதை என்பதற்கு இதுவும் ஓர் சான்றாகித் திகழ்கிறது எனலாம்.

கயிலை மலைக் காட்சி

கயிலை மலைமீது கைகளால் நடந்து சென்றவரை, சிவபெருமான், 'நம்மைப் பேணும் அம்மைகாண்' எனத் துணைவியாரரிடம் சொல்லி, 'அம்மையே வருக' என்றழைத்து, 'வேண்டுவன கேள்' எனும் செய்தி பற்றிய குறிப்பு, சிவபெருமானை நேரில் சென்று கண்டு வழிபட்டு, பெருமானால் 'தாய்' எனச் சொல்லித் துதிக்கப்பட்டமை என்பது யாருக்கும் வாய்க்காத எத்தனை பெரிய அரிய நிகழ்வு. இந்நிகழ்வு அம்மையாரின் அங்கத்திலெல்லாம் பொங்கிப் பெருகும் தனியொரு இன்ப அதிர்வல்களை அல்லவா தோற்றுவித்திருக்கும். இவ்வாறான நேரில் சென்று கண்ட உணர்வுகளின் வெளிப்பாடாய், அம்மையார் பாடல்களில் ஓரிடத்தில் கூட சிவபெருமானைக் கண்டு தொழுத காட்சி, நன்றிப் பெருக்கின் வெளிப்பாடாய் வெளிப்பட்டு வரவில்லையே.

மாணிக்கவாசகர், தன் திருவாசகம் திருவண்டப் பகுதியில், பட்டவர்த்தனமாக முரசறைந்து முழக்கி வெளிப்படுத்தும் வகையில், இறைவனைக் 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' எனப் பேசுகிறார்.

அம்மையார், கயிலை சென்று இறைவனைக் கண்டிருந்தால், அந்த இன்ப அனுபவத்தைத் தன் பாடல்களில் பன்னிப் பன்னிப்பேசி மகிழ்ந்து பாடியிருப்பார் அல்லவா? மாறாக, அவர் தன் பாடல்களில் சிவபரம் பொருளின் அருளைப் பெறாது, அதைப் பெற வேண்டி, ஏங்கி இளைத்து வேண்டி நின்றதைத்தான் வெளிப்படுத்துகிறார்.

'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும் (அற்புதத்திருவருந்தாதி' -2)
(அவர் என் துன்பத்தை நீக்காவிட்டாலும் என்மீது இரக்கப்படாவிடினும்)
'ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாதது என்கொலோ?' (அற்புதத் திருவருந்தாதி -4)
(நான் என் அல்லலைப் பல தடவை முறையிட்டும் இறைவன் கேளாமல் இருக்கிறான்.)

'தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல்?' (அற்புதத் திருவந்தாதி- 44)
(எனக்கு அருள் செய்யாமல் இருப்பது ஏன்?)

'அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவங் காண்கிலேன் – என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?' (அற்புதத் திருவனந்தாதி-61)

(சிறு வயதில் உன் உருவம் எது என்று தெரியாமலே உன்மீது பக்தி கொண்டேன்; வயதான இப்போதும் அதை நான் காணவில்லை. உன் இறைவனின் உருவம் எது என்று வினவுகிறவர்களுக்கு என்ன விடை சொல்வேன்? உன்னுருவம் எப்படிப்பட்டது?)

கடவுளை நேரிற் கண்டு தொழுதவர் இவ்வாறு மாறுபட்டுப் பாடுவாரா?. இவ்வாறு இறைவன் திருவருளை வேண்டிக் கவலை கொண்டு பாடியவர், இறைவனைக் கையிலையில் கண்ணால் கண்டு தொழுததாகச் சொல்லப்படுவது எல்லாம் வெறும் கற்பனைக் கதைதான் என்பது தெளிவுறும்.

முறையானவரலாறும்வகைப்பாடும்இல்லாதகாரணத்தால்உண்மைகள்திரிக்கப்பட்டு அல்லதுமாற்றுருவம்பெற்று,அதுவேஉண்மையெனகாலப்போக்கில்நம்பப்படுகின்றன.

அம்மையாரைப் பற்றிய பொதுவான சில செய்திகள்

பக்தி இலக்கியம் என்பதோர் புத்திலக்கிய வகையை தோற்றுவித்து பதிகம் பாடும் மரபை உருவாக்கியவர். சதக இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடி. சைவத்திற்கு ஒரு திட்டமான வடிவம் கொடுத்து அது தனிப்பெரும் சமயமாக வளர்வதற்கு அடித்தளம் இட்டவர். சமயம் என்பது அறிவை மட்டும் சார்ந்தது அன்று; இதயத்தோடு தொடர்புடையது என்பதை எடுத்துரைத்தவர்.

வெண்பா எழுதுவது கடினம் என்ற சூழலில் அந்தாதி நிலையில் அமைந்த அற்புதத் திருவந்தாதி மூத்தது; புதுமையானது; அம்மையாருக்கு மகுடமிடுவது. இறைவனைப் பற்றிய பாடல்களை இசைப் பண்ணில் அமைக்கும் மரபை முதன் முதலில் உருவாக்கி, தமிழிசையின் தாய் என்ற பெருமையைப் பெற்றவர்.

ஆலயங்களில் மற்ற நாயன்மார்கள் நின்ற கோலத்தில் காட்சிதர, அம்மையார் மட்டும் இருந்த கோலத்தில் (அமர்ந்த நிலையில்) உரிமை பெற்ற தனிச்சிறப்பிற்கு உரியவராகிறார் இறைவன் நடனமிடும் பொழுது கீழே அமர்ந்து இசைத்தபடி இருக்கும் பெற்றியைப் பெற்றவர்.

புதுச்சேரி மாநில காரைக்காலில், அம்மையாரை மூலவராகக் கொண்ட காரைக்கால் அம்மையார் கோயில் சிறந்து விளங்குகிறது.

கதர் ஆடையும் பெண்களும்

முனைவர் எஸ். சாந்தினிபீ,
மேனாள் வரலாற்று பேராசிரியர். அலிகர்.

'குடி கா கடி பிந்தா'
– உன் உணவை துணியை நீயே உற்பத்தி செய் (ஒரிய மொழி கோஷம்)

அயலக ஆடைகளை ஒதுக்கச் சொன்ன அதே காலத்தில் கதர் ஆடை உற்பத்திக்கு வழி சொன்னார் காந்தி. இராட்டையை சுற்றிக் கொண்டே காந்தி எல்லா பணிகளையும் செய்து மக்களுக்கு உதாரணமாக திகழ்ந்தார். வீட்டிற்குள்ளே வாழ்வின் பெரும் பகுதியை கழித்த அன்றைய பெண்களுக்கு இப்பணி மிக எளிமையாகப் பட்டது. இராட்டைச் சுழற்றி நூல்நூற்பது ஒருபுறம் கதராடை நெய்வதை மேம்படுத்தியது. மறுபுறம் வீட்டிலிருந்த பெண்களின் கைகளில் பணவரவையும் தந்தது. பொருளீட்டல் என்பது பெண்களுக்கான பெரும் வலிமை என்பதை இன்றளவும் மறுக்க இயலாது. இது நாட்டுச் சேவையுடன் வீட்டுத் தேவைகளையும் ஓரளவு ஈடுகட்ட வழிவகுத்தது.

குடியிருப்பு பகுதிகளில் ஒரு முதலாளியிடமிருந்து பஞ்சு வாங்கி வந்து பெண்கள் தங்கள் பகுதிகளில் வீடு வீடாக சென்று விநியோகம் செய்தனர். நூற்ற நூலையும் வீடு வீடாகச் சென்று திரும்பப் பெற்று முதலாளியிடம் கொடுத்தனர். பெண்கள் வெளியே செல்வதை பெருமளவில் அனுமதிக்காத அன்றைய சமூகத்திற்கு ஏற்றதாக அமைந்தது. காந்தியின் திட்டங்கள் சமூகத்தின் எதிர்ப்பு குரல் எழாது தடுத்தாட் கொண்டது. இவ்வழியே சமூகத்தின் பல தரப்பு மக்களையும் இணைத்து விடுதலை போராட்டத்திற்கு வலு சேர்த்தார். அரசியல் என்பதே எண்ணிக்கைத் தானே....?

இந்த தொடர்புகள் பெண்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கும் வழிவகுத்தது. நாட்டு நடப்புகள் குறித்தும், போராட்டத் தகவல்களும் இவ்வகையில் பெண்கள் பரிமாறிக் கொண்டனர். செலவின்றி தகவல் பரிமாற்றம் நடைப்பெற்றது. இதில் அவரவர் மாமியார் மருமகள் முரண்பட்ட கருத்துக்களும் அடக்கம்.

இத்தகைய திட்டங்கள் பெண்களை தெருக்கள், போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள் என பலவகை பொது இடங்களுக்கும் மிக அதிக எண்ணிக்கையில் அழைத்து வந்து களம் இறக்கியது. பெண்கள் பொது இடங்களுக்கு செல்வதில் இருந்த இருக்கமானக் கட்டுப்பாட்டை மிக இலகுவான பஞ்சு அல்லவா எளிமையாக விரைவாக தளர்த்தியது. இத்தகைய ஒரே கல்லில் பல மாங்காய் கைவசமாக்கிய காந்திக்கு ஒன்றல்ல பல ஓ க்கள் போடலாம். பெண் அதிகாரத்திற்கு அடித்தளமிட்ட திட்டக்கள் இவை.

நாட்டின் விடுதலை இயக்கத்திற்கு வந்த பெண்கள் முக்கியமான வாழ்வியல் நுட்பங்களை அறியும் வாய்ப்பைப் பெற்றனர். குழந்தை வளர்ப்பு, வீட்டுச் சுத்தம் சுகாதாரம் பேணும்வகையும் அறிய முடிந்தது. அத்துடன் தேசபக்தி பாடல்கள், ஊர்வல கோஷங்கள், வன்முறையின்றி காவலர்களின் கொடிய தாக்குதல்களை சமாளித்தல், காயமுற்றவர்களுக்கான முதலுதவி பயிற்சிகள் போன்ற பல்வேறு புதிய தகவல்கள் செய்முறைகளை பயில நேர்ந்தது. இத்தோடு நட்பு எனும் வடிகால் வளையத்தையும் பெண்கள் வளர்த்துக் கொண்டனர்.

நெய்த கதராடை பொதிகளை தலை, இடுப்பு, கைச் சுமையாக சுமந்து தெருக்களில் விற்கும் பணியையும் பெண்கள் வெற்றியுடன் ஆற்றினர். இரட்டைக் குழல் துப்பாக்கியைபோல் நாட்டு விடுதலை இயக்கத்துடன் பெண்விடுதலை இயக்கத்தையும் இணைத்தே பெண்கள் எடுத்துச் சென்றனர். இதிலும் என்னால் வியக்கப்படும் பெண்ணாளுமை மூவலூர் இராமாமிர்தம் தன் தனித் தன்மையை பதித்துள்ளார். கதராடை விற்றதுடன் அமையாமல் முழு ஆடை அணிய உரிமையின்றி வாழ்ந்த ஒரு ஆணுக்கு கதராடை அணிவித்தார். அங்கே கதராடை விற்பனையுடன் தீண்டாமை மறுப்பு கொள்கையும் கைக்கோர்த்துக் கொண்டதல்லவா...? ஒரே செயலால் காந்தியின் பல கொள்கைகளை இணைத்து முன்னெடுத்துச் சென்ற தனி மரியாதைக்குரியவரே இப் பெண்ணாளுமை.

கதராடை அன்னிய ஆடைகளுக்கு நிகராக அமையவில்லை என்ற பொதுக் கருத்து அனைவரும் அறிந்ததே. பெற்ற பிள்ளை அழகாக இல்லையென தாய் குழந்தையை புறம் தள்ளுவதில்லை. கதராடையும் நாம் பெற்ற பிள்ளையே. அதைஅரவணைக்க வேண்டும் எனும் காந்தியின் சொற்களை தாய்மார்களே முழுதுமாய் உணர்ந்து ஏற்றுக் கொண்டனர். கதர் புடவைகளை அணியலாயினர். நூல் நூற்றல், கதராடை நெய்தல், தெருக்களில் விற்றல், தாங்களே அணிதல் என கதராடை கொள்கையின் எல்லா கட்டங்களிலும் பெண்கள் தங்களை முழுமையாக ஏடுபடுத்திக் கொண்டனர். இந்தியா முழுவதிலும் இருந்து பெண்கல் சாதி மத பொருளாதார பேதமின்றி பெண்கள் தொண்டாற்றினர்.

பெரும் பங்காற்றிய ஆண் பெண் பெயர்களை வரலாறு தன்னுள் இருத்தியுள்ளது. ஆனால் பெண்ணியல் பார்வையோடு இக்கருத்துக்கள் அச்சில் வராது போன வெற்றிடமே இங்கு நிரப்பப் படுகிறது. அடுத்து உப்பு சத்தியாகிரகத்தில் பெண்களின் பங்கைத் தொடருவோம்.

தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அத்தியாயம்-4

திடமான ஸங்கல்பம் செய்து கொண்டான்; அதே நினைவில் உள்ளத்தில் ஏதேதோ யோசனைகள் சுழன்றுப் போராடின. பைத்தியக்காரன், வைத்தியநாதனைப்போல் உதவாக்கரை மனிதன் வேறுயாரும் இருக்கமாட்டார்கள். நானே இந்தப் பத்திரிகையை அவனுக்குக் கொண்டு காட்டி அவனுக்குப் புத்தி கற்பிக்கலாம் என்றுதான் நினைக்கிறேன் என்று ஸதாநந்தன் எண்ணிக்கொண்டிருக்கையில் அவன் மனைவி அங்குவந்து,''என்ன அபாரமானயோசனை செய்கிறீர்'' என்றாள்.

இதே நேயன்என்கிற பத்திரிகையை மனைவிக்குக் காட்டி, பயித்தியக்கார வைத்யநாதனைப்பாரு! அப்பாவின் அசட்டுப் பிடிவாதத்திற்கு இந்த அசடு அடங்கிக்கிடக்கிறது. பாவம் அவன் மனைவி பஸ்டுக்ளாஸ் கதை யொன்று எழுதி காலேஜில் தானே கவர்னரின் முன்பு நடித்துக்காட்டி எல்லோரையும் ப்ரமிக்க வைத்து விட்டாளாம் ! கதையின் முடிவைப்போல் அவள்முடிவும் ஆய்விட்டால் என்ன செய்வது? இந்த முட்டா ளிடம் போய் எப்படியாவது தகப்பனாரைச் சரிப்படுத்திக் கொண்டு நந்தினியை அழைத்துக் கொள்ளும்படிச் சொல்லி விட்டு வரப்போகிறேன்! என்று கூறிவிட்டுத் தடதடவென்று கிளம்பினான்.

வைத்தியநாதனிடம் வந்து, டேய் பழி! கதையைப்படித்து விட்டுத்தான் மூணாம் பேஸ்து வைத்தமாதிரி உட்கார்ந்திருக் றாயா ! பேஷ்: இனிமேல் கூடவா உனக்கு மனத் துணிய வில்லை! கிளம்புடா!வேணுமானால் நான் உன்னுடன் துணைக்கு வருகிறேன். உன் தகப்பனாரிடம் சக்கைபோடு போட்டுப் பேசி தடபுடல் பண்ணிவிடுகிறேன். அவரும் ஏதோ மரியாதைக் குக்கட்டுப்பட்டு நடந்தால் பார்ப்போம்: இல்லையேல் வாடா! ரண்டுபேருமாய் தீபாவளிக்கே அங்கு போய்விடலாம். தோழிமாப்பிள்ளையாய் நான் வருகிறேன். வேண்டுமானால் 'என் மனைவி நீலாவையும் அழைத்து வருகிறேன். எழுந்து ஒரு முடிவுக்கு வாடா! நான் இனி உன்னை விடவேமாட்டேன். என்று வற்புறுத்திக் கூறினான்.

பாவம்! வைத்தியநாதனுக்கு அழுகை அழுகையாய் வரு கிறதேயன்றி என்ன பதில் சொல்வதென்றே தோன் றவில்லை. ''ஸதாநந்தா! என்னுடைய மனது இப்போது

ஒருநிலைகொள்ள வில்லை. ஏதோ பயித்தியம் பிடித்தது போலிருக்கிறது. என் னைத்தனிமையில் விட்டுவிடு. நாளை தினம் பேசலாம். தயவு செய்து போய்வா! கான் இப்படி சொல்கிறேனே என்று நினைக்காதே. எனக்குப்பேசவே பிடிக்கவில்லை" என்று தழ தழத்தகுரலில் கூறினான்.

ஸதாநந்:-போடா! அசடே! நீ வெறும்கட்டுப்பெட்டி பயந்தாங்கொள்ளி. உங்கப்பாவுக்கு நீ செய்யவேண்டிய மரியாதைகளைத் தவறாது செய்யக்கடமைப்பட்டிருக்கிறது உயர்ந்த நோக்கந்தான்; இம்மரதிரி ஒரு பேராசைச் செய்கைக்கு நீ ஏண்டா கட்டுப்படவேணும்! முதலில் மனஸ்தாபந்தான் வரும்; பிறகு சரியாகிவிடுகிறது! இப்போது நேராக உன் மாமி யார்வீட்டிற்கேபோகலாம்வா! நானும்வருகிறேன்.... இல்லைஎன்றால்இன்னொருகாரியம் செய்யலாம்: அதாவது உனக்கு ஏதோ விஷ ஜுரம் கண்டு படுத்திருக்கிறதாயும் உடனே வரவேணும் என்றும் உன் தகப்பனாருக்கு ஒரு கடிபுடி தந்தி கொடுத்துவிடட்டுமா? நாளையே கதறிக்கொண்டு ஓடி வந்து விடுவார், பிறகு நான் பேசிச்சரிப்படுத்திவிடுகிறேன். என்றான்.

அப்பா!போதும் போதும் உன் யோசனை, எங்கப்பாவா இதற்கெல்லாம் மசிகிறவர்! அவர்முன்பே கதைகளில் வருவது போல் அப்படி இப்படி என்றுபலபலவித உதாரணங்களைக்கூறி என்னை எச்சரித்திருக்கிறார். நீ தந்தியடித்தால் அதையவர் லக்ஷியமே செய்யமாட்டார், அதுமட்டுமா! இந்தப்பத்திரிகை விஷயம் எப்படியாவது தெரிந்துவிடும்: அதைக் கொண்டு விப ரீத அனர்த்தத்தை உண்டாக்கி அமளி துமளி செய்துத் தாண்டவமாடுவார். முக்யமாய் என்தாயார் மிகவும் பலவீனப் பட்டவள்: நோயாளி என்றால் மிகையாகாது என்னைப்பற்றி நீ சொல்லியபடி தந்தியடித்ததைப் பார்த்தால் அது பெருந் தீ யாகி அவள் அதற்கு இரையாகிவிடுவாள்! எது எப்படியாவது ஆகட்டும்: என் தாயார் எனக்கு உயிருடன் இருந்தால்போதும். இன்றில்லை என்றாலும் காளை இந்த விஷயத்தில் விமோசனத் தைக் காணலாம், என் அருமை அன்னையைக் காணமுடியுமா? ஏற்கெனவே என் தாயார் எனக்கு ஒரு கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாள் தெரியுமா! தான இறந்துவிட்டால் எனக்கு நல்லகாலம் பிறக்குமாம்: "எப்போதும் பங்காளிகளோ தாயாதி களோ யாராயிருந்தாலும் சண்டை செய்து பிரிந்திருந்தால் ஒருசெட்டி கெருப்புடனாவது ஒருசெட்டிபருப்புடனாவது ஒன்று சேருவார்கள், என்று பழமொழி சொல்வார்கள்; அதுபோல் என்னுடைய மறைவுக்குப் பிறகாவது என்காரியத்திற்கு என் கண்மணி நந்தினி வந்து சேரட்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்' என்று எழுதினாள், நான் பலமாகக்கண்டித்து அம் மாதிரி நீ ஏதாவது செய்தால் நான் உடனே இறந்துவிடுவேன். நந்தினி கதி அதோகதியாகிவிடும்! என்று பயமுறுட்டிக் கடிதம் எழுதினேன். தெரிந்ததா? அம்மாதிரி நீ எதுவும் செய்து விடாதே; நீ இப்போது என்னைத் தனிமையில் விட்டுச் செல்லு. நான்நாளைசந்திக்கிறேன். அதற்குள்என்மனத்தையே நான்திடம் செய்துகொண்டு என்னசெய்யலாம் என்று தீர்மானிக்கிறேன்" என்று கண்டிப்பாகக் கூறினான். அதன் பிறகு ஸதாநந்தன் சென்றுவிட்டான்.

தனியே விடப்பட்ட வைத்யநாதன் ஏதேதோ எண்ணி பலமான யோசனைகள் செய்துக் குழம்புகிறான். இவனுடைய ரகஸியம் தெரிந்தவர்கள் ஏதோ துக்கம் விசாரிக்க வருவது

போல் ஒருவர் மாற்றி ஒருவர் இதே விஷயத்தைக் கூறிக் கொண்டு வந்து பேசுவது இவனுக்கு ஒருபுறம் வெறுப்பாயும் எரிச்சலாயுமிருந்ததால் தான் வீட்டிலேயே இல்லாமல் எங்காவது சற்று போய் வரலாம் என்று எண்ணிக் கடல்கரையை நோக்கிச் சென்றுவிட்டான்.

இவனுடைய சினேகிதர்கள் அனேகர் தம்தம் மனைவிகளு டனும் மக்களுடனும் கடற்கரையில் தம் தம்போக்காக அமர்ந்து ஆகந்தமாய்ப் பேசியும் சிரித்தும் மகிழ்ந்தும் குதூகலமாக விருப்பதைக்காண வைத்தியநாதனுக்கு துக்கம் துக்கமாய் வருகிறது. இருந்தாலும் இம்மாதிரி ஸந்தோஷமாயிருக்க வேண்டிய நிலைமையில் இதென்ன ஒண்டிக்கட்டை வாழ்வு. அதிலும் நந்தினியை அவதிப்படச் செய்துவிட்டு நான் இங்கு தவிக்கும் தவிப்பு ஒரு வாழ்வா! பாவம் நந்தினி என்ன நினைப்பாள்? அவள் கதையில் எழுதி இருப்பது போல் நானும் பாலைவன நெஞ்சுடைய வஞ்சகன் என்றுதானே எண் ணியிருப்பாள். நான் அப்படி இல்லை. அவளை சதா என்னிதய பீடத்தில் வைத்து இன்புற்றுக் கண்ணீர் வடிக்கிறேன் என் பதை அவளிடம் யார் தெரிவிப்பார்கள்? என் விதி இப்படியா ஆகவேணும்? என்னுடைய மனக்கோட்டைகள் இப்படியா தவிடுபொடியாகவேண்டும்? நான்யாருக்கென்று பயப்படுவது. சீச்சீ! பணப்பேயின் பேராசைக்கு அடிமையாகிய என் பிதா வின் காலம் வரையில் எங்கள்வாழ்க்கையின் இன்பத்திற்கு முட்டுக்கட்டைதான்: அது என் விதி! என்று தனக்குள் குமுருகிறான்.

நந்தினிக்கு ஒரு கடிதம் எழுதிவிடட்டுமா? என்று நினைக் கிறான். ஆனால் நந்தினி அதை மதிக்காமல் அவமதித்துவிட் டால் என்ன செய்வது? அல்லது அவள் தகப்பனாருக்கு என்பிதாவின்மீதுள்ளவஞ்சத்தினால்இக்கடிதத்தையே எங்கப்பாவுக்குஅனுப்பிவிட்டால் என்ன செய்வது? இன்னும் பெரிய அனர்த்தமாகவன்றோ ஆய்விடும். என்று குழம்பிக்கொ கொண்டிருக் கையில் வைத்யநாதனின் உறவினர் ஒரு கிழவர் அந்தஊரிலிருப் பவர் கடற்கரையில் உலாவவருகையில் மெனக்கிட்டு வைத்திய தனிடம் வந்து உட்கார்ந்துகொண்டு, "என்னடா செய்தி! உன்னைப்பார்ப்பதற்கு உன் விடுதிக்குப்போனேன். கதவு பூட்டியிருந்தது. சாயங்காலவேளை கடற்கரைக்குத்தான் வந் திருப்பாய் என்றுவந்தேன். ஏண்டா! வைத்தா? இன்று பத்திரி கையில் பார்த்தாயா? இதென்னடா வெட்கக் கேடு. உன் தகப்பனாரின் மரியாதை என்ன? அந்தஸ்து என்ன? அவரி டம் சொல்லியபடி வரதக்ஷிணை பாக்கியிருப்பதை மரியாதை யாய்க் கொடுத்துப் பெண்ணைக் கொண்டுவிடாமல் இதென்ன டாக் கூத்தும் கும்மாளமும்? பெண்ணை நாடகத்தில் நடிக்க உங்கப்பாவின் மானத்தை வைத்து ஊர் சிரிக்கச்செய்து வாங்கிவிட்டானடா உன் மாமனார்!. நீ பார்த்தாயா? அதைப் பார்த்ததும் எனக்கு ரத்தங் கொதித்துவிட்டது. என்னு இந்த அலட்சியத்தைத் தாளாமல் ஓடிவந்தேன்.

என்று சொல்வதைக்கேட்டு வைத்யநாதனுக்குச் சற்றுக் கூட பிடிக்கவில்லை. கிழவன்மீது எரிச்சலாக இருக்கிறது. விஷயம் தெரிந்ததாகப் பேசினாலும் கிழம் விடப்போவதில்லை. எதிர்த்துப் பேசினாலும் விடமாட்டார் என்னசெய்து துலைப்பது. எனக்கு எந்த விஷயமும் தெரியாதுபோலவே பேசி விறட்டிவிடுவதுதான் சரி என்று தனக்குள் முடிவுகட்டிக் கொண்டு, என்ன தாதா விஷயம்? நீங்கள்சொல்வது ஒன்றுமே புரியவில்லையே! நான் எந்தபேப்பரும் பார்க்கவில்லை. எனக்குப் புத்தகங்கள் படிக்கவே

பொழுது போதவில்லை. பேப்பர் படிப்புக்கு எனக்கு நேரமேது தாதா! என்று ஒரு போடு போட்டான்.

கிழவர்:- இதென்ன பேச்சுடா வைத்தி! இன்று பத்திரி கையில் நான் பார்த்துக்கலங்குவதுபோல் நமது உற்றார் உற வினர்கள் எத்தனை பேர்கள் இதைப்பார்த்திருப்பார்கள். என்ன நினைப்பார்கள். உனக்குத்தான் இவைகளைப்பற்றி தெரியவேண்டாமா? உன் பிதாவுக்கு வரும் மான அவமானம் உனக்கில்லையா? நீ அவச்யம் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்து சரியானபடி உன் மாமனார்மீதும் அந்தத் துஷ்டப் பெண் நந்தினியின் மீதும் நடவடிக்கை எடுத்துத் தானாக வேண்டும். வெட்கங்கெட்டுப்போய் நந்தினி வைத்ய நாதன் என்று கொட்டை கொட்டையாய்ப் பெயரைப் போட் டுக்கொண்டு கூத்தாடி இருக்கிறாளடா! வேஷத்துடன் புகைப் படம் வேறு வந்து அவமானம் தாங்காமல் தலைகுனியும்படிக் குச் செய்கிறது. வரதக்ஷிணை பூதமாம், பிசாசாம். அது மட்டுமா? அந்தக் கதையில் சில கட்டத்தை இந்தப் பெரிய மேதாவி எழுதிவிட்டதைப் பேப்பர்க்காரன் ப்ரமாதமாய்ச் சிலாகித்தும் கொண்டாடியும் ஒரு பக்கம் பூராவும் எழுதி இருக்கிறான், மடையன். இம்மாதிரி செய்தது தவறு என்று பத்திரிக்கைக்காரன் கண்டிக்க மூளை இல்லையா ?...என்று ஏதேதோ அவர் சொல்லிக்கொண்டே போவதை வைத்ய நாதன் லக்ஷக்ஷ்யமும் பண்ணவில்லை. காதில் வாங்கவும் இல்லை. இதுவேறு கிழவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "ஏண்டா! வைத்தீ! நானென்ன பயித்தியக்காரன் என்று நினைத்துவிட்டாயா? உனக்கு மான அவமானமில்லையா? நாலுபேர் நாக்கை வளைத்துப் பேசுவதைக் கேட்டால்எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருக்கிறதடா? இதோ பார் வைத்தீ! உன்னையும் உன் பிதாவையும் அந்த தடிச் சிருக்கியும் அவள் தகப்பனும் செய்துள்ள அவமரி யாதை, இளப்பம், இதற்குச் சரியான ப்ராயச்சித்தம் செய்து தண்டித்தால்தான் கொழுப்பு அடங்கும்".

வைத்:- ப்ராயச்சித்தமா? அதென்ன தாதா? வாத்தி யாரை யழைத்து ஓமம் வளர்த்தி.

கிழ:- போடா! முட்டாளே! நான் சொல்வதெல்லாம் உனக்கு ஏளனமாயிருக்கிறதோ? வேணுமென்று இம்மரதிரி செய்தவர்களுக்கு நீ சொல்வதுபோல், வாத்தியாரை அழை த்து ஓமம் வளர்த்தி ஒரு பெண்ணை மறுவிவாகம் செய்து கொண்டு கல்யாண தம்பதிகளின் புகைப்படத்தை இதே பத்ரி கையில் ஜம்மென்று வெளியிட்டுவிட்டால் அதைப் பார்த்த உடனே அந்த இருவரும் புழுகுபோல் துடிதுடி என்று துடிப் பார்கள். அது தான் சரியான ப்ராயச்சித்தம், தெரிந்ததா?

இதைக் கேட்கக்கேட்க கிழவரின் மிகவும் குறுகிய மனோ பாவத்தையும் மூளைகெட்டத த்தையும் கண்டு வெறுப்பும் பரி தாபமும்கொண்டு பெருமூச்சுவிட்டான். இத்தகைய பாவிகள் உலகத்திலிருப்பதனால்தான் இந்தப்பாழும் வர தக்ஷி ணைப் பிசாசு சாச்வதமாக உட்கார்ந்து ஆளையே அழுத்திக் குடும்பத்தையே ஆட்டுகிறது. இருக்கட்டும். இந்த மனுஷ்ய னுடைய போக்கு இன்னும் எவ்வளவுதூரம் போகிறது, பார்க் கலாம்! என்று எண்ணியவனாய், தாதா! நீங்கள் மிகவும் தீர்க்கதரிசனமாய்ப் பேசுகிறீர்கள். ஒரு பெண்

இருக்கை யில் பெண்மேல் பெண்ணாக யார் தாதா கொடுக்க மனம் துணிந்து முன்வருவார்கள். அந்தப் பெண்ணுக்கும் வாதகூஷிணையினால் இதேகதி ஏற்பட்டுவிடுமோ என்று பயப்பட மாட்டார்களா?... சட்டம் திட்டம் ஒன்றுமில்லையா?

என்று முடிப்பதற்குள், பலேபேஷ்! வைத்தீ! அப்படி வழிக்கு வா! பெண்மேல் பெண்கொடுப்பது என்றால் உன் விஷயத்தில் கசப்பா? புளிப்பா? நானு நீ என்று துள்ளிக் குதித்துப் போட்டியிட்டுக்கொண்டு வரமாட்டார்களா?அவ்வளவு தூரம் போவானேன். என் பெண்ணே இருக் கிறாள். என் பேத்தி இருக்கிறாள். என் தங்கையின் பெண் இருக்கிறாள்;சுமார் 20 வய துக்குமேல் பட்ட எத்தனை பெண்கள் நமக்குள்ளேயே இருக்கிறார்கள் தெரியுமா? இரண்டாங் கல்யாணத்திற்கு வரதகூஷிணையாவது போரதகூஷிணையாவது? அந்த கட்டம் முதல்கல்யாணத்துடன் முடிந்துபோயி இரண்டாங் கல்யாணத்திற்குப் பெண் கிடைத்தால் போதும் என்று வலை வீசுவார்கள்; சிலருக்கு உடனே அகப்பட்டுவிடும். சிலருக்கு அகப்படாத கொடுமையினால் இவர்கள் பெண் வீட்டாருக்கு வரதகூஷிணை கொடுத்துப்பெண்ணைவாங்குவார்கள் தெரியுமா? அந்த பயம் இனி இல்லையப்பா...என்ன சொல்லுகிறாய்? நான் இன்றே உன் பிதாவிடம்போய்...

தாதா தாதா! அடேடே! உங்கள் அவஸரத்தைப் பார்த்தால் கடற்கரையிலேயே உப்புஜலத்தை தாரைவார்த் துக் கல்யாணத்தைக்கூட முடித்துவிட்டுப் போய்விடுவீர்கள் போலிருக்கிறதே. பொறுங்கள் தாதா! கிணற்று நீரை வெள் ளமா கொண்டுபோய்விடும். நானே முதலில் உங்கள் வீட்டி விருக்கும் சப்த கன்னிகைகளையும் பார்த்துவிட்டு யார்வேண் டுமோ என்னிஷ்டப்படி தேர்ந்தெடுத்து சுயம்வரம்போல் சொல்லிவிடுகிறேன். ஆனால் ஒன்று, நீர் சொல்வதுபோல் வரதகூஷிணை இல்லாமல் கல்யாணம் நான் செய்துகொள்வதாக உத்தேசம் இல்லை. முதல் கல்யாணத்திற்கு 5 ஆயிரம் பேரம் பேசியதால் இரண்டாங் கல்யாண த்திற்குள் இன்னும் நான் சற்று படிப்பிலும், அந்தஸ்த்திலும் உயர்ந்து நன்றாக வளர்ந் தும் இருப்பதால் 7 ஆயிரம் கொடுத்தால் உடனே நாளையே கல்யாணத்தை முடித்துவிடலாம். தந்தியிலும் ஏரோப்ளே னிலுமாகச் செய்தியைப்பரப்பி மனிதர்களை வரவழைத்து விடலாம். என்ன சொல்கிறீர்? எங்கே பணம்? எடும்...

என்றதைக் கேட்டு கிழவர் திடுக்கிட்டார். எனினும் சமாளித்துக்கொண்டு ஏண்டா ? என்னை அடிமுட்டாள், மடயன், உலக விவகாரம்தெரியாத அப்பாவி என்றெல்லாம் எண்ணிக்கொண்டு பேசுகிறாயா; இந்த மகாதேவனை அப்படி நினைத்துவிடாதேப்பா! முதல் மனைவி தவறிவிட்டு இரண் டாங் கல்யாணம் செய்பவனுக்கே வரதகூஷிணை கிடையாதாம்; முதல் மனைவியைத் தள்ளிவைத்துச் செய்கிறவனுக்கு வா தகூஷிணையாம்; அதிலும் 7 ஆயிரம் ரூபாயா! பேஷ்! பேஷ்! யாராவது கேட்டால் சிரிப்பார்கள்- குழந்தைத் தனமாகப் பேசாதேடா? விஷயம் பெரிது. தீர்க்காலோசனை செய்து சொல்லு. நாளைக்கு வருகிறேன். என்றார்.

அதேசமயம் மற்றொரு உறவினர் வந்தார். கிழவரும் னும் பேசுவதைப் பார்த்து ஒருமாதிரி நகைத்துக்கொண்டே. ஒகோ தாதாவா! நான் நினைத்தேன்: வைத்தியிடம்தான்

நீங்கள் போயிருப்பீர்களென்று எனக்குத் தெரியும். நான் நினைத்தது சரியாகிவிட்டது. என்ன தாதா ! பத்திரிகை விஷயமாகத்தானே..... பெண்பார்த்து முடித்தாகிவிட்டதா! அடேடே! நினைவில்லாமல் சொல்லிவிட்டேன். உம்முடைய சொந்தத்திலேயே ஊரப்பட்ட பெண்கள் இருப்பதால் கவலை இல்லை தாதா! என்னடா! வைத்தீ! என்ன சமாசாரம்! தாதா விடம் ஏதாவது வழி ஏற்பாடு செய்து கொண்டாயா! நானும் பத்ரிகை படித்துவிட்டுதான் வந்தேன் – என்று சொல்லியபடி அவனும் உட்கார்ந்தான்.

வைத்தியநாதனுக்கு, இதென்னடா தலைவேதனை இவன் வேறு வந்து சட்டமாக உட்கார்ந்து விட்டான்! என்றுவெறுப் பாகவே இருக்கிறது. எதையும் சொல்லவோ முடியவில்லையே என்று எண்ணியபடியே, ஓ! நீயும் பத்ரிகையைப் படித்து விட்டுத்தான் வந்தாயா! சந்தோஷம்; தாதாசகல ஏற்பாடும் செய்துவிட்டார்; என்னையேநான்தாதாவிடம் விலைபேசினேன். அதாவது ஏழுஆயிரம் ரூபாய்உண்டானால் இப்போதே தாதா வின் பெண்ணையே மணப்பதாகச் சொல்லிவிட்டேன். நீதான் சொல்லுப்பா! முதல் கல்யாணத்திற்கு 5ஆயிரம் விலைபோன நான்இரண்டாங்கல்யாணத்திற்கு இன்னும் உயர்ந்த ஸ்திதிக்கு வந்துவிட்டதால் 7 ஆயிரம் ஏன் வாங்கக்கூடாது! என்றான்

வந்தவன் பெரிதாகச் சிரித்தபடி,சபாஷ் சபாஷ்! வைத் தீ! சரியான மதிப்பு! சரியான நியாயமான விலை! தாதா! நானும் கூடவிருந்து காரியத்தை முடித்துவிடுகிறேன். ஏற்பாடுசெய்து விடுங்கள் : தாதா ! ஆனால் சட்டம் மட்டும் இந்தக் கல்யாணத் திற்கு இடம் கொடுக்குமோ கொடுக்காதோ...? என்றான்.

கிழவருக்குக் கோபம் அஸாத்யமாய் வந்துவிட்டது... டேய்! நீங்கள் ஏதோ விளையாடுகிறீர்கள்! எனக்குக் கோபம் வந்துவிட்டால் பிறகு நீங்கள் வருந்திப்பயனில்லை. ஏதோநம்ம பந்துக்களாயிற்றே என்று நான் வலுவில் வந்தால் இப்படியா ஆட்டமாடுகிறீர்கள். ஒரு பெண் கிடைத்தால் போதும் என்று எங்களிடம் கெஞ்சிக் கேட்கும் காலம் வருண்டா வரும்! என்று சொல்லிக்கொண்டே எழுந்துபோய் விட்டார். அப் பாடா! ஒரு தலைவேதனை விட்டது: தொணதொணவென்று அறித்துக்கொட்டிவிடும். எங்கு எந்தப் பெண்மீதுபடாப்பழி யைப் போட்டு தள்ளி வைக்கலாம்? எந்த பிள்ளைக்கு மறுமண மாகத் தன் குடும்பத்திலுள்ள சரக்கையே வரதக்ஷிணை தொல்லை இன்றித் தள்ளிவிடலாம்! என்று இதே எண்ணந்தான் இக் கிழவருக்கு: இவருடைய நான்கு பெண்ணையும் இப்படிப்பட்ட ஆளையே பார்த்து இரண்டாந்தாரமும் மூன்றாந்தாரமுமாகக் கொடுத்திருக்கிறார்: இன்னும் உள்ளவர்களுக்கும் வலை வீசுகி றார் பாவம்...டேய். வைத்தீ! உங்கப்பாவின் முட்டாள் தனமும் உன்னுடைய பயந்தாங்கொள்ளித்தனமும் சுத்தமாய் நன்றா யில்லை. இன்று பேப்பரில் பார்த்ததும் மெத்த சந்தோஷமே உண்டாகியது. என்மனைவி கூட நந்தினியின் சாமர்த்தியத் தைப்புகழ்ந்து பாராட்டினாள்.இனிமேலாவது உங்கப்பாவுக்கு புத்தி வருமா!" என்றாள் என்மனைவி. அதுதான் இல்லை என்று தோன்றுகிறது. இன்னும் பகை அதிகமாகி நாளையே உனக்கோர் பாணம் போன்ற கடிதமே வந்தாலும் வ வரும் என்று நினைக்கிறேன். நீ இத்தனைநாள் இப்படி பயந்துபயந்து நடந்தது போதும். இனியும் அந்தப்பெண்ணைப்பாழடிக்காதே! நான் உன்னுடன் கூடவருகிறேன். நாம் இருவரும்

நேரே உன் மாமனார் வீட்டிற்குப்போவோம்; விவகாரங்களை ஒரு விதமாக முடித்துக்கொண்டு வரலாம். இதை உன் பிதாவுக்கு நான் பக்குவமாகச் சொல்லி சரிப்படுத்துகிறேன் என்னடா மவுனம்? இந்த ட்ராமாவின்முடிவை நீ கவனித்தாயா? அந்தமுடிவுக்கு தானும் தயாராய்த்துணிந்திருப்பதையே அந்தக் கதைக்காட்டு கிறது: இந்த ரகஸியத்தை உணராது எருமை மாடுபோலிருப் பது அழகா? என்று உண்மை அன்பும் ஆதரவுடனும் பேசினான். வைத்தியநாதனுக்கு என்னபதில் சொல்வதென்றேதெரியாமல் ஒருவிதபடபடப்பும்உள்ளுக்குள்பொங்கிவரும்துக்கமும்ஒன்றுகூடிபதுமைபோலாக்கின

மெல்லினம் என்னும்
ஒற்றைச் சொல்லால்
மகுடம் சூட்டப்பட்ட பெண்ணினமே !

துரியோதனக் கும்பலில்
பகடைச் சூழ்ச்சியில் நீ
துகிலுரியப்படலாம் .
திரௌபதியின் கூந்தல்
பூசிய இரத்த நறுமணம்
வல்லினமன்றோ !

வண்ணச்சீறடி
மண்மகள் அறியாதவள்
தன் ஒற்றை கொங்கையால்
கனலாக்கிய சிலம்பினாள்
வல்லினமன்றோ !

வல்லின ஆளுமையை
ஆணினமே
உன் மெல்லின ஆளுமைக்குள்
வாமனனாக்கினாலும்
எப்பொழுதும் பெண்
திரிவிக்கிரமியே !

முனைவர். பெ.பகவத்கீதா

இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில்

சி. அபிஷேக்

இராமநாதபுரம் பகுதியை தலைநகராகக் கொண்டு, பரந்துபட்ட பகுதியைச் ஆட்சி செய்தவர்கள் சேதுபதி மன்னர்கள். இவர்களின் முதல் தலைநகராக இராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி அருகில் உள்ள போகலூர் விளங்கியது. பின்னர் கிழவன் சேதுபதி மன்னர் காலங்களில் போகலூரில் இருந்து இராமநாதபுரம் பகுதிக்கு தலைநகரம் மாற்றப்பட்டது.

இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னர்களின் அவைக்களமாக இராமலிங்க விலாசம் விளங்கியது. இதனருகே அமைந்துள்ளது சேதுபதி மன்னர்களின் குல தெய்வமான இராஜ இராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில்.

இக்கோயில் 300 ஆண்டுகள் மேல் பழமையானது. சேதுபதி மன்னர்களுள் ஒருவரான திருமலை ரெகுநாத சேதுபதி அவர்களால் இக்கோயில் கி.பி.1658 ல் கட்டப்பட்டது. கி.பி.1658 ல் மதுரையின் மன்னராக இருந்த திருமலை நாயக்கர் வயது முதிர்வின் காரணமாக படுத்த படுக்கையாக இருந்தார் (*). இந்த செய்தியை அறிந்த மைசூர் இராஜ்ஜியத்தின் மகாராஜாவான முதலாம் நரசராச உடையார் மதுரையைக் கைப்பற்றுவதற்காக பெறும் படையை மதுரை நோக்கி அனுப்பி வைத்தார்.

அப்பொழுது திருமலை நாயக்கருக்கு உதவுவதற்காக ரெகுநாத சேதுபதி போர் புரிந்து மைசூர் மன்னனை வெற்றிகொண்டு மதுரை நாயக்க அரசினை நிலை நிறுத்தினார். தன் தோல்வியை ஒப்புக்கொண்ட நரசராச உடையார் திருமலை நாயக்கருக்கு மைசூரில் உள்ள இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் உள்ள உற்சவர் சிலை ஒன்றை காணிக்கையாக கொடுத்தார். அந்த சிலையை வெற்றிக்குக் காரணமாக இருந்த ரெகுநாத சேதுபதிக்கு திருமலை நாயக்கர் அளித்தார். போகலூர் தலைநகரமாக விளங்கிய காலகட்டத்திலேயே, வெற்றியின் சின்னமாக தமக்கு வழங்கப்பட்ட இராஜேஸ்வரி அம்மனின் திருமேனிக்கு, இராமநாதபுரத்தில் கோயில் எழுப்பி உள்ளனர் சேதுபதி மன்னர்கள். அதுவே தற்போது இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் உள்ள பொன்னாலான இராஜராஜேஸ்வரி அம்மனின்திருமேனியாகும்(**). இது 1¼ அடி உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது (•). வெள்ளி பீடத்துடன், எட்டு திருக்கரங்களுடன் அம்பாள் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.

இராஜேஸ்வரி அம்மன் தங்க சிலை

கி.பி.1658 ல் இராஜேஸ்வரி அம்மனுக்கு ஆலயம் எழுப்பிய ரெகுநாத சேதுபதி, கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் நவராத்திரி விழாவிற்கு இராமேசுவரம் சதாசிவ பட்டர் புத்திரன் சங்கர குருக்களை நியமனம் செய்தது சம்பந்தமான ஆணையைக் கொண்ட செப்பேடு ஒன்றையும் வழங்கியுள்ளார். " ராசராச ஈசுவரி அம்மன் நவராத்திரி உட்சொபத்துக்கு, நமக்கு காப்பு தரிச்சு, தாமும் காப்பு தரிச்சுக் கொண்டு நவராத்திரி பத்துனாளை உட்சொபத்துக்கும் இராச ராசாஈசுவரி அம்மனுக்கு பூஜை பண்ணி, உட்சொபம் செய்து அதில் வருகிற ஊதியமும் தாமே அனுபவிச்சுக் கொண்டு தமக்கு காணியாட்சி யாக நடந்து வரவேண்டியது," என்பது சேதுபதி மன்னரது ஆணை (1). அன்று முதல் இராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதி மன்னர்களது குல தெய்வமாகப் போற்றப்படுகிறாள் இராஜராஜேஸ்வரி அம்மன். அம்பாளுக்கு விழா நடத்தும் வகையில் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதி மைசூரில் நடைபெறுவதைப் போன்று புரட்டாசி திங்களில் பத்து நாட்களும் தசரா விழா நடப்பதற்கு ஏற்பாடு செய்தார். இவ்விழாவினை மகர்நோன்பு என வழங்குவர். இந்த பத்து நாட்களும் இராமநாதபுரம் அரண்மனையேக் கோலாகலமாக இருக்கும்.

இராஜேஸ்வரி அம்மன் கோயில் விமானம்

இராமநாதபுரம் அரண்மனையில் தசரா கொண்டாட்டம்

ரெகுநாத சேதுபதிக்குப் பின் வந்த பல சேதுபதி மன்னர்கள் இக்கோயிலை இன்னும் சிறப்பாக எழுப்பினார்கள். விஜயதசமி அன்று பிறந்ததால் விஜய ரெகுநாத சேதுபதி என்று பெயர் பெற்ற சேதுபதி மன்னர் அடிக்கடி மைசூர் சென்று அங்குள்ள மாதிரி பல அழகான கொலு பொம்மைகளை செய்வதற்கு மைசூரிலிருந்தே ஆட்களை வரவழைத்தார்.

பாஸ்கர சேதுபதி மன்னர் அம்பாளின் கருவறையின் மேல் விமானத்தை பொன் தகட்டினால் வேய்ந்து மகிழ்ந்தார் (3). இந்த நிகழ்வினை கோயிலின் விமானத்தில் பொறித்தும் வைத்துள்ளார்.

" கி.பி.1893 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1815 விஜய துலா கிருஷ்ணபட்ஷம் பஞ்சமி பானுவாரம் மிருக சீரிட நட்சத்திரத்தில் ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜ அவர்கள் ராஜராஜேசுவரிக்கு ஸ்வர்ண விமான பிரதிட்டை "

விமான எழுத்து வெட்டின் வாசகம் (4),

மேலும் தங்கத்தால் ஆன சிம்ம வாகனத்தையும் வழங்கியுள்ளார் (5). ஆரம்பத்தில் இந்த அம்பாளுக்கு எருமையை பலியிடும் வழக்கம் இருந்திருக்கிறது. பின் கி.பி.1894 ல் சைவ சித்தாந்தியான மன்னர் பாஸ்கர சேதுபதி உயிர்ப்பலி பூஜையை தவிர்த்து, பிற கோயில்களில் நடப்பதை போன்று அம்பாளுக்கு பூஜை, நெய்வேத்தியம், அபிஷேகம் ஆகிய நடைமுறைகளை நடத்தி வர ஏற்பாடு செய்தார். அதற்காக சிருங்கேரி மடத்தைச் சேர்ந்த சுவாமிகளை வரவழைத்து அம்பாளின் ஸ்ரீசக்கரத்தை மாற்றி அமைத்து உயிர்ப்பலிக்குப் பதிலாக உரிய பூஜைகளை மேற்கொண்டு புதிய ஸ்ரீ சக்கரத்தை ஆலயத்தில் நிறுவி, அம்பிகையின் நித்ய பூஜையை வைதீக மார்க்க வழிபாடாக மாற்றினர். இதற்கு எதிரில்

உள்ள மரகத பலி பீடம் இராயவேலூரிலிருந்து குமார விஜய ரகுநாத சேதுபதியின் இளவலான தளபதி தெய்வக் கண்ணியால் கொண்டு வந்து நிர்மாணிக்கப்பட்டதாகும்.

பூஜை முறை மாற்றப்பட்டதுடன் அம்மன் முன் இருந்த மரகதபீடம் அகப்பட்டு சிருங்கேரி மடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இதுமட்டுமின்றி இத்தாலி நாட்டில் மிலான் நகரிலிருந்து வெங்கலத்தால் ஆன ஒரு பெரிய மணியையும் வரவழைத்து ஆலயத்தில் நிறுவினார் (6). மேலும் முத்து ராமலிங்க சேதுபதி தங்கக் கேடயத்தை அம்மனுக்கு வழங்கியுள்ளார். 300 ஆண்டுகள் மேல் கடந்து இன்று வரை இக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் விஜயதசமி விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இரகுநாத திருமலை சேதுபதி காத்த தேவர் அவர்கள் இக்கோயிலுக்கு செப்பேடு ஒன்றும் வழங்கியுள்ளார் (7). இவ்வம்மன் மீது பாடப்பட்ட கலி விண்ணபமாலை ஒன்றும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சேது மன்னர்கள் பொதுவாக தங்களுடைய காலை வேலைகளை முடித்தவுடன் தமது ராணியுடன் அரண்மனை வளாகத்திலுள்ள இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் காலை வழிபாட்டில் கலந்து கொள்வது அவர்களது நியதியாக இருந்துள்ளது. கோட்டைக்கு வெளியே அல்லது வெளியூர்களுக்குச் சென்று திரும்பிய பொழுதும் அரண்மனைக்குள் நுழைந்தவுடன் அவர்கள் அம்மனைத் தரிசனம் செய்த பிறகுதான் அந்தப்புரத்துக்குச் செல்வதும் அவர்களது வழக்கமாக இருந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இராமநாதபுரம் சமஸ்தான ராணி அவர்களின் தலைமையில், பத்து நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆன்மீக சொற்பொழிவு, மஹாபிஷேகம், திருவிளக்கு பூஜை, பரதநாட்டிய நிகழ்ச்சி, இன்னிசை கச்சேரி, பல்சுவை நிகழ்ச்சி, பட்டிமன்றம், பொம்மலாட்டம் என இந்த பத்து நாட்களும் கோலாகலமாக அமையும்.

பாஸ்கர சேதுபதி வழங்கிய மணி மற்றும் தங்க சிம்ம வாகனம்

10 ஆம் நாள், விஜய தசமி அன்று அம்பு எய்தும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த நிகழ்வினை மகர்நோன்பு என அழைப்பர். கேணிக்கரையிலுள்ள மகர்நோன்பு திடலில் இந்நிகழ்ச்சி நடைபெறும். ராமநாதபுரம் மாவட்டத்தில் பிற கோயில்களில் உள்ள தெய்வங்கள் எல்லாம் ஊரைச்சுற்றி அரண்மனை வழியாக வந்து பின் மகர்நோன்பு திடலை சென்றடையும். கடைசியாக அம்பாள் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் தங்க சிம்ம வாகனத்தில் எழுந்தருளி மகிஷாசுரமர்த்தனி திருக்கோலத்தில் புறப்பட்டு மகர்நோன்பு திடலுக்கு சென்றவுடன், அம்பு எய்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

தங்க சிம்ம வாகனத்தில் ராஜேஸ்வரி அம்மன் எழுந்தருளல்

தலைமை குருக்கள் எய்தும் அம்பை பார்க்க ஏராளமான மக்கள் திரளுவர். அம்பு எய்தல் மூலம் நாட்டில் மழை பொழிந்து ஊர் செழிக்கும் என்பது ஐதீகம். குருக்கள் விட்ட அம்பை எடுக்க மக்கள் போட்டிபோடுவர். அந்த அம்பினை எடுத்து வீட்டில் வைத்தால் வீட்டில் பொன் பெருகும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

இதுதவிர, மதுரையின் தல்லாகுளம் பகுதியில் சேதுபதி மன்னர்களுக்கு சொந்தமான கல் மண்டபம் ஒன்றும் உள்ளது. போரில் தோற்ற மைசூர் மன்னர் தங்களுக்குச் சொந்தமான அந்த மண்டபத்தை சேதுபதி மன்னர்களுக்கு கொடுத்துள்ளனர். இம்மண்டபம் அப்பகுதி மக்களால் இன்றும் மைசூர் மண்டபம் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறது, இருப்பினும் தற்போது இம்மண்டபம் சேதுபதி மன்னர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. மதுரையில் நடக்கும் சித்திரைத் திருவிழாவின் போது கள்ளழகர், அழகர் கோயில் திரும்பிச்

செல்வதற்கு முன்பாக இவ்விடத்தில் தான் பூ பல்லாக்கு நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி ! இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆர்வலர் சி. அபிஷேக்

(*) சேதுபதி மன்னர் வரலாறு – கமால் (பக்கம் – 32)
(**) Ramanathapuram Archaeological guide – Nagaswamy (Pg – 32) | பாஸ்கர சேதுபதி – கமால் (பக்கம் – 67) | சேதுபதி மன்னர் வரலாறு – கமால் (பக்கம் எண் – 33)
(•) சேதுபதி மன்னர் செப்பேடுகள் – இராசு (பக்கம் – 366)
சேதுபதி மன்னர் செப்பேடுகள் (கமால்) – செப்பேடு 14
சேதுபதி மன்னர் வரலாறு – கமால் (பக்கம் – 32, 33)
சேதுபதி மன்னர் வரலாறு – கமால் (பக்கம் – 102) | பாஸ்கர சேதுபதி – கமால் (பக்கம் – 49)
விமான கல்வெட்டு – சேதுபதி மன்னர் கல்வெட்டுகள், கமால் (இயல் – 38 | பக்கம் – 180) பாஸ்கர சேதுபதி – கமால் (பக்கம் – 102)
சேதுபதி மன்னர் வரலாறு – கமால் (பக்கம் – 102)
பாஸ்கர சேதுபதி – கமால் (பக்கம் எண் – 73)
சேதுபதி மன்னர் செப்பேடுகள் – இராசு (செப்பேடு 15, பக்கம் – 68)
இராஜேஸ்வரி அம்மன் படம் – தமிழ் செல்வன்
தகவல்கள் – சேதுபதி மன்னர்கள் வரலாறு – எஸ்.எம். கமால்

கடல் கல்வி

புரண்டு வந்து
அள்ளிக் கொண்டு
மணல் வீட்டில்
நுரைக்க நுழைந்து
முழுதாய் முத்தமிட்டு
அழகாய் திரும்பிவிடுகிறாய்
அணைப்பதை மட்டுமல்ல
நேரத்தில்
விலகிச் செல்லவும்
உன்னிடம் தான்
கற்க வேண்டும்

-இரம்யாநடராஜன்

பெண்களால் கட்டப்பட்ட வாட்டர்லூ பாலம்

முனைவர் தேமொழி

கட்டுமானங்களின் தனிச்சிறப்பு என்ற அடிப்படையில் இன்றைய உலகில் பல பாலங்களுக்குப் பற்பல சிறப்புகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றின் பின்னணியிலும் ஒரு கதையும் இருக்கும். அவ்வாறான சிறப்புப் பெற்ற பாலங்களுள் ஒன்றுதான் இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரில் தேம்ஸ் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள வாட்டர்லூ பாலம் *(Waterloo Bridge).* இதன் சிறப்பு, இப்பாலத்தின் கட்டுமானப் பணியில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையோர் *(70* விழுக்காட்டினர் அல்லது சற்றேறக்குறைய *350* பணியாளர்கள்) பெண்கள் என்பதுதான். எனவே, இது பலகாலம் 'லேடீஸ் பிரிட்ஜ்' *(The Ladies Bridge)* என்றே அழைக்கப்பட்டு வந்தது. தேம்ஸ் ஆற்றின் படகோட்டிகளும், பயணிகளும் லேடீஸ் பிரிட்ஜ் என்றே அழைத்தாலும், இது பெண்களால் கட்டப்பட்டப் பாலம் என்ற வாய்மொழிக் கதை மக்களிடையே இருந்தாலும், இதற்கு வரலாற்றுச் சான்றுகள் தரப்படாத காரணத்தால் இது ஒரு கட்டுக்கதை என்ற எண்ணமே மக்களிடையே நிலவி வந்தது. அண்மையில் ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னர் இப்பாலத்தின் கட்டுமானப் பணியில் பெண்கள் பங்கேற்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தப் பாலத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இந்தப் பாலத்தின் தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு. லண்டனின் ஸ்ட்ரான்ட் பகுதியில் 'ஸ்ட்ரான்ட் பிரிட்ஜ்' (the Strand Bridge) என்ற பெயரில் 1810–1817 காலகட்டத்தில் போக்குவரத்துப் பயணிகளிடம் பயன்பாட்டிற்குக் கட்டணம் வசூலிக்கும் திட்டத்துடன் இப்பாலம் கட்டப்பட்டது. ஒன்பது வளைவுகளைக் கொண்டதாக, சற்றொப்ப 2500 அடிகள் நீளம் கொண்டதாக வடிவமைக்கப்பட்ட பாலம் இது. ஆனால் பாலம் கட்டி முடிக்கப்பட்ட பொழுது இங்கிலாந்து நாடு ஃபிரெஞ்ச் நாட்டு ஆட்சியாளர் நெப்போலியனை வாட்டர்லூ போரில் 1815 ஆண்டு வெற்றி பெற்றிருந்தது. எனவே அதைக் கொண்டாடும் இரண்டாம் ஆண்டு விழாக் காலத்தில், 1817இல் பாலம் திறக்கப்பட்டபொழுது வெற்றியைச் சிறப்புச் செய்யப் பாலத்தின் பெயர் வாட்டர்லூ பிரிட்ஜ் என மாற்றப்பட்டது.

காலப்போக்கில் ஆற்றின் நீரோட்டத்தால் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் பாலத்தின் அடிப்பகுதியின் கட்டுமானம் அரிக்கப்பட்டு பாலம் வலுவிழந்து மறுசீரமைப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. கில்பர்ட் ஸ்காட் (Sir Giles Gilbert Scott) என்பவர் புதிய பாலத்தை வடிவமைத்தார். பாலத்தின் கட்டுமானம் தொடங்கிய பொழுது அதன் அருகே இணையாக ஒரு தற்காலிக இரும்புக் கிராதி பாலம் எழுப்பப்பட்டு, வாட்டர்லூ பாலத்தின் பகுதிகளையே மீண்டும் மறுசுழற்சி செய்யும் திட்டத்துடன் பழைய பாலத்தின் கட்டுமானம் தகர்க்கப்பட்டது. இந்நேரத்தில்தான் எதிர்பாராத விதமாக இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஆண்கள் யாவரும் போர்முனைக்கு அழைக்கப் பட்டார்கள். ஆனால், கட்டுமானப் பணிகளும் நடக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

வேறுவழியின்றிப் பெண்களைக் கட்டுமானப் பணிக்கு அமர்த்தினார்கள். இந்த நிலை உலகம் முழுவதுமே போரில் ஈடுபட்ட நாடுகளின் நிலையாக அக்காலத்தில் இருந்தது. வழக்கமான போர்க்காலப் பணியாக மருத்துவச் செவிலியர், தொலைபேசி இணைப்பாளர், அலுவலகச் செயலாளர் போன்ற பணிகளைத் தவிர்த்து ஆண்களின் பணியாகக் கருதப்பட்ட தொழிற்சாலைப் பணியாளர், கட்டுமானப் பணியாளர், ஊர்திகள் இயக்குபவர், விமானம் ஓட்டுபவர் போன்ற புதிய பணிகளில் எல்லாம் பெண்கள் பங்கேற்றனர். அக்காலகட்டத்தில் இங்கிலாந்தில் மட்டும் 25,000 மகளிர் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்ததாகத் தரவுகள் சொல்கிறது. அதாவது, கட்டுமானப் பணியில் மூன்று விழுக்காட்டினர் அளவில் பெண்கள் பங்கேற்று இருந்தனர். இவர்கள் வெல்டிங், கான்கிரீட் கலவை தயாரித்தல் போன்ற வேலைகளையும் செய்தனர். இக்காலத்தில் சராசரியாகக் கட்டுமானப் பணியில் ஒரு விழுக்காட்டினர் மட்டுமே பெண்கள் ஈடுபடுவதுடன் இதை ஒப்பிட்டால், சென்ற நூற்றாண்டில் கட்டுமானப் பணியில் மகளிர் பங்களிப்பின் தீவிரம் புரியும்.

பணியில் அமர்த்தப்பட்ட பட்ட பெண்களுக்கு நீண்ட நேர வேலை, கழிப்பிடம் ஓய்வறை போன்ற வசதிகளும் குறைவு. இருப்பினும், ஆண்களைவிடக் குறையான ஊதியம் என்பது மட்டுமல்ல, போர் முடிந்து ஆண்கள் நாடு திரும்பினால் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு வீடு திரும்ப வேண்டும் என்ற உண்மையையும் அவர்கள் அறிந்தே இருந்தனர். போர் தொடர்ந்தது, ஒரு முறை வாட்டர்லூ பாலமும் நாஜிப் படையின் குண்டு வீச்சிற்கு

உள்ளானது. இருந்தும் கட்டுமானம் தொடர்ந்தது. தொடர வேண்டியது நாட்டின் கௌரவம், அது மக்களுக்கு நம்பிக்கை தருதல் போன்றவற்றுடன், அப்பாலம் போர்க்கால இராணுவத்திற்குத் தேவையானதாகவும் இருந்தது, பெண்கள் தொடர்ந்து பணி புரிந்தனர். இக்கட்டுமானப் பணி 1937 இல் தொடங்கப்பட்டு, இரண்டாம் உலகப் போரினால் பணி சற்றே தொய்வடைந்து 1945 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவடைந்தது. ஆனால், அங்குதான் ஒரு கசப்பான திருப்பம்.

பாலம் மீண்டும் திறக்கப்பட்ட பொழுது விழாவில் பங்கேற்ற இங்கிலாந்தின் துணை முதல்வர் ஹெர்பர்ட் மோரிசன் (Herbert Morrison) அவ்விழாவில் ஆற்றிய உரையில் பாலம் உருவானதில் பெண்களின் பங்களிப்பு பற்றிக் குறிப்பிடப் படவே இல்லை. ஆண்களுக்குப் பாராட்டு கூறப்பட்டது. அவ்வாறே எங்கும் இப்பாலக் கட்டுமானத்தில் மகளிர் பங்கேற்றதற்கான எந்த ஒரு வரலாற்றுக் குறிப்பும் இடம் பெறவில்லை. கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த நிறுவனம் பீட்டர் லிண்ட் அண்ட் கம்பெனி (Peter Lind & Company) அதை மூடிவிட்டு, தங்கள் வர்த்தகத்தையும் முடித்துக் கொண்டு நிறுவனத்தைக் கலைத்தவுடன் அதில் இருந்த ஆவணங்களும் மறைந்து போயின.

மக்கள் வழக்கில் மட்டும் காரணம் தெரியாத வகையில் லேடீஸ் பிரிட்ஜ் என்ற பெயர் உள்ளதைக் கவனித்த வரலாற்று ஆய்வாளர் கிறிஸ்டின் வால் (Christine Wall) அருங்காட்சியகத்தின் (The Archives of The National Science and Media Museum) சேமிப்பில் இருந்த பழைய திரைப்படங்களையும் படங்களையும் தேடிப் பார்த்து, பாலத்தின் பணியில் ஈடுபாடிருந்த சில பெண்களின் படங்களைக் கண்டெடுத்தார். அதில் பெண்கள் வெல்டிங் வேலை செய்யும் படங்கள் கிடைத்தன. அப்பெண்களில் ஒருவரின் பெயர் 'டாரத்தி' (Dorothy) என்றும் அடையாளம் காணப்பட்டது. இதனால் லேடீஸ் பிரிட்ஜ் என்று வாட்டர்லூ பாலம் அழைக்கப்பட்ட காரணமும், அதன் கட்டுமானப் பணியில் பெண்கள் ஈடுபட்டு இருந்ததும் கட்டுக்கதையல்ல உண்மை என்பது நிறுவப்பட்டது. வரலாற்றில் மறைந்து போன, மறைக்கப்பட்ட மகளிரின் பங்களிப்பு மீண்டும் வெளிப்பட்டது இப்பாலத்தின் சிறப்பு.

இதன் வரலாற்றுச் சிறப்பிற்கு மதிப்பளிக்க, பாலத்தில் இங்கிலாந்தின் வரலாற்றுச் சின்னம் பொறிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் பள்ளி பாடத் திட்டங்களில் அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கணிதத் துறையில் பெண்களின் பங்களிப்புகள் *(STEM-courses)* மறைக்கப்படுவதைக் கண்டித்து இங்கிலாந்து பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்த பொழுது, லேடீஸ் பிரிட்ஜ் பாலத்தில் பதாகைகளுடன் எதிர்ப்பைக் காட்டி அடையாளப் போராட்டமாக ஊர்வலம் சென்றனர்.

புதியதாக எழுப்பப்பட்ட வாட்டர்லூ பாலத்திற்கு முன்பிருந்த பழைய பாலத்தை *1810* இல் ஜான் ரென்னி *(John Rennie)* வடிவமைத்திருந்தார். அப்பாலத்தைப் புகழ்பெற்ற பிரெஞ்சு ஓவியர் கிளாட் மோனெ *(claude monet) 1903* இல் வரைந்த வண்ண ஓவியம் இன்று அனைவராலும் பாராட்டப்படும் ஓவியமாக விளங்குகிறது. அதிகாலை மூடுபனியின் இடையே பாலத்தின் தோற்றமானது கனவுலகில் காணும் பாலம் போல அந்த ஓவியம் தோற்றமளிக்கும். அதே பழைய வாட்டர்லூ பாலத்தின் அமைப்பின் அடிப்படையில்தான் தமிழகத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே திருநெல்வேலியையும், பாளையங்கோட்டையையும் இணைக்கும் சுலோச்சனா முதலியார் பாலம் கட்டப்பட்டது.

சான்றாதாரங்கள்:

1. *The original Waterloo Bridge https://www.thehistoryoflondon.co.uk/the-original-waterloo-bridge/*

2. *The story behind the iconic 'Ladies' Bridge' in London https://www.ice.org.uk/news-views-insights/inside-infrastructure/the-story-behind-the-bridge-in-london-known-as-the-ladies-bridge*

துரத்தும் பாம்புகள்

அயர்ந்து தூங்கிய
நாளொன்றின்
நடு இரவில்

பாம்புகள் துரத்துவதைப்
போலொரு கனவு

ஒன்றல்ல இரண்டல்ல
ஒரே நேரத்தில்
ஐந்தாறு பாம்புகள்

கொத்த வந்த
பாம்புகளிடம்
மயிரிழையில்
தப்புகிறேன்.

என் கால் ஒன்றை
சுற்றிக்கொண்ட
அதே கடன்கார
பாம்பு தான்
நெருங்கிய நண்பனின்
கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்தது.

காப்பாற்ற
முயற்சித்த
என் கைகளை
சுற்றி வளைத்தபடி
மற்றொரு பாம்பு

காலையில்
கண்விழித்த போது
கனவில் பார்த்த
நண்பன்

கடன் தொல்லையால்
தூக்கிட்டு தற்கொலை
செய்து கொண்டதாய்
அலைபேசி செய்தி.

அ.ஈடித் ரேனா

ARANYANI

VIJENI

CHAPTER - 7

1439, Aani Maatham, Siddhārthi Aandu
Arava Kingdom
Athikoodoor

Unlike the creepiness it held at night; the forest was beautiful during the day. One could witness the birds chirping, leaves fluttering, and mid-day sun rays peeking through the canopy of tall trees rising from the ground.

The peaceful silence was broken by the crunch of fallen leaves and twigs under Pari's hooves. As hours tarried by, he had crossed the barrier that his grandfather had created in the forest. No one went inside the forest. Even if they did, they did not walk past the mark around two kilometres towards the south of Dhara River. More than compiling to their former king's order, the fear people held in their hearts were overpowering. Especially after Sukamaandran's death, people considered it as a cursed forest.

Baladitya sat quietly on his horse and looked into the distance. How could such a peaceful forest be cursed? A half-brown leaf floated gracefully on the soft breeze and landed upon his hand. The soft susurration of the leaves overhead was as good as his grandfather's words and a day from his memory rose before his eyes.

"Thathaiyya!" The little boy sitting on his shoulder asked, "Why should we not hunt the animals?"

"Hmm... You tell me, why do you want to hunt them?"

"Ah... because they are dangerous, Thathaiyya."

The king of Arava laughed, making the little boy jerk on his shoulder. "Dangerous? No one is dangerous than us, humans."

The boy's small eyes widened. "Are we a danger, Thathaiyya?"

"Yes! We are a danger to everything around us, acquiring things with the mere motive of power, ego, and selfishness. Not like other creatures that do it for sustaining."

The little boy blinked.

He sighed. "So, always have it in mind that the killing of birds and animals is forbidden in this land. Animals are the first children of Aranyani Amman, our holy deity. Will you kill your thamaiyan Devarajan for hunger, threat, or fun?"

“No Thathaiyya, No!” Baladitya shrieked. He could never think of committing the horrendous act on his chubby little brother.

“Hmm, that is how the trees, birds, and animals in this forest too are, they are our family, and we are all one, descended from our mother Aranyani.” Sukamaandran patted a nearby trunk. “They are the living form of god. You should always pay respect to them.”

“Yes, Thathaiyya!” The little boy stooped forward and kissed his grandfather’s forehead. “I will always respect them.”

Sukamaandran kissed the boy’s petite hand, and smiled at the peacock that cried at a distance.

At the age of twenty-two, Baladitya lost his grandfather to god and at that moment, his world collapsed. For hours, he had sat staring at nothingness, the memories playing like a song in his head, repeating itself for what seemed like forever. For two years, he lived with emptiness in his heart, numbness pounding his brain, and salty tears in his eyes.

But, everything changed one day. The day he saw Badhrakumari in his chamber, sobbing into her chest unceasingly. As much as she tried to hold it in, the pain came out from her throat in the form of a silent scream. When he moved closer and stood right next to her, she winced and instinctively rubbed her eyes, trying to hide the grief that engulfed her.

That was when he understood the pain he had been causing for souls around him. Those pearly drops from her eyes made him realise the thoughts, the words, and the promise he had made to the king before his final breath.

“Aditya...” The soft word escaped his frail lips.

“Thathaiyya!” Baladitya cried as he knelt beside his bed. “Please be with me. I cannot even imagine your loss... Please...”

“Shhhuusshh... I am destined to reach her tonight,” he replied, with a shaky tone. “I want you to be strong.” There was guilt in Sukamaandran’s eyes, and a good reason existed behind it. A drop of tear escaped his tender eyes when he thought of his action that had sealed his clan’s fate.

“Please, do not do this Thathaiyya,” Baladitya cried. His strength had begun to fade, and he fought against the pain. “I cannot see you like this.”

“I have done a sin. A sin that has to be answered by our clan.”

“A sin?” Raghavendran enquired, looking at his withering father.

The king’s face had lost its healthy brown colour, fading to an ashy grey. Raghavendran remembered when he was a powerful man. The strong-willed and merciful king, the gentle and caring grandfather, the adoring and passionate husband. Was he a good father to him? He could never answer. Maybe he was not! As he looked upon him, he wondered if his father was more scared of living or dying.

“Yes.” The king pointed his trembling fingers at Baladitya. “I want him to clear the curse for the benefit of our kingdom.” He gestured his grandson to come closer. “Promise me that you will take care of everyone.”

Baladitya’s adolescent face expressed matured concern. “Yes, Thathaiyya. I will. But I want you to be there for us, I want your pres—”

Before he could finish his sentence, the weak hand lost grip and fell to the mattress. Closing his eyes, he desperately attempted to get his grandfather's smiling face in his mind, wanting to recollect something cheerful. He could not take the loss and his heart ached as if it would burst.

He saw his wife, Badhrakumari, silently wiping away her tears in a silk cloth. Beside her was his father, weeping between his hands. He parted his lips, but could not find the right thing to say. Nothing was coming, and he did not have the voice to talk it out.

He twisted the grey moustache on his grandfather's creased face and whispered, "No matter what, you will always live in my heart, Thathaiyya."

"I'm sorry." Raghavendran sniffled. His voice soft, he begged for forgiveness. "I should have taken care of him. I should have gone with him to the forest. I should have stopped him from doing it!" Raghavendran groaned in agony.

But nothing mattered. The king was dead, the bleeding had dried, and his heart had stopped.

That was the last time Baladitya had seen his father, who had set out promising to return with a solution. The solution for the sin that he refused to tell no matter how many times Baladitya asked, the sin that took his grandfather's life, the sin that made his father, Raghavendran, to the verge of fleeing from his own kingdom. Still, he did not lose hope. He knew his father would be there, somewhere, well and fine, and would return to him one day.

The sudden breeze moved his hair, tousling it into buoyant curls. It carried with it, the fragrance of the earth and gave a steady sense of joy. The warmth that had been in the wind a few hours ago had either evaporated into the sky or leached into the earth. He took a deep breath and calmed his mind from the sadness that surrounded him. The aroma of wet soil wafted through the cool air, and it stimulated every single feeling of bliss in him.

His mind stopped.

His soul lightened.

His lips curved.

He instinctively halted his horse and listened keenly. He was right. It was the sound of gushing water.

His face brightened with happiness and he huffed and nudged Pari, struggling to find the source. As the intensity of burble increased, he mounted down from his horse and led him past the trees into the clearing. Even though it was right before his eyes, it took a second or two for the sight to sink in. He had made it. He had found it. It was there!

The frothy water glistened like silver as it cascaded down the rocky precipice and plunged into the lake. The water roared and twisted on its way down, occasionally spraying the water on to his face. Baladitya stepped closer to the edge and crouched down on a rock, cupped the water, and drank. "Sweet..."

He watched the fall, his face aglow, enjoying the thoughts formulating in his mind - the route to bring water to their farms, the resources, workers, and the number of days he would need to complete the work. One thing worried him. Will anyone dare to enter this forest? I will have to convince everyone, especially Badhrani.

"Come here, Aditya!"

When a woman's voice whispered behind his ears, the hairs on the nape of his neck bristled. He held the sword's hilt firmly in his hand, and whirled around.

"Find me!" The voice echoed through the trees.

It was quite unbelievable, shocking really. His heart began to beat faster in the grip of silent panic, and his eyes darted in all the directions like a lightening. Who is it?

"Come, Aditya. Come!"

He stumbled when the voice echoed again. "Who is it? Whoever it is, come in front of me an—"

A peal of menacing laughter resonated around him. The birds scattered, a strong breeze picked up, and the trees began to dance wildly.

"Come here," it said, from his left.

Baladitya ran towards the voice and wandered around the waterfall. "If you dare, come out and talk to me," he screamed.

"I am here!" The voice laughed again.

He turned to the voice, and saw a rock over the cliff with an unusual texture and colour. He moved towards it. A rock in the colour of vermilion? Curiosity whelming, he climbed the bluff and took a step on it. Instantly, his feet turned green, and blackness covered his eyes. The muscular body lost control from its mind, and on its own, the legs strolled towards the edge of the bluff. Eyes staring down at the river, he lifted his leg to let himself fall into the dark river.

Just as he was about to lean ahead, a loud growl echoed through the forest. Behind him came the glow of two crimson eyes, six feet off the ground, letting out another growl. Baladitya turned around and stopped. But the eyes did not. With rapid acceleration and a more bounding motion, it came right in for him. And, in less than two seconds, the king was on his back, lying on a rock, gasping for air.

He steadied himself on the ground. What happened a minute ago? What was it that pushed me? He cleared his eyes with the back of his hands and looked ahead. In front of him was a tawny tiger covered with dark stripes that ran down his body, petering out near the base of his tail. Baladitya stood up, catching his breath. He knew he would not hurt the animal irrespective of the situation.

With every step the tiger took towards him, he moved behind, clutching his antariya firmly. What to do? What to do? His mind kept asking. He looked to his right, down the bluff stood his horse, snorting in fear. Shuushhhh... he wanted to silence him. Go away, run Pari, run. He wanted to scream. He could not lose him too. But, before he could decide his next move, the tiger staggered from side to side. The next instant, it fell on the ground, and another roar filled the air.

The tiger's red eyes continued to stare at him. His orangish-brown body covered in terrible looking gashes had left him bloodied everywhere. He gave another loud groan and stopped moving.

Baladitya crept closer and observed. It was a more substantial gash spanning from the back of his left hip to his mid-stomach area. It was not a deep cut for internal bleeding, but a prime candidate for infections. How was the animal injured? Was it a deliberate cut from a weapon or an unfortunate cut from a tree's branch?

He stepped just a bit closer to assess if he could mend the wound on his own. Before he could fully decide on the matter, the tiger moaned shifting his body with a grunt.

"Just be quiet and stop moving," he whispered.

The tiger examined his face, trying to understand the meaning behind his words. He gently felt around his chest and abdominal area and let out a silent gasp. He had been right. The long gash across his middle was indeed severe and prone to infections. The king wiped the blood with his silk angavastram. When he touched the tender areas around the wound, the tiger began to pant heavily.

From the gold belt around his narrow waist, he took his dagger and wiped the blades clean. "I know you will not like this, but you have to bear with me just for a bit."

He got up and walked away, searching for some dry grass to make a fire. He quickly found a large branch and broke it into small usable pieces. Then he gathered up some leaves and twigs, setting them up in a little pile, and created a gently burning fire. After a few minutes of nurturing the flame, he held the knife to it, waiting until the metal turned a deep red colour.

He came back towards the tiger and placed the burning hot knife on the deep cut. The tiger turned to him and roared before losing consciousness.

It took an hour for Baladitya to clean the wound and stitch it up properly. He had run off to the lake a few times to fetch some water to use along with the hot knife on the infected areas. The tiger had fortunately remained unconscious through the whole ordeal, although he would groan or move around restlessly from time to time. The king was just glad he had not been awake for any more of the procedures. He had probably been through more than enough for the day.

Done with the tending, he looked around for a safe place to keep the tiger for the night, somewhere away from the open clearing he was currently laying in. A few kilometres away from the lake were a bunch of bushes, which looked like a small burrow. With the help of his horse, he gently pulled the tiger into the cramped small space. When he was safely within, Baladitya stooped down and examined his body again, making sure he had not overlooked anything.

Suddenly, a ray of sunlight leaked through the shrubs and hit the back end of the burrow, exposing a shimmer. He moved closer. From where did the light emanate? He pushed through the thin stems of bush and moved towards the light.

Lying on the ground in between the foliage was a chain with a large pendant. He quickly picked it up and gazed at the medallion. Its sheen was a mix of gold and copper-coloured ore. In the middle, two elephants were facing each other and a large white stone in the shape of a moon was embedded between them. A tear from his eyes dropped on it.

Baladitya hastily cleared the bushes. He removed all the branches that covered his path and looked into the distance. His jaw dropped.

It cannot be real. At first, he thought that his eyes were deceiving him. However, after blinking his eyes a few more times, he shuddered.

In front of him was a building, though it was a dilapidated structure, he instinctively recognised it. Clearing the tears that filled his eyes, he whispered, "Finally..."

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்- 7

அய்யாலசோமயாஜுல லலிதா
இந்தியாவின் முதல் பெண் பொறியாளர்

மேனகா நரேஷ், நியூ ஜெர்சி

பல தடைகள், சமூக எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்களைக் கடந்த பின்னர், அய்யாலசோமயாஜுல லலிதா என்பவர் இந்தியாவின் முதல் பெண் பொறியாளர் என்ற பெருமைமிக்கச் சாதனையை அடைந்தார்.

15 வயதில் திருமணமாகி, 18 வயதில் கணவனை இழந்து விதவையாகி விட்ட அவர், வாழ்க்கையின் சவால்களைப் பயப்படாமல் எதிர்கொண்டு, பெற்றோர் ஊக்கத்திற்கும், தனது விடாமுயற்சிக்கும் பலனாக, இந்தச் சாதனையைப் படைத்தார்.

பிறப்பு, ஆரம்பக் கால வாழ்க்கை

1919ம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் தேதி மதராசில் (இன்றைய சென்னை) தெலுங்கு பேசும் குடும்பத்தில் பிறந்தவர் அய்யாலசோமயாஜுல லலிதா. லலிதா, வெறும் 15 வயதில் திருமணம் செய்து கொள்ள நேர்ந்தது. ஆனால், 18வது வயதில், மகள் சியாமளா பிறந்த நான்கு மாதங்களில் கணவரை இழந்து விதவையானார்.

1937ல் ஒரு பெண் விதவையின் நிலை என்பது, இன்று நினைத்தாலும் மனதை சங்கடப்படுத்தும் விதமாகவே இருந்தது. அந்தக் காலத்தில், சமூகக் கட்டுப்பாடுகள் கடுமையாக இருந்தன. விதவைகள் பெரும்பாலும் தனிமையில் தள்ளப்பட்டு, வாழ்க்கையின் இன்பங்களைத் தவிர்த்து வாழும் நிலை இருந்தது. ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த அந்தச் சமூகத்தில், பெண்கள் குரலற்றவர்களாகவே கருதப்பட்டனர்.

இத்தனை சமூகத் தடைகள் இருந்தபோதிலும், லலிதா தனிமையின் இருளில் மூழ்காமல், கல்வியின் வழியாக வெளிச்சத்தைத் தேடினார். பேராசிரியராக இருந்த அவருடைய தந்தை பப்பு சுப்பா ராவ் , இடைநிலைக் கல்வியை முடித்துப் பொறியியல் படிக்க வேண்டும் என்ற லலிதாவின் விருப்பத்தைப் பெரிதும் ஆதரித்தார். லலிதாவின் கனவுகளுக்கு அவரது தந்தை உறுதுணையாக இருந்தார். தனது மகளின் எதிர்காலத்தைத் தாராள மனதுடன் கருதிய தந்தை என்ற பெருமைக்குரியவராகத் திகழ்கிறார் பப்பு சுப்பா ராவ். பள்ளிப் படிப்பை முடித்து

, அவரது தந்தை பேராசிரியராகப் பணியாற்றி வந்த கிண்டி பொறியியல் கல்லூரியில் (College of Engineering, Guindy) சேர்ந்தார் லலிதா . அப்போது அது சாதாரண விஷயமல்ல — பெண் என்பதற்காகவே பொறியியல் கல்விக்குத் தடைகள் இருந்த நேரம் அது. ஆனாலும், லலிதா தனது விடாமுயற்சியால் அந்த எல்லைகளை உடைத்தார்.

கல்லூரிப் படிப்பு :

அந்தக் காலகட்டத்தில் , கிண்டி பொறியியல் கல்லூரி (College of Engineering, Guindy – CEG) என்பது முழுமையாக ஆண்கள் மட்டுமே கல்வி பயிலும் ஒரு கல்லூரியாக இருந்தது. ஆனால், 1940ஆம் ஆண்டு அந்த வரலாற்றை மாற்றியது லலிதா. அவர், அந்தக் கல்லூரியில் சேரும் முதல் பெண் மாணவி என்ற சாதனையைப் படைத்தார்.

லலிதாவின் சேர்க்கை, அந்தக் கல்வி நிறுவனத்தில் ஒரு புதிய யுகத்தைத் தொடங்கியது. அவருக்குப் பிறகு, சில மாதங்களில், கேரளாவைச் சேர்ந்த பி.கே. திரேசியா (ஆசியாவிலேயே ஒரு மாநிலத்தின் தலைமை பொறியாளர் பதவி ஏற்ற முதல் பெண்மணி) மற்றும் லீலா கோஷி ஆகியவர்களும் அந்தக் கல்லூரியில் சேர்ந்தனர். இம்மூவரின் நுழைவு, பெண்கள் பொறியியல் கல்வியில் முன்னேற முடியும் என்பதற்கான ஒரு முக்கியமான தொடக்கமாக அமைந்தது. லலிதா 1943 ஆம் ஆண்டு மின் பொறியியலில்(Electrical engineering) பட்டம் பெற்றார் - இந்தியாவின் முதல் பெண் பொறியியலாளராகவும்ஆனார். அவர் தனது

செய்முறை பயிற்சியை ஜமால்பூர் ரயில்வே பணிமனையில் ஒரு வருட பயிற்சியுடன் முடித்தார், இது ஒரு பெரிய அளவில் பழுது பார்த்து முழுமையாகச் செப்பனிடும் வசதி கொண்ட பணிமனை ஆகும்.

He அல்ல, *She!:* இது சாதாரணத் திருத்தம் அல்ல — இந்திய பொறியியல் கல்வியின் வரலாற்றில் ஒரு மைல்கல். இரண்டாம் உலகப் போர் உச்சத்தில் இருந்த *1943/44* காலகட்டம். அந்த ஆண்டுக் கிண்டி பொறியியல் கல்லூரி *(CEG)* தனது டிகிரி சான்றிதழ்களில், வழக்கம்போல *"He"* என்று எழுதி வெளியிடும் போது, ஒரு மாற்றம் ஏற்பட்டது. காரணம்? லலிதா. அவர் ஒரு பெண். எனவே, டிகிரி சான்றிதழில் *He* என இருந்த இடத்தில் அடித்து, *She* என எழுதப்பட்டது — முதல்முறையாக! லலிதா இத்துடன் நின்றுவிடவில்லை. அதே கல்லூரியில் தனது மாஸ்டர்ஸ் படிப்பையும் தொடர்ந்தார். அதே நேரத்தில், தனது தந்தை பப்பு சுப்பா ராவின் ஆராய்ச்சிப் பணிகளிலும் உதவியாக இருந்தார்.

பொறியியல் படிப்பை முடித்த பிறகு, லலிதா ஈஸ்ட் இந்தியன் ரயில்வேயின் எலெக்ட்ரிக்கல் பிரிவில் ஓராண்டு பயிற்சி பெற்றார். அதன் பிறகு இந்திய அரசின் எலெக்ட்ரிக்கல் கமிஷனரின் அலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக *(Technical Assistant)* பணியாற்றினார்.

*1948*ஆம் ஆண்டு, லலிதா கொல்கத்தாவில் இருந்த பிரிட்டிஷ் நிறுவனமான *AEI (Associated Electrical Industries)* நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். அங்கு, இந்தியாவின் மிகப்பெரிய அணைக்கட்டுமானங்களில் ஒன்றான பக்ரா அணை திட்டத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நிறுவனத்தில் *30* ஆண்டுகள் சேவையாற்றிய அவர், *1977*ம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

பொறியியல் துறையில் வகித்த பொறுப்புகள்:

1953 - மின் பொறியாளர்கள் நிறுவனத்தின் கவுன்சில் *(IEE - Institution of Electrical Engineers)* லண்டன், லலிதாவை அசோசியேட் மெம்பராக நியமித்தது. மேலும், *1966*ம் ஆண்டு இவர் நிரந்தர மெம்பராகவும் ப்ரமோட் செய்யப்பட்டார்.

1964-நியூயார்க்-ல் நடந்த முதல் பெண் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் சர்வதேச மாநாட்டில் *(ICWES)* இந்தியாவில் இருந்து பங்குபெற்ற ஒரே நபர் எனும் பெருமையை லலிதா பெற்றிருந்தார்

1965 - பிரிட்டிஷ் பெண் பொறியாளர் சொசைட்டியில் லலிதா மெம்பராகத் தேர்வு செய்யப்பட்டார். *1967*-காம்பிரிட்ஜ்ல், இரண்டாவது பெண் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் சர்வதேச மாநாட்டின் ஆர்கனைசிங் கம்மிட்டியில் இந்திய பிரதிநிதியாகப் பொறுப்பேற்றிருந்தார். இந்தியா சார்பில் *5* பெண்கள் பங்குபெற செய்தார்.

மரணம்:

தனது கணவரை இழந்த பின்னர், லலிதா மறுமணம் செய்யவில்லை. திருமணத்திற்கு மாற்றாக, மகளின் வளர்ச்சியும், தனது வாழ்க்கைப் பணியும்தான் அவருக்குப் பிரதான நோக்கமாகின. பெரும்பாலான நாட்களில், லலிதா தனது மகள் சியாமளாவை வளர்த்த நெருங்கிய உறவினப் பெண் ஒருவருடன் வசித்து வந்தார்.

1979ஆம் ஆண்டு, *Brain Aneurysm* எனும் மூளை நோயால் பாதிக்கப்பட்ட அவர், தனது 60வது வயதில் உயிரிழந்தார்.

முடிவுரை:

அய்யாலசோமயாஜுல லலிதாவின் வாழ்க்கை என்பது வெறும் ஒரு பெண் பொறியாளரின் பயணமல்ல — அது ஒரு காலக்கட்டத்தின் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக எழுந்த மாபெரும் எழுச்சி . விதவையாகி, தனிமையைத் தேர்ந்தெடுக்காமல் கல்வியையே வாழ்க்கையின் வழியாக எடுத்துக்கொண்ட லலிதா, பல பெண்களுக்கு வழிகாட்டியாய் இருந்தார்.

ஒரு பெண் என்ஜினியராக, தொழில்துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேல் சேவை செய்தவர். குடும்ப வாழ்க்கையும், தொழில்முயற்சியும் சமநிலையில் நடத்திக் காட்டியவர். அதுவும் 20ம் நூற்றாண்டின் மதச்சார்புடைய, பின்தங்கிய சமூகத்தில் — ஒரு பெண் இவ்வாறு சாதிக்க இயன்றதென்றால், அது அவரது தனி முனைப்பும், உறுதியும், அவருக்குப் பின்னால் நின்ற உறவுகளின் ஆதரவுமே காரணம்.

இன்று, இந்தியாவில் ஆயிரக் கணக்கான பெண்கள் பொறியியலில் கல்வி பயின்று, தொழிலில் சாதிக்கக் காரணமான பாதையைத் திறந்தவர் லலிதாதான். அவருடைய வாழ்க்கை, இன்று நாம் கூறும் ''பெண்கள் முன்னேற்றம்'' என்பதற்கான ஒரு அடித்தளக் கதை.

சீனாவின் ஒரே பெண் பேரரசி: வூ ஸெதியான் *(Wu Zetian)* - ஒரு வரலாற்றுப் பார்வை

அண்ணாமலை சுகுமாரன்

சீனாவின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால நீண்ட வரலாற்றில், எண்ணற்ற மாமன்னர்கள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். ஆனால், அந்த நீண்ட பரம்பரையில், 'பேரரசர்' *(Emperor)* என்ற பட்டத்தை அதிகாரப்பூர்வமாகத் தனக்குத்தானே சூட்டிக்கொண்டு, சீனாவை முழு அதிகாரத்துடன் ஆண்ட ஒரே பெண் *வூ ஸெதியான்* மட்டுமே. ஆணாதிக்க மரபுகள் உச்சத்தில் இருந்த ஒரு காலகட்டத்தில், தடைகளைத் தகர்த்து அரியணை ஏறிய அவரது கதை, வரலாற்றின் மிக முக்கியமான அத்தியாயங்களில் ஒன்றாகும்.

யார் இந்த வூ ஸெதியான்?

கி.பி. 624-ல் பிறந்த வூ ஸெதியானின் இயற்பெயர் 'வூ சாவோ'. பேரரசர் தைசோங்கின் அந்தப்புரத்தில் ஒரு சாதாரணப் பெண்ணாக *(concubine)* தனது பயணத்தைத் தொடங்கியவர், தனது மதிநுட்பத்தாலும், அரசியல் சாதுர்யத்தாலும் மெல்ல மெல்ல அதிகாரத்தின் மையத்தை நோக்கி நகர்ந்தார்.

அதிகாரத்தை நோக்கிய பயணம்:

பேரரசர் தைசோங்கின் மறைவுக்குப் பிறகு, அவரது ஒன்பதாவது மகனான காவோசோங்கை மணந்தார்.

* கி.பி. 655-ல், பேரரசர் காவோசோங்கின் பட்டத்து ராணியாக *(Empress Consort)* உயர்ந்தார்

* பேரரசர் காவோசோங் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட பிறகு, வூ ஸெதியான் நாட்டின் நிர்வாகத்தை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கிட்டத்தட்ட பேரரசருக்கு நிகரான அதிகாரத்துடன் 'நிழல் ஆட்சியாளராக' விளங்கினார்

* கணவரின் மரணத்திற்குப் பிறகும், தனது மகன்களைப் பெயரளவில் பேரரசர்களாக அமர்த்தி, பின்னிருந்து முழு நாட்டையும் அவரே ஆண்டு வந்தார்.

* இறுதியாக, கி.பி. 690-ல், 'தாங்' வம்சத்தின் பெயரை 'சௌ' *(Zhou)* என மாற்றி, தனக்குத்தானே பேரரசியாக *(Empress Regnant)* முடிசூட்டிக்கொண்டார். இது சீன வரலாற்றில் அதுவரை கண்டிராத ஒரு புரட்சிகரமான நிகழ்வாகும்.

ஒரு பேரரசியாக அவரது சாதனைகள்

வூ ஸெதியானின் 45 ஆண்டுகால ஆட்சி, சீனாவின் பொற்காலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அவரது தலைமையின் கீழ் சீனா பல உச்சங்களைத் தொட்டது.

பேரரசின் விரிவாக்கம்: சீனாவின் எல்லையை மத்திய ஆசியா வரை விரிவுபடுத்தினார். கொரிய தீபகற்பத்தில் நடந்த போர்களில் முக்கிய பங்கு வகித்து, சீனாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

திறமையான நிர்வாகம்: ஊழலைக் கடுமையாகக் குறைத்தார். அரசு நிர்வாகத்தில் திறமைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தார். பரம்பரை அதிகாரத்தை விட, தகுதியின் அடிப்படையில் அதிகாரிகளைத் தேர்வு செய்யும் 'அரச தேர்வுகளை' *(Imperial Examination)* சீர்திருத்தி, திறமையானவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதை உறுதி செய்தார்.

பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சி: இவரது ஆட்சியில் சீனாவின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் புத்துயிர் பெற்றது. பௌத்தம், தாவோயிசம் போன்ற மதங்களுக்கும், கல்வி மற்றும் இலக்கியத்திற்கும் பெரும் ஆதரவளித்தார்

.**கலை மற்றும் கட்டிடக்கலை:** லாங்மென் குகைகளில் *(Longmen Grottoes)* உள்ள பிரம்மாண்ட சிலைகள் மற்றும் பல முக்கிய கட்டிடக்கலைகளுக்குப் பின்னால் இவரது பங்கு மகத்தானது.

பெயர்களும் அடையாளங்களும்

வூ ஸெதியான் தனது வாழ்வில் பல பெயர்களால் அறியப்பட்டார்.

வூமெய்(WuMei): பேரரசர் தைசோங் அவருக்கு அளித்த பெயர். இதற்கு 'கவர்ச்சியானவள்' என்று பொருள்.

வூ சாவோ (Wu Zhao): *இது அவரது இயற்பெயர். அதிகாரத்திற்கு வந்த பிறகு, தனக்கென ஒரு புதிய சீன எழுத்தையும் உருவாக்கிக்கொண்டார்.*

வூ ஸெதியான் (Wu Zetian): *இது அவர் மறைந்த பிறகு அவருக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர்.*

இவரது வலுவான தலைமை மற்றும் திறமையான நிர்வாகத்தால், இவர் சீனாவின் மிகச்சிறந்த ஆட்சியாளர்களில் ஒருவராக இன்றும் போற்றப்படுகிறார். மரபுகளை உடைத்து, ஒரு பெண்ணால் ஒரு பேரரசை எவ்வளவு சிறப்பாக ஆள முடியும் என்பதற்கு வூ ஸெதியான் ஒரு சான்றாகத் திகழ்கிறார்

வூ ஸெதியானின் இந்த பிரமிக்க வைக்கும் வரலாற்றுப் பயணம் குறித்து உங்கள் கருத்து என்ன? இவரைப் போன்ற வேறு பெண் ஆட்சியாளர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? கருத்துகளில் பகிருங்கள்!

இந்த வரலாற்றை ஒரு வரலாற்றுப் புதினமாக எழுதி ஒரு சூப்பர் நாவலாகவரும் புத்தக கண்காட்சியில் கிடைக்கும் .பாதி நாவல் எழுதி முடிக்கப்பட்டுவிட்டது , இந்தக் கதை, வூ ஸெதியானை ஒரு பெண்ணாக, ஆணாதிக்க சமூகத்தின் மரபுகளை உடைத்தெறிந்த ஒரு புரட்சியாளராக மையப்படுத்துகிறது. இது வெறும் அதிகாரப் போராட்டத்தின் கதை மட்டுமல்ல; இது ஒரு பெண்ணின் சுய அடையாளம், வலிமை மற்றும் விடுதலைக்கான தேடலின் கதை.

அவளது இளமைக்காலம், அவளது கனவுகள், ஒரு பெண்ணாக அவள் சந்தித்த அவமானங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவை கதையின் தொடக்கத்தில் ஆழமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அந்தப்புரம் என்பது அவளுக்கு ஒரு சிறைக்கூடம். அங்கிருந்து அவள் மீள நினைப்பதே முதல் புரட்சி. பேரரசர் காவோசோங்குடனான அவளது காதல், வெறும் அரசியல் நகர்வாக இல்லாமல், இரு ஒத்த மனங்களின் உண்மையான அன்பாகவும், புரிதலாகவும் சித்திரிக்கப்படுகிறது.

அவள் அதிகாரத்திற்கு வருவதை எதிர்க்கும் சமூகம், 'ஒரு பெண் நாடாளலாமா?' என்று கேட்கும் கேள்விகளுக்கும், அவதூறுகளுக்கும் எதிராக அவள் நடத்தும் உணர்ச்சிப் போராட்டமே கதையின் அடிநாதம். ஒருபுறம் தாய்மை, மறுபுறம் நாட்டை ஆளும் கடமை – இந்த இரண்டுக்கும் இடையே அவள் படும் தவிப்புகள், எடுக்கும் கடினமான முடிவுகள் அவளை ஒரு சரித்திர நாயகியாக உயர்த்துகின்றன. பௌத்த மதத்தின் ஆதரவையும், 'வானத்தின் கட்டளை' (Mandate of Heaven) தனக்கு இருப்பதாக அவள் அறிவிப்பதையும், தனக்கென ஒரு புதிய சீன எழுத்தை உருவாக்குவதையும் ஒரு பெண்ணின் விடுதலையை நோக்கிய பயணத்தின் குறியீடுகளாக இந்தக் கதை சித்தரிக்கிறது. அவள் அரியணை ஏறியபோது, அது வூவின் வெற்றி மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட சீனப் பெண்களின் குரலாகவும் ஒலிக்கிறது.

விரைவில் முழு விபரம் வரும் !

எம். எஸ். சுப்பு லட்சுமி.....

''ரகுபதிராகவ ராஜாராம்' எனும் பாடல் உலகத் தமிழர்களுக்குப் பிடித்த பாடல். மகாத்மா காந்திக்கும் பிடித்த பாடல்.

'தன்னை இழந்து பாடுகிறார்' என்று எம்.எஸ்.சுப்புலட்சுமியை மனம் விட்டுப் பாராட்டினார் காந்தி. இந்திய வானொலியில் மகாத்மா காந்திஜியின் அஞ்சலிக்கு இன்றைக்கும் இந்தப் பாடல்தான் ஒலிக்கிறது.

திருப்பதி திருமலையில் தினமும் கோவில் நடை திறக்கும் போது பாடப் படும் வெங்கடேச சுப்ரபாதம் எம். எஸ். சுப்புலட்சுமி பாடிய பாடலே.

"இந்தியா இந்தத் தலைமுறையில் ஒரு மாபெரும் கலைஞரை உருவாக்கி உள்ளது என்பதில் நீங்கள் பெருமிதம் கொள்ளலாம்" என ஒருவரை பார்த்து சரோஜினி நாயுடு ஒரு முறை கூறினார். ஆம். அவர்தான் கர்நாடக சங்கீத மேதை எம்.எஸ். சுப்புலட்சுமி

எம். எஸ். சுப்புலட்சுமி யின் முழுப்பெயர் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி தமிழ்நாட்டின் மதுரையில் பிறந்தார். மிக இளம் வயதிலேயே இசை கற்றுக் கொள்ளத் தொடங்கிய இவர் தனது பத்தாவது வயதில் முதல் இசைப் பதிப்பை வெளியிட்டார். தனது 17-வது வயதில் தன் முதல் அரங்கேற்றதை நிகழ்த்தினார். இவர் பல மொழிகளில் பாடியுள்ளார். சிறந்த வீணைக் கலைஞராகவும் திகழ்ந்த இவர் இசை உலகில் எம்.எஸ். என்று அன்புடன் அழைக்கப் பட்டார்.

குடும்பத்தார் அழைத்த பெயர் குஞ்சம்மாள். அவரது முதல் குரு அவருடைய தாயார் சண்முகவடிவு தான்.

சுப்புலட்சுமி திரைப்படங்களிலும் நடித்துள்ளார். 1945-ல் இவர் நடித்து 'பக்த மீரா' படம் மிகவும் புகழ் பெற்றது.

விடுதலைப் போராட்ட வீரரான கல்கி சதாசிவம் 1940 ஆம் ஆண்டு சுப்புலட்சுமியை மணந்தார். இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. இசை வேளாளர் குலத்தில் பிறந்த இவர் திருமனத்துக்குப் பின்பு மடிசார் மாமியாக மாறிவிட்டார்

1941ம் ஆண்டு சாவித்திரி என்ற படத்தில் எம். எஸ். சுப்புலட்சுமி நாரதர் வேடத்தில் நடித்தார். அதில் அவருக்குக் கிடைத்த ஊதியம் 50 ஆயிரம் ரூபாய். அதை மூலதனமாகக் கொண்டு தான் 'கல்கி' பத்திரிகை தொடங்கப் பட்டது. பத்திரிகையின் அப்போதைய விலை இரண்டு அணா.

ராஜாஜி, டி.கே. சிதம்பரநாத முதலியார், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார். கல்கி கிருஷ்ணமூர்த்தி, ஆர்.கே. சண்முகம் செட்டியார், அறிஞர் அண்ணா போன்றவர்களால் தொடங்கப் பட்ட தமிழிசை இயக்கத்திற்கு பக்க பலமாக நின்றவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. பெண்ணிய மனுஷி சரோஜினி நாயுடு அவர்களுடன் மகாகவி பாரதியார், சுத்தானந்த பாரதியார், வள்ளலார், இராமலிங்க அடிகளார், பாபநாசம் சிவன் போன்ற மேதைகளின் தமிழ்ப் பாடல்களை மேடை தோறும் பாடி ரசிகர்கள் மனதில் பதிய வைத்த பெருமை எம்.எஸ். சுப்புலட்சுமியையே சாரும்.

இந்தியில் வெளிவந்த மீரா திரைப் படத்தைப் பார்த்த பிரதமர் நேரு "இந்த இசையரசிக்கு முன்னால் நான் யார்? வெறும் பிரதமர்!" என எம். எஸ். சுப்புலட்சுமியைப் பாராட்டிப் புகழ்ந்தார்.அந்தப் படத்தில் எம்.எஸ். சுப்புலட்சுமி பாடிய 'காற்றினிலே வரும் கீதம்' எனும் பாடல் இன்றைக்கும் மிகவும் பிரபலமானது.

அவ்வளவு பிரபலம், புகழ், சம்பாத்தியம் இருந்து. சுப்புலட்சுமி சாதாரண மனுஷியாகவே வாழ்ந்தார். பல நூற்றுக்கணக்கான கச்சேரிகளின் மூலம் அவருக்கு கிடைத்த செல்வத்தை எல்லாம் தானமாக நற்பணிகளுக்கும், சமூக சேவைக்கும் கொடுத்த ஒரே இசைக் கலைஞர் எம். எஸ். சுப்புலட்சுமிதான்.

இதற்காகவே இவருக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் மாக்சேசே விருது வழங்கப் பட்டது.

இவர் உலகின் பல நாடுகளுக்குப் பண்பாட்டுத் தூதுவராகச் சென்று பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

1966 அக்டோபரில் ஐ.நா. சபையில் இவர் தன் அரங்கேற்றத்தை நிகழ்த்தியுள்ளார்.

1997-ல் அவரது கணவரின் இறப்புக்குப் பிறகு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை.

1998 ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி இயற்கை எய்தினார்.

புதிய விதி

குடிகாரர்கள் தான்
ஒருவர் மீது ஒருவர் விழுந்து
சண்டையிட்டு
அடித்துக் கொள்வார்கள்
என்பது விதி
ஆனால்,
காதலர்கள்
குடிகாரர்களை விட மோசம்
காதல் என்றால் என்ன என்று
நான் உங்களுக்குச் சொல்கிறேன்
அது தங்கச்சுரங்கத்திற்குள் புகுவது!
அது என்ன தங்கம்?
காதலன் ஒரு மன்னாதி மன்னன்.
அவன் சாவுக்கு அஞ்சியதில்லை!
பொன்முடிக்கு ஆசைப்பட்டதில்லை!
பக்கீர்
தனது ஒட்டுப்போட்ட அங்கிக்குள்
நல்முத்தை ஒளித்து வைத்துள்ளார்.
அவர் எதற்கு
வீடு வீடாக போய்ப்
பிச்சை எடுக்க வேண்டும்?
நேற்றிரவு
அந்த நிலவு வந்தது
குடித்துவிட்டு
தெருக்களில்
துணிகளை நழுவ விட்டது.
என் இதயத்திடம் கூறினேன்
நேசக்கிளியுடன் இனிப்பை ருசிக்க
தோட்டத்தில்
இரவுச் சிட்டுடன் இணைகின்ற
அருமையான தருணம் வந்துவிட்டது
என் இதயம் நொறுங்கி விட்டது
நான் விழுந்து விட்டேன்
வேறெங்கே?
உன் பாதையில் தான்
நான் குடித்துவிட்டு
உன் கிண்ணத்தையும் உடைத்து
விட்டேன்
என் பொற்சிலையே!
நான் குடித்து இருப்பதால்
என்னைத் துன்புறுத்தாதே
என் கைகளைப் பிடித்துக் கொள்
(என்னை மணந்து கொள்)
புதிய விதி
புதிய சட்டம் பிறந்துள்ளது
எல்லா கண்ணாடிகளையும்
நொறுக்கு
கண்ணாடி ஊதுபவரின் முன்னால்
கொண்டு போய்க் கொட்டு

மூலம் - ஜலாலுதீன் ரூமி
தமிழில். செ. ராஜேஸ்வரி

அமெரிக்கத் தமிழப் பெண் ஆளுமைகள்-11

நளினி சுந்தரராஜன்,

விஸ்கான்சின், வடஅமெரிக்கா

மேனகா நரேஷ்

கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பாடகர், கணினிப் பொறியாளர் எனப் பன்முகத் திறமை கொண்டவர் நளினி சுந்தரராஜன். அவரை "சக்தி" இதழுக்காக பேட்டி எடுப்பதில் மிக்க மகிழ்ச்சி!

1.வணக்கம் நளினி! தங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?

நான் கவிஞர் நளினி சுந்தரராஜன். வட அமெரிக்காவில் விஸ்கான்சின் மாகாணத்தில் வசிக்கின்றேன். கணிப்பொறித் துறையில் பணியாற்றிய அனுபவம். தற்பொழுது இல்லத்தரசியாக முழு நேரப் பணி, கூடுதலாக பங்குச்சந்தை முதலீடுகள் ஆர்வத்தின் பெயரில் செய்து வருகிறேன்.

2.உங்கள் எழுத்து பயணம் எப்படித் தொடங்கியது*?*

பள்ளி நாட்கள் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவது போட்டிகளில் பங்கேற்பது விருப்பம். என் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியை திருமிகு.பிலோமினாள் அவர்கள் அளித்த ஊக்கத்தினால் நிறைய எழுத ஆரம்பித்தேன். ஒரு சில கவிதைகள் இதழ்களில் வெளிவந்தன. கல்லூரி நாட்களிலும் கவிதை ஆர்வம் தொடர்ந்தது. பின்பு கணிப்பொறித் துறையில் வேலை, அமெரிக்காபுலம்பெயர்வு, குடும்ப வாழ்க்கை என்று கால ஓட்டத்தில் எழுதுவது மறந்து போனது. மீண்டும் 2015 முதல் முகநூலில் எழுத ஆரம்பித்தேன். தென்றல், வல்லினச் சிறகுகள் போன்ற மின்னிதழ்களில் என் கவிதைகள் வரத் தொடங்கின. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் ஆண்டு விழாக்களில் கவிதைப் போட்டிகள், கவியரங்கங்கள், ஐந்தாம் உலகத் திருக்குறள் மாநாட்டில் கவிதை வாசிப்பு என்று எனக்கான தளங்கள் விரிவடையத் தொடங்கின.

3.பெண் எழுத்தாளராக நீங்கள் சந்தித்த முக்கிய சவால்கள் என்ன?

கவிதைக் கரு உதித்தவுடன் அமைதியாய் ஓரிடத்தில் அமர்ந்து சொற்கள் கோர்த்து எழுதத் தோன்றும் ஆனால் அந்நேரம் குக்கரின் மூன்றாவது விசிலை எண்ணியபடி கடுகு வெடிக்க விடும் வேலையும் இருக்கும். கவிதை மறவாதிருக்க கிடைக்கும் கணப் பொழுதில் கைப்பேசியில் குறிப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

4.உங்கள் படைப்புகளில் பெண்கள் தொடர்பான விஷயங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன?

எனக்கு சங்க இலக்கியங்களில் அகத்திணைப் பாடல்கள் விருப்பம். குறிப்பாக குறுந்தொகைப் பாடல்கள். அதில் தலைவி கூற்றாக வரும் பாடல்களில் தன் காதலை விவரிக்கும் அழகு, கற்பனை, உவமை, தலைவன் புகழ் வர்ணனை, மற்றும் பிரிவாற்றாமை, ஏக்கம், சோகம் போன்ற மென் உணர்வுகள் என்னை வெகுவாக ஈர்த்தன. அது போலவே காதலை கவிநயமாகச் சொல்லும் திரையிசைப் பாடல்கள் பிடிக்கும். குறிப்பாக பாடலாசிரியர் கவிஞர் தாமரையின் வரிகள். பெண் மனதின் காதலை அப்படியே பிரதிபிம்பம் எடுத்தது போன்று உவமை அழகியலோடு உரைத்துள்ளபடியால்.

ரசித்த ஒரு பாடல் வரி,

சந்தியாக் கால மேகங்கள்
என் வானில் ஊர்வலம் போகுதே...
பார்க்கையில் ஏனோ நெஞ்சிலே
உன் நடையின் சாயலே தோணுதே...

பெண் தன் காதல் உணர்வை அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்தபடி சொல்லும் கவிதைகள் பல எழுதியிருக்கிறேன். இன்னும் நூலாகத் தொகுக்கவில்லை.

5.குழந்தைப் பருவ வாசிப்பு அல்லது அனுபவங்கள் உங்கள் எழுத்து மீது என்ன தாக்கம் செலுத்தின?

சிறு வயதில் எனக்கு கவிதை வாசிக்க கிடைத்தது வாரமலர் பத்திரிகையின் கவிதைப் பக்கம். ஆழமான கருத்துகளை, தேர்தெடுத்த சொற்களைக் கொண்டு யார் எழுதினாலும் விரும்பி வாசிப்பேன். நிலாவைப் பற்றி நான் எழுதிய கவிதை ஒன்று முதன் முறையாக சிறுவர் மலர் இதழில் வெளியானது மகிழ்வான தருணம். இயற்கையும், சமுதாய சிந்தனையும் அப்போது என் பாடு பொருட்களாக இருந்தன. குறிப்பாக சுற்றுச்சூழல் மாசு மற்றும் மனிதன் விளைவிக்கும் சீர்கேடுகள் மனதை பாதித்ததால் அது பற்றி தோன்றுவதெல்லாம் குறிப்பேட்டில் வரிகளாக புலம்பி வைத்திருப்பேன்.

6.இன்றைய சமூகத்தில் பெண் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் இடம் குறித்து உங்கள் பார்வை என்ன?

முந்தைய காலங்களை விட இப்பொழுது பெண் எழுத்தாளர்கள் பலர் புகழ் பெற்று வருகின்றனர். அச்சு ஊடகத்தை தாண்டி சமூக ஊடகங்கள், வலைத்தளங்கள், வலைப்பூக்கள் என பல்வேறு தளங்கள் எழுதும் வாய்ப்பு மற்றும் வாசகர்களை விரைவில் சென்றடைய

கலமாக இருக்கின்றன. கருத்துச் சுதந்திரம் என்று வருகையில் இன்னமுமே சில சர்ச்சைக்குரிய கருத்துகள் பெண் எழுத்தாளர்கள் சொல்லுகையில் கூடுதல் விமர்சனங்கள் வரத்தான் செய்கின்றன.

7.நீங்கள் இதுவரை எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றி கூறுங்கள் ?

முதல் நூல் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் எழுதிய 'முகத்தில் முகம்' என்ற கவிதை நூலின் எனது ஆங்கில மொழியாக்கம் ' *Face In Face'*.

'திக்குகளின் புதல்வியர்', 'உறைபனி உதிர்த்த இறகு', 'வலசை சென்ற வண்ண மயில்கள்' ஆகிய கவிதைத் தொகுப்பு நூல்களில் என் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. 'காற்றின் கால் தடங்கள்' அடுத்து வரவிருக்கும் நூல்.

8.பிற எழுத்தாளர்கள் உங்கள் எழுத்தை எப்படி ஏற்றுக்கொள்கிறார்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

சக கவிஞர்கள் பலர் பாராட்டுகளும், ஊக்கமும் தொடர்ந்து அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். குறிப்பாக அமெரிக்கக் கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி அவர்கள் கவிப் பயணத்தில் தன்னுடன் இணைந்து பயணம் செய்ய தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறார். அவரிடமிருந்து தன்முனைக் கவிதைகள் என்ற புதிய பரிமாணத்தக் கற்றுக் கொண்டுள்ளேன்.

9.நீங்கள் பெற்ற விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

விருது என்று எதுவும் பெரிதாய் வாங்கவில்லை. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க கவிதைப் போட்டிகளில் வென்றதற்கான பரிசுகள் மற்றும் கவியரங்களில் பங்கேற்றதிற்கு அங்கீகார ஷீல்டுகள் மட்டுமே.

10.எழுத்து தவிர வேறென்ன துறைகளில் ஆர்வம் இருக்கிறது?

எனக்கு பாடல்கள் கேட்பதும் பாடுவதும் மிகவும் பிடிக்கும். நாள் முழுவதும் என்னைச் சுற்றி இசை நிறைந்து கொண்டே இருக்க வேண்டும். எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் மனமும், வாயும் ஏதாவது ஒரு பாடலை ஹம் பண்ணியபடி இருக்கும். எண்பது, தொண்ணூறுகளின் திரையிசை குறிப்பாக எஸ்பிபி, எஸ் ஜானகி அவர்களின் பாடல்கள் கொள்ளைப் பிரியம். ஓரிரு வருடமாக *smule* தளத்தில் பொழுதுபோக்காக பாடி வருகிறேன்.

நளினியின் தமிழப்பணி தொடர "சக்தி" இதழ் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

- பேட்டியாளர்
மேனகா நரேஷ்

தசரதனின் தாய் இந்துமதி

இரா. சைலஜா சக்தி
கோவில்பட்டி

தன் வாழ்வில் ஒரே ஒரு பெண்ணுக்கு மட்டும் இடமளிப்பவன், மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காதவன் ஏக பத்தினி விரதன் என்று அழைக்கப்படுகிறான். இத்தகைய ஆண்கள் மனைவி மறைந்தாலும், பிரிந்தாலும் வேறு திருமணம் செய்வதில்லை. இறுதிவரை மனைவி என்றால் அவள் ஒருத்தி மட்டுமே என்ற வைராக்கியத்துடன் வாழ்பவர்கள்.

ஒரு ஆண் இந்த விரதத்தை கடைபிடிக்கும்போது அவனை இந்த உலகம் கொண்டாடுகிறது. ஆனால் காலம் காலமாக நமது பெண்கள் இந்த விரதத்தைத்தான் கடைப்பிடித்து வருகிறார்கள். கணவன் மறைந்தாலும், பிரிந்தாலும் வேறு திருமணம் செய்யாமல் குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்து, மறைந்து போனார்கள். ஆனால் அவர்களின் தியாகத்தை மதித்து ஏக கணவன் விரதத்தைக் கடைபிடிப்பவர்கள் என்று உலகம் கொண்டாடியதில்லை. மாறாக ஐந்து ஆண்களைத் திருமணம் செய்த பாஞ்சாலிதான் யுகங்கள் கடந்தும் பேசுபொருள் ஆகிறாள்.

முன்பு அரசியல் காரணங்களுக்காகவும், சந்ததியினரின் நன்மைக்காகவும், ஆண்கள் குறிப்பாக மன்னர்கள் பல திருமணங்களைச் செய்ய வேண்டியிருந்தது. பெண்களுக்கு அதற்கான அவசியம் அப்போது இல்லை. அத்தகைய சூழலில், ஒரு பெண் ஐந்து கணவர்களைக் கொண்டிருந்தாள் என்று எழுதுவது கூட ஒரு புரட்சிதான். லட்சோப லட்சம் பெண்கள் சர்வ சாதாரணமாகக் கடைபிடித்த ஒரு கொள்கையை ஒரு ஆண் கடைபிடிக்கும்போது அவன் தலைவனாக, இலக்கிய நாயகனாகக் கொண்டாடப்படுகிறான். எவருமே செய்யாத ஒரு விஷயத்தை ஒரு பெண் செய்தால் அவளும் புகழ் பெற்றவள் ஆகிவிடுகிறாள்.

திருமண விஷயத்தில் எதிரெதிர் நிலைகளில் உள்ள இராமனும், பாஞ்சாலியும் பல நூற்றாண்டுகளைக் கடந்தும் புகழ்பெற்ற இலக்கிய கதாபாத்திரங்களாக நம் முன் நிற்கிறார்கள். ராமாயணத்தில் ராமனையும், மகாபாரதத்தில் பாஞ்சாலியையும் அறியாதவர்கள் இருக்க முடியாது.

ராமனின் அடையாளங்களில் முதன்மையானது, அவன் ஏகபத்தினி விரதன் என்பது. ஆனால் மூன்று மனைவியரைக் கொண்ட தசரதனின் மகன் ராமன் எவ்வாறு ஏகபத்தினி

விரதனாக வாழ்ந்தான் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ராமனின் முன்னோர்களின் வம்சமான இஷ்வாகு வம்சத்தின் வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால் அங்கு ஒரு அழகான காதல் கதை இருக்கிறது.

த்ருணபிந்து என்ற முனிவர் வனத்தில் கடுமையாகத் தவம் செய்து கொண்டிருந்தார். அவரது தவத்தைக் கலைக்க இந்திரன் ஹரிணி என்ற தேவலோக நடன மங்கையை பூமிக்கு அனுப்பினான். ஹரிணி ஆடிப்பாடி முனிவரின் தவத்தைக் கலைத்தாள். கண் திறந்த த்ருணபிந்து முனிவர் சினமடைந்து ஹரிணியை நோக்கி "நீ தேவலோகத்தை விட்டு நீங்கிப் பூமியில் பிறந்து இன்ப துன்பங்களை அனுபவித்து அல்லல்படுவாய்" என்று சபித்தார். ஹரிணி அவர் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்பு கோரினாள். ''தேவலோகத்தில் இருந்து மலர் மாலை ஒன்று உன் கழுத்தில் விழும். அப்போது உன் சாபம் நீங்கும். மீண்டும் நீ தேவலோகத்தைச் சென்றடைவாய்'' என்று சாப விமோசனம் அளித்தார்.

அதன் பிறகு ஹரிணி பூமியில் விதர்ப்ப தேசத்து மன்னனின் மகளாகப் பிறந்தாள். இந்துமதி என்ற பெயரில் இளவரசியாக வளர்ந்தாள். இந்துமதி திருமணப் பருவத்தை அடைந்தபோது அவளின் தந்தை சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தார். அதில் பல பேரரசர்களும், சிற்றரசர்களும் கலந்து கொண்டனர். அவர்களுக்கு நடுவே அயோத்தியை ஆட்சி செய்த அஜன் என்ற மன்னன் அமர்ந்திருந்தான். அஜன் இஷ்வாகு வம்சத்தின் புகழ்பெற்ற அரசனாகத் திகழ்ந்தான். அஜனின் அழகில் மயங்கிய இந்துமதி அவன் கழுத்தில் மாலையிட்டாள். இந்துமதியும் அஜனும் அன்பிலும், காதலிலும் இணைந்து கருத்தொருமித்த தம்பதிகளாக வாழ்ந்தனர். அஜன் அயோத்தியைச் சிறப்பாக ஆட்சி செய்தான். இந்துமதி மீது பேரன்பு கொண்டிருந்தான். இந்துமதி அஜனுக்கு உற்ற தோழியாக விளங்கினாள். அவர்களின் அன்பிற்கு அடையாளமாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தைக்கு ஒன்றரை வயதாகும் போது இருவரும் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தனர். அப்போது வானில் நாரதர் சென்று கொண்டிருந்தார். அவரின்

வீணையைச் சுற்றியிருந்த மலர் மாலை நழுவி கீழே விழுந்தது. வானில் இருந்து விழுந்த மாலை மெதுவாக கீழிறங்கி பூமியை நோக்கி வந்தது. பூமியில் நந்தவனத்தில் அஜனின் கையைப் பற்றி நடந்து கொண்டிருந்த இந்துமதியின் கழுத்தில் அந்த மாலை விழுந்தது. மறுகணம் அவளின் உயிர் பிரிந்தது. காதல் மனைவியின் உயிர் பிரிவதைக் கண்ணெதிரே கண்ட அஜன் மன அழுத்தத்திற்கு ஆளானான். இந்துமதியின் பிரிவைத் தாங்க முடியாமல் இதய நோயாளியானான். எட்டு ஆண்டுகள் கழித்து மகன் வளர்ந்ததும் ஆட்சிப் பொறுப்பை மகனிடம் ஒப்படைத்துவிட்டு கங்கை நதியும், சரயு நதியும் ஒன்று சேரும் இடத்தில் இறங்கித் தன் இன்னுயிரை நீத்தான்.

இஷ்வாகு வம்சத்தின் மாபெரும் வீரன், போரில் பல மன்னர்களைத் தோற்கடித்தவன், பல்லாயிரக் கணக்கான வீரர்களைச் சாய்த்தவன், தன் மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் உயிரைப் போக்கினான் என்பது ஆச்சரியமே. மரணத்தைச் துச்சமென மதித்து போர்க்களம் புகுந்த அஜன், வாழ்வைத் துச்சமென நினைத்து தன் மனைவிக்காக உயிர் துறக்கிறான் எனில் இந்துமதி அஜனுக்கு ஒப்பற்ற காதலை வழங்கியிருக்கிறாள் என்று பொருள்.

இந்துமதியின் வாழ்வில் நிகழ்ந்தவை எதுவும் அவள் விருப்பப்படி நிகழவில்லை.



இந்திரனின் ஆணையை நிறைவேற்றியதால் அவள் சாபம் பெற்றாள். த்ருணபிந்து முனிவரின் கூற்றுப்படி சாப விமோசனமும் பெற்றாள். அவளுடைய வாழ்வின் நிகழ்வுகள் எதுவும் அவள் கைகளில் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு நடப்பதை அப்படியே ஏற்றுக் கொண்டாள். இன்ப துன்பங்களை சமமாக பாவிக்கும் மனப்பக்குவத்துடன் இருந்தாள். விரைவிலேயேத் தன் கணவனையும், பிஞ்சுக் குழந்தையையும் பிரிந்து விடுவோம் என்று அறிந்தே வாழ்ந்தாள். அஜனைப் பிரிய வேண்டும் என்பதை நினைத்துக் கலங்கினாள். வேறு வழியில்லை என்பதால் அவனுடன் வாழும் காலம்வரை ஈடு இணை இல்லாத அன்பை வாரி வழங்கினாள்.

இளம் வயதிலேயே இத்துணை பக்குவத்துடன் வாழ்ந்த இந்துமதி பெற்றெடுத்த குழந்தைதான் தசரதன். மனைவிக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த அஜன் தசரதனின் தந்தை ஆவான்.

தசரதனுக்கு மூன்று மனைவிகள். ஆனால் அவரின் தந்தை அஜன் ஏக பத்தினி விரதன். ராமன் திருமண விஷயத்தில் தன் தந்தையைப்போல் இல்லாமல் பாட்டனைப்போல் ஏக பத்தினி விரதத்தை கடைபிடித்தான். இளம் வயதிலேயே பக்குவமும் ஞானமும் நிரம்பிய இந்துமதியே ராமனின் பாட்டி ஆவாள். காவிய நாயகனான ராமனின் ஒழுக்கத்திற்கு பாட்டன் அஜனும், ஞானத்திற்கு பாட்டி இந்துமதியுமே காரணமாவர்.

புதிய வெளியீடுகள்








சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்வரிசை-2
பெண் தெய்வ வழிபாடு
["ஆன்மீகம்" இதழில் வெளிவந்த கட்டுரைகள்]
முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.
சந்திரோதயம் பதிப்பகம் மதுரை– 625 018.
Mobile: 7010997639

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை – 6
முன்னோர் வழிபாடு
(கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)
(The worship of Ancestors, Sun, Serpent , Timer)
முனைவர் செ. இராஜேஸ்வரி
சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை 18.
போன் 7010997639